தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் : 1909 டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

மதராஸ் ஸோல் ஏஜெண்டுகள்:—

சுராஜ் ஏஜன்ஸீஸ்,
157 லாயிட்ஸ் ரோட்,
மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்க்கண்டுள்ள விலைக்குகிடைக்கும்:—

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை.

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை.

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை. தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்.

சுதேசமித்திரன் புத்தகசாலை,

மவுண்ட் ரோடு, சென்னை.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்களுபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில்
(ரிஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப்போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும். ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர் இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள். எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது. எப்பொழுதும் உபயோகியுங்கள்

ஆட்டோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனை. நீடித்த நறுமணம். தபால் சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.

Sole Agent ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
265, Jamma Musjid P. O. Box 2085, Bombay 2.



வாழிய செந்தமிழ்

சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்

Vol XXI] விக்ருதிஸு ஆவணிமீ 4வ ★ 1950-ஸு ஆகஸ்ட்மீ 20வ No. 29

பொருளடக்கம்

★

		பக்கம்
ஆப்த நண்பர்கள்	ம. ரா.	5
எச்சரிக்கை	தில்லைவாசி	10
கலா மண்டபம்		15
உண்டியல் பணம்	ஜி. கார்த்திகேயன்	19
இராமானுச நூற்றந்தாதி (ஆயக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்கார்)		22
நினைவிருக்குமா ?	லீதா	23
சரியான பாடம்	ஜி. எஸ். மணி	26
ஹிந்திப் பாடங்கள்	பண்டித்ஜீ	30
வாழ்க்கைச் சுழல் (தொடர் கதை)	இந்து	34
தில்லைவாசி		38
அலமேலுவின் கனவு (ஸ்ரீமதி செல்லம் டி. திருநாராயணன்)		39
குடும்ப வைத்தியம்	குச்சாமாமா	43
வித்துச் செல்வன்	ரா. ஸ்ரீ.	46
சிறுவர் பகுதி	எஸ். ரங்கராஜன்	47
பழங்கள்	நாராயணய்யா	53
குழந்தைகள் பெருமை (ஸ்ரீமதி கோமதி சுப்ரமண்யம்)		55
நவரஸ நந்தவனம்	கனல்	59
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	63

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன அனைத்தும் கற்பனையே, அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

மேலும் ஒரு வெட்டு!

அரிசி ரேஷனை மேலும் குறைக்க சர்க்கார் முடிவு செய்து அதை வெட்டியும் விட்டனர். சென்ற மாதந்தான் எட்டு அவுன்ஸ் ஏழு அவுன்ஸாயிற்று. இவ்வாறு அரிசி ஆறு அவுன்ஸாகச் சுருங்கியது மக்கள் உள்ளத்தைக் குலுக்கும். இதைத் தவிர வேறு வழியில்லையென்று முதல் மந்திரி கூறுகிறார். இன்று உள்ள நிலைமையைக் கொண்டு பார்க்கையில் அவர் சொல்வது முற்றிலும் உண்மைதான். ஆனால் நிலைமை இந்த அளவு நெருக்கடியாகியிருப்பதை அதிகாரிகள் முன் யோசனையுடன் ஓரளவேனும் தவிர்த்திருக்க முடியாதா என்ற சிந்தனையை யாரும் ஒதுக்கித் தள்ளிவிடுவதற்கில்லை. "சென்னை சர்க்கார் பேரிலும் குற்றமில்லை; மத்திய அதிகாரிகள் மீதும் புகார் சொல்லமுடியாது" என்பது முதன் மந்திரியின் வாதம். அவ்விரு தரப்பினரும் தாங்கள் செய்திருக்கக்கூடியதையெல்லாம் செய்தேயிருப்பதாக அவர் வற்புறுத்துகிறார். ஆனால் இதை யாரும் அப்படியே ஒப்புக்கொண்டுவிடுவதற்கில்லை. இன்றுகாணும்உணவுநெருக்கடி திடீரென்றுஒரு புயற்காற்றை அல்லது பூகம்பத்தைப்போல் ஏற்பட்ட ஒரு உற்பாதமன்று. இந்த உணவுத் தட்டு சில மாதங்களுக்கு முன்பே எதிர்பார்த்திருக்கக்கூடியதுதான். சென்ற வருஷம் தென் ஜில்லாக்களில் பருவ மழை தவறிவிட்டது; அதோடு வட ஜில்லாக்களில் பயிரில் பெரும் பகுதி வெள்ளத்தால் பாழாகிவிட்டது; இதன் பலனாக சாதாரணமாக எதிர்பார்க்கப்பட்ட விளைவில் ஐந்தில் ஒருபாகம் குறைந்துவிட்டது என்று அதிகாரிகள் புள்ளி விவரங்களுடன் எடுத்துக்காட்டுகின்றனர். மேற்குறித்த இருவகை இயற்கைக் கோளாறுகளும் பல மாதங்களுக்குமுன் நிகழ்ந்தவை என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை. இவற்றின் மூலம் விளைந்த சேதத்தை சுமாராகவாவது அப்போதே அதிகாரிகள் மதிப்பிட்டிருக்கவேண்டும். எனினும் அதை ஈடுசெய்ய இவ்வளவு நாளும் தங்கள் செய்த முயற்சியின் பலனெல்லாம் அரிசி ரேஷனை மேன்மேலும் குறைத்துக் கொண்டிருப்பதுதான் என்றால், அவர்களை யாரும பாராட்டுவதற்கில்லை.

மற்ற இடங்களிலிருந்து நமது தேவைக்கான உணவைப் பெறுவது எளியதொரு காரியமல்லவென்பது உண்மைதான். ஆனால் நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய உணவும் காலாகாலத்தில் இங்கு வந்து

198587



சமீபத்தில் சென்னை கவர்னர் திருப்பதி சென்றபோது தரிசனமான பிறகு ஸ்ரீ வேங்கடேசப் பெருமானின் திருவாபரணங்களைப் பார்வையிட்டார்.

சேர தக்க ஏற்பாடு செய்யப்பட்டதாகக் காணவில்லை. உண்மையில் மாகாணங்களுக்கு உணவு ஒதுக்குவது பற்றி இந்திய சர்க்கார் வகுத்துள்ள திட்டப்படி இம் மாகாணத்துக்குக் கிடைத்திருக்கவேண்டிய உணவு காலாகாலத்தில் வந்து சேரவில்லையென்று உணவு மந்திரியே தமது அறிக்கையில் ஒப்புக்கொண்டுள்ளார். உணவைத் துரிதமாகக் கொண்டுவந்து சேர்ப்பதில், போதியளவு ரயில்வே வாகன்கள் கிடைக்காதது போன்ற சிக்கல்கள் ஏற்பட்டதாக அவ்வறிக்கை கூறுகிறது. ஆனால் இந்நிலைமைக்கு அதிகாரிகள் யாரும் ஜவாப்தாரிகளல்ல என்ற முறையில் நமது முதல் மந்திரி சொல்வது ஆச்சரியகரமானதாகும்.

மற்ற இடங்களிலிருந்து கிடைக்கக்கூடிய தான்யத்தையாவது காலாகாலத்தில் இங்கு கொண்டுவந்து சேர்க்க அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தால் இன்று நிலைமை இவ்வளவு விபரீதமாகியிராது. குறிப்பாக சாதாரண ரேஷன் முறையுள்ள கிராமாந்திரங்களில் வசிக்கும் மக்கள் சென்ற சிலவாரங்களாக அனுபவித்து வந்திருக்கும் அல்லலை ஓரளவேனும் தவிர்த்திருக்கக்கூடும். பல இடங்களில் வாரத்தில் பாதிநாட்கள் எவ்வித உணவு தானியமும் கொடுக்கப்படுவதில்லை; ஜனங்கள் ஜீவனுடனிருக்க புளியங்கொட்டையையும், பிண்ணாக்கையும் உட்கொள்ள நேர்ந்திருக்கிறது என்று பரிதாபமான முறையீடுகள் அடிக்கடி வெளியாவதை அதிகாரிகள் அறிந்தேயிருக்கவேண்டும். ஆனால் இத்தகைய செய்திகள் பத்திரிகைகளில் வெளியாவது அவர்களுக்குப் பிடிக்கவில்லையெனத் தெரிகிறது. வீணாகப் பீதியைக் கிளப்புவதென்பது யோக்யமான எந்தப்பத்திரிகையின்நோக்கமாகவும் இருக்க முடியாது. மக்களின் துன்பம தணிய அதிகாரிகள் சுறுசுறுப்பான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் பொதுவாகப் பத்திரிகைகளின் ஆவலெல்லாம். இந்த நோக்கம் ஈடேறும் பொருட்டே அவை நம்பிக்கை வாய்ந்த தங்கள் பிரதிநிதிகளிடமிருந்து கிடைக்கும் தகவல்களை அதிகாரிகளுக்கு உணர்த்தும் வகையில் பிரசுரித்து வருகின்றன. ஏற்கெனவே இல்லாத ஒரு பீதியோ, கஷ்டமோ இந்தப் பிரசுரத்தால் ஏற்படுவதாகச் சொல்வது சரியன்று. உண்மையில் நிலைமை சீர்திருந்த உதவுவதே அதன் அடிப்படையான கருத்தென்பது வெட்ட வெளிச்சம். அவ்வாறின்றி தங்களுக்குக் கிடைக்கும் இத்தகைய செய்திகளை பத்திரிகைகள் மறைத்து விடுவதென்பது நிர்வாகத்திலுள்ள கோளாறுகளுக்கு ஆக்கமளிப்பதோடு, மக்களின் உள்ளக் கிளர்ச்சி புறையோடச் செய்வதுமாகும்.

அரிசி ரேஷன் குறைக்கப்பட்டாலும், மொத்தத்தில் ரேஷன் அளவு **12** அவுன்ஸுக்குக் குறையாதென்று முதல் மந்திரி உறுதி கூறுகிறார். கோதுமை போன்ற மற்ற தான்யங்கள் ஸப்ளை செய்வதுபற்றி இதற்கு முன்பும் அதிகாரிகள் திட்டமாக உறுதி கூறியிருக்கின்றனராயினும் அது பல இடங்களில் இன்றளவும் ஏட்டளவிலேயே இருந்து வந்திருக்கிறது. உணவுப் பழக்கத்தை அடிக்கடி மாற்றிக்கொள்ள அதிகாரிகள் அடிக்கடி அறிக்கை விடுப்பதன் மூலம் ஜனங்களிடையே ஏற்படும் எரிச்சல் ஒருபுறமிருக்க, மற்ற தான்யங்களும் குறித்த அளவுப்படி கிடைக்காதது அவர்களிடையே இன்னும் அதிருப்தியை வளர்ப்பதாகும். இதுவரை ஏற்பட்டுள்ள கொடிய அனுபவத்திலிருந்தாவது காலாகாலத்தில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டிய படிப்பினையை அதிகாரிகள் உணர்ந்திருக்கவேண்டும். இவ்வுணர்வுடன் அவர்கள் தற்போதைய நெருக்கடி இன்னும் முற்றவிடாதிருப்பதுடன், அரிசி ரேஷன் அளவை கூடியவரை துரிதமாக உயர்த்த ஜரூராக ஏற்பாடு செய்யவேண்டும்.

ஆப்த நண்பர்கள்

ப.ரா.

ராமுவும் சோமுவும் ஆப்த நண்பர்கள் அவர்களது நட்பிற்குச் சோம்பல் தான் அடிப்படை அது மட்டுமல்ல: இருவருமே சரியான அதிர்ஷ்டக்கட்டைகள். அவர்களது கிரகங்கள் மாறும் போதெல்லாம் கைகோத்துக் கொண்டு தான் மாறும்

பொது ஜனங்களின் கவனத்தைக் கவரக்கூடிய ஒரே ஒரு அம்சம் இவர்களிடம் இருந்தது அதுதான் இவர்களது ஒற்றுமை எக்காரியத்தையும் சேர்ந்தே செய்வார்கள் உண்பதும் உறங்குவதுமே இவர்களது தினசரி வேலை. ஒழிந்த நேரத்தில் உத்தியோகம் தேடுவார்கள் இவர்கள் வாழைப்பழம் வாங்குவது முதல் ஒரே கடையில் தான் ஏனென்றால், அந்தக் கடைக்காரன் கடனுக்குத் தருவது மட்டுமில்லாமல், வாழைப் பழத்தை உரித்துக் கொடுப்பான் மூழச்சோம்பேறிகளான இந்நண்பர்களுக்கு அதற்குக் கூடச் சோம்பல்

சென்னைமா நகரம் முழுவதிலும் அவர்கள் நுழைந்து வெளிவராத காரியாலயங்களே கிடையாதெனலாம் ஆனால் பாவம்! எங்காவது வேலை கிடைத்தால் தானே?

நிஜமான மிருகவேட்டைக்குத் துப்பாக்கி. பிற ஆயுதங்கள், வேட்டை நாய்கள் முதலியன தேவை ஆனால் உத்தியோக வேட்டைக்கும் இதே போல் தயாரிப்பு எதுவும் தேவையில்லையென நம் நண்பர்கள் எண்ணிவிட்டார்கள் போலும்! முகங்கூடத் துடைத்துக் கொள்ளாமல் தூங்கி வழிந்துகொண்டு அழுக்குச் சட்டையுடன் வந்து நிற்கும் இவர்களைக் காரியாலயங்களின் வாயிற் காப்பவர்களே விரட்டியடிக்கத் தொடங்கினர். பின் மூலஸ்தானம் வரை பிரவேசித்து யஜமானர்களைத் தரிசிப்பது எங்கே? அப்படித் தரிசித்தால் தான் இவர்கள் மூஞ்சியைப் பார்த்துவிட்டு யார் வேலை கொடுப்பார்கள்?

வாழ்க்கையின் கஷ்டங்களைப் புன்சிரிப்புடன் பொறுத்துக்கொள்ள வேண்டுமென பெரியவர்கள் உபதேசித்திருக்கிறார்கள் ராமுவும் சோமுவும் தமக்கேற்பட்ட கஷ்டங்களை அசட்டுச் சிரிப்புடனேயே பொறுத்துக்கொண்டனர். ஆனால் நாளடைவில் பொறுமையின் எல்லையையும் மீறிவிட்ட நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிட்டதும் அவர்களே திணறிப் போனார்கள்

நெருக்கடி, பஸ்ஸில் நெருக்கடி, டிராமில் நெருக்கடி மேலும் மேலும் போட்டு அடைத்துக் கொள்வதற்கு வயிற்றில் இடமில்லாத நெருக்கடி இதற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் கடைசியில் வந்தது கையில் காசில்லாத நெருக்கடி ஹோட்டல்காரர்கள் கடனுக்குச் சாப்பாடு போட மறுத்துவிட்டனர் பழைய பாக்கியைத் தீர்த்துக் கட்டாவிட்டால் அறுந்த கைக்குச் சுண்ணாம்புகூடத் தரமாட்டேன் என்று வெற்றிலை பாக்குக் கடைக்காரன் கண்டிப்பாய்க் கூறிவிட்டான் ரூம் வாடகை வேறு ஏழுமாதமாகப்பாக்கி நம் நண்பர்களது நிலைமை ஒருவர் கழுத்தையொருவர் கட்டிக்கொண்டு அழாத குறையாகிவிட்டது அன்று இரவு கையிலிருந்த கடைசிக் காலணாவுக்கு வாழைப்பழத்தை வாங்கி மிகச் சிரமப்பட்டு உரித்துத் தின்றபின், படுக்கையில் படுத்துக் காலை நீட்டி விட்டார்கள் காலையில் எழுந்தால் காப்பிக்கு என்ன செய்வதென்ற கவலையை நித்திரையின் பத்தில் மறக்க முயன்று அதில் வெற்றியும் பெற்றார்கள்

பொழுதும் விடிந்ததுஎன்ன ஆச்சர்யம்! இன்றைக்கென்று அவர்கள் சீக்கிரம்விழித்துக்கொண்டுவிட்டனர் வயிற்றில் பசி கிள்ளிக்கொண்டிருந்தது. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் தானே பசியின் கொடுமை அதிகமாயிருக்கும்?

'ராமு முதலில் எழுந்திருக்கட்டும்" என்று சோமு படுத்துக்கொண்டிருந்தான் "சோமுதான் முதலில் எழுந்திருக்கட்டுமே" என்று ராமு இன்னும் நன்றாய் இழுத்துப் போர்த்திக் கொண்டான். கடைசியில் வீடு கூட்டும் வீராயி கையில் வெண்சாமரத்துடன் திருப்பள்ளியெழுச்சி பாடிக்கொண்டு உள்ளே பிரவேசித்ததும், இருவரும் ஏககாலத்தில் அலறியடித்துக்கொண்டு எழுந்திருக்கவேண்டியதாயிற்று

வழக்கமாக, "ஐயோ பல் துலக்க வேண்டுமே இல்லாவிட்டால் எப்படிக் காப்பி சாப்பிடுவது?" என்பதுதான் அவர்களது முதற்கவலையாக இருக்கும் ஆனால் இப்போது அந்தக் கவலைக்கே இடமில்லாமல் போய்விட்டது

நண்பர்கள் மந்திராலோசனையைத் தொடங்கினர 'ஏண்டா ராமு இப்போ என்னடா செய்யலாம்?" என்று சோமு கேட்டான்

"அதுதான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்று ராமு சொன்னான்

"ஆமாம். உனக்குத் தெரிந்த மனுஷ்யர்கள் யாராவது இங்கே இருக்கிறார்களா?' ராமு தலையைச் சொறிந்துகொண்டு யோசனை செய்தான் அவன் முகம் மலர்ந்தது

"ஆமாண்டா சோமு இப்போ தான் ஞாபகம் வந்தது மாம்பலத்தில் என் தூரத்து உறவில் யாரோ ஒருவர் இருக்கிறார்போலிருக்கிறது. ... ஆனால் அவருக்கும் எங்கள் குடும்பத்திற்கும் சம்பந்தம் விட்டு ரொம்ப வருஷங்களாயிற்றே' என்றான் ராமு.

"கிடக்குடா. இதையெல்லாம் பார்த்தால் முடியுமா? தூரத்து உறவோ, நெருங்கின உறவோ, ஒரு ஆபத்தில் உதவாவிட்டால் உறவினர் பின் எதற்கடா இருக்கிறார்கள்? கிளம்பு மாம்பலம் போவோம்...... உம்......" என்று சோமு துரிதப்படுத்தினான் நண்பர்கள் வெகு அந்யோந்யமாய்க் கைகோத்துக் கொண்டு கிளம்பினர்.

* * *

மாம்பலத்தில் வக்கீல் துரைசாமி அய்யரின் பங்களாவைக் கண்டு பிடிக்க அவர்களுக்கு வெகு நாழிகையாகவில்லை போகும் வழியிலெல்லாம் சோமு ராமுவுக்குப் பாடங் கற்பித்துக்கொண்டே வந்தான் வெகு நாட்களாகப் பாராத ஒரு பந்துவைச் சந்திக்கும்போது என்னென்ன செய்யவேண்டும், எப்படி யெப்படி நடந்துகொள்ளவேண்டுமென்றெல்லாம் உபதேசங்களைப் பொழிந்து தள்ளிக்கொண்டிருந்தான் சோமு ராமு எல்லாவற்றிற்கும் பெருமாள் மாடு மாதிரி தலையை அசைத்து வந்தான்.

பங்களா வாசலில் நின்றுகொண்டு, "போடா, போய் 'மாமா' வென்று ஒரு

அலறல் அலறிக்கொண்டு அவர் காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணு இல்லாவிட்டால் அவர் உன்னை அடையாளம் கண்டுகொள்ளச் சிரமப்படுவார்'' என்று சொல்லி ராமுவை மட்டும் உள்ளே அனுப்பினான் சோமு.

வெளித் தாழ்வாரத்தில் நின்றுகொண்டிருந்த அய்யர் ராமுவைக் கண்டதும் வெகு ஆவல் ததும்பும் முகத்தோடு வரவேற்றார். 'வரணும் வரணும். இப்படி உட்காருங்கோ' என்று அவர் அழைத்ததும் ராமு அப்படியே பூரித்துப் போனான். தன்னை அறிமுகம் செய்துகொள்ள வேண்டிய தேவையே வைக்காமல் அவர் உபசரிப்பாரென்று அவன் நினைத்தேயிருக்கவில்லை வெளியே காம்பவுண்டு சுவருக்கு மேல் தலையை நீட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சோமுவும் உள்ளூறச் சந்தோஷப்பட்டுக் கொண்டான்.

அய்யர் காட்டிய நாற்காலியில் ராமு கம்பீரமாக அமர்ந்துகொண்டான் உடனே 'சளசள' வென்று அவன் நாக்கு உருள ஆரம்பித்தது.

'மாமா. என்னைப் பார்த்த மாத்திரத்தில் அடையாளம் கண்டுகொண்டீர்களே. அடாடா! உங்களுக்குத் தான் என்ன ஞாபக சக்தி!'

'மாமா' என்ற வார்த்தையைக் கேட்டதுமே அய்யர் துள்ளிக் குதித்தார். 'மாமாவா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனக்கொன்றும் புரியவில்லையே' என்றார் அவர்.

ராமுவுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது "என்ன மாமா, என்னைத் தெரியவில்லையா? நான்தானே சூலமங்கலம் சுப்பாமணி அய்யர் பிள்ளை ராமு? உங்களுக்கு அடியோடு ஞாபகமில்லை போலிருக்கிறதே!" என்று ராமு விஸ்தரித்தான் ஒரே நிமிஷத்தில் அய்யரது ஞாபக சக்தியைப் புகழ்ந்தும் பழித்தும் பேசியிருந்தான் அவன் ஆனல் அய்யர் அதைப் பொருட்படுத்தவில்லை

"அட பாவமே! நீ தானா? யாரோ கட்சிக்காரர் வந்திருக்கிறாரென்றல்லவா நான் நினைத்தேன்?' என்று அய்யர் முனகினார். ஏமாற்றம் அவர் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது சுவருக்கு அப்புறம் நின்ற சோமு சூள் கொட்டினான்

துரைஸ்வாமி அய்யரைச் சொல்லக் குற்றமில்லை அவரது ஏமாற்றம் நியாயமானதுதான் அவர் எதிர்பார்த்து நின்றது கட்சிக்காரர்களை— அதாவது வரும்படியை ஆனல் இப்போது அவரைத் தேடி வந்ததோ, அதற்கு நேரெதிரிடையான ஒரு அம்சம் மென்று விழுங்கினார் அவர்.

ராமு சமாளித்துக்கொண்டு பேசினான் 'உங்களைப் பார்த்து ரொம்ப நாளாச்சே என்றுதான் இப்படி இந்தப் பக்கம் வந்தேன்.'

"ஒஹோ!" என்றார் அய்யர். அந்த ஒரு வார்த்தையில் எத்தனையோ அர்த்தங்கள் அடங்கியிருந்தன

ராமுவுக்குச் சுயமாகக் கற்பனசக்தி அதிகம் கிடையாது. எல்லோரும் சாதாரணமாகப் பேசிக்கொள்ளும் வார்த்தைகளைத்தான் அவனும் உபயோகித்தான்

'இன்றைக்கு வெயில் ஜாஸ்தி மூளை அப்படியே உருகிவிடும்போலிருக்கிறது. என்று தன் அபிபபிராயத்தை வெளியிட்டான் அவன்

,ஆமாம் மூளை இருக்கிறவர்கள் அல்லவா அதற்காகக் கவலைப்படவேண்டும்?' என்று எங்கோ பார்த்த வண்ணம் அய்யர் பதில் சொன்னார், ராமுவின் முகம் விளக்கெண்ணெய் சாப்பிட்டவன் போல மாறியது

இவர்கள் சம்பாஷணை இதே ரீதியில் நீடித்திருந்தால் என்ன ஆகியிருக்குமோ, தெரியாது. ஆனல் இந்த இடத்தில் வேறொரு குறுக்கீடு நேர்த்தது

கையில் கட்டுப் புஸ்தகங்களுடன் வாயிற்படி ஏறினள் ஒரு யுவதி. அவள் நடத்தையில் ஒரு பரபரப்புக் காணப்பட்டது

"அப்பா அதோ ஒரு காலிப்பயல் நின்றுகொண்டு நம் வீட்டை எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறான் நான் காலேஜ் போய்விட்டு வந்துகொண்டிருக்கும்போது காம்பவுண்டு சுவருகில் நின்றான் நான் வந்ததும் என்னை அப்படியே விழுங்கிவிடுவதுபோல் பார்த்தானப்பா' என்று அவள் அய்யரிடம் முறையிட்டாள்

'யாரவன்? எங்கே என்று அய்யர் எழுந்தார். அடுத்த நிமிஷம் ஏக

ரகளையாகியிருக்கும் ஆனல் ராமு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு குறுக்கே நுழைந்தான் 'பயப்படாதீர்கள் அவன் வேறு யாருமில்லை என் சிநேகிதன் சோமுதான்,' என்று கூறினான்

அய்யர் அவனை ஒரு விழி விழித்துப் பார்த்தார். 'உன் சிநேகிதனா? அது வேறே இருக்கிறதா? ரொம்ப அழகுதான் என்பது போலிருந்தது அப்பார்வை.

"ஏதடா இது? சுக்லாம்பரதரப் குட்டிக்கொள்ளும்போதே..." என்று நினைத்துக்கொண்டான் ராமு. எதிரில் நின்றுகொண்டு அவனை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டிருந்த அம்மங்கையின்மீது அவன் பார்வை சென்றதும், பால்ய நினைவுகள் அவன் மனதிற்குத் திரும்பிவந்தன அவன் குழந்தையாயிருந்தபோது துரைஸ்வாமி ஐயர் தம் குடும்பத்துடன் ஒருமுறை ராமுவின் வீட்டிற்கு வந்திருந்தார்: அந்த ஞாபகத்தை விடாமல் பிடித்துக்கொண்டுவிட்டான் அவன் உடனே அவள் பக்கம் திரும்பினான்.

'சரசு! என்னைத்தெரியவில்லையா? உனக்கு? நீ குழந்தையாயிருக்கும்போது நாம் சொப்பு வைத்து விளையாடுவோமே 'ராமு அத்தான் ராமு அத்தான்' என்று உயிரை விட்டுக்கொண்டிருந்தாயே, என்று ராமு அப்பெண்ணைப்பார்த்துக் கேட்டான்

பெண் சற்று ஆச்சரியத்துடன் யோசித்தாள் பதினைந்து வருடங்களின் பழமையை அவள் மனம் ஊடுருவிச்சென்று இறுதியில் ராமு குறிப்பிட்ட காட்சியில் வந்து நின்றதும், அவள் வதனத்தில் ஒரு புன்சிரிப்புத் தோன்றியது தந்தையிடம் காணப்படாத பரிவுடன் மகள் அவனை வரவேற்றாள்

"ஓ! அதே ராமு அத்தான் தானா? வாருங்கள். வாருங்கள் ரொம்ப சந்தோஷம்" என்றாள் அவள் துரைஸ்வாமி அய்யர் இன்னும் சும்மா நின்றுகொண்டிருந்தார் அவர் முகத்தில் உணர்ச்சியே இல்லை ஆனல் அவரை அங்கே யார் பொருட்படுத்தினார்கள்?

"சரி நீங்கள் பேசிக்கொண்டிருங்கள் எனக்குக் கொஞ்சம் அலுவல் இருக்கிறது கவனித்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு ஆபீஸ் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டார் அவர்.

அவர் நல்ல அனுபவசாலி இருந்தாற் போலிருந்து திடீரென் ஒரு நாள் வந்து உறவு கொண்டாடும் தூர உறவினர்களைப்பற்றி அவருக்கு அவ்வளவாக நல்ல அபிப்பிராயம் கிடையாது அதுவும், சுவருக்கு மறுபுறம் நின்று எட்டிப்பார்க்கும் நண்பனொருவனையும் இழுத்துக்கொண்டு வரும் சொந்தக்காரனயிருந்தால்......?

அதுமட்டுமல்ல இந்த ராமுவின் மூஞ்சியை அய்யருக்குக் கட்டோடு பிடிக்கவில்லை இன்னும் சோமுவின் மூஞ்சியையும் அவர் பார்த்திருந்தால் என்ன நினைத்திருப்பாரோ! அவர்களது முகங்களை யாருக்காவது எப்பொழுதாவது பிடித்திருக்குமானல், இவர்கள் இன்று இப்படி வேலையில்லாமல் திண்டாடவே தேவையிராதே.

அய்யரின் அடுத்த கவலை அரிசிப் பஞ்சத்தைப்பற்றியது அவரது வெறுப்பிற்கே இதுதான் முக்ய காரணமென்றுகூடச் சொல்லலாம் கிடைக்கும் அரிசி குடும்பத்திற்கே கண்டும் காணமலும் இருக்கும்போது, புதிதாக வேறு இரண்டு ஆசாமிகளுக்குப் படைக்க எங்கேபோவது?

எனவே. அவர் ராமுவை வரவேற்க வேண்டிய முறையில் வரவேற்கவில்லை. அவர் ராமுவிடம் சொல்ல எண்ணியிருந்த வார்த்தைகள் இவைதான் "ஏண்டாப்பா ராமு என்னைப் பார்க்கத்தானே வந்தாய் ரொம்ப சந்தோஷம் சரி பார்த்தாய்விட்டதோ இல்லையோ? போய்விட்டு வா ஆனல் பாவம்! அதைச்சொல்வதற்குவாயைத் திறந்ததும், திடீரென்று சரசு வந்து குறுக்கிட்டுவிட்டாள் காரியம்கெட்டுவிட்டது

சரசு நல்ல பெண்தான் ஆனல் அவளுக்கு உலக அறிவு பற்றுது பிடிவாதமும் ஜாஸ்தி. பழங்கதைகள் பேசுவதில் இயல்பாகவே அவளுக்கு ஒரு மோகம் உண்டு சிறு வயதில் நானும் அவளும் சொப்பு வைத்து விளையாடிய' அனுபவத்தை ராமு

எடுத்ததுமே அவள் ராமுவின் கட்சியில் சேர்ந்திருப்பாள் அவள் இஷ்டத்துக்கு மாறாக அவனை எப்படி வெளியேற்றுவது?

ஆகக்கூடி ஆபீஸ் அறையில் நுழைந்த அய்யர் தம் அலுவலைக் கவனிக்காமல் பல்லைக் கடித்துக்கொண்டும், தம் ஆத்திரம் தீர மேஜையை ஓங்கிக்குத்திக்கொண்டும் இருந்ததில் வியப்பில்லையல்லவா?

வெளியே ராமு தன் நண்பனைச் சரசுவுக்கு அறிமுகம் செய்துகொண்டிருந்தான் "மன்னிக்கவேண்டும் மிஸ்டர் சோமு நான் தங்களைத் தவறாக எண்ணிவிட்டேன் இந்தவீட்டை உங்கள் சொந்தம் போலவே நினைத்துக்கொள்ளுங்கள் என்று சரசு கூறினாள்

எல்லோரும் உபசாரத்திற்கு அப்படித்தான் சொல்வது வழக்கம். ஆனால் சிறிது நேரங்கழித்து அய்யர் அறையினின்றும் வெளியே வந்து பார்க்கும்போது சோமு நடந்துகொண்ட மாதிரியைப் பார்த்தால், அவன் உண்மையிலேயே அவ்வீட்டைத் தன்னுடையதென்று நினைத்துவிட்டான் போலிருந்தது

"சரி இன்னும் ஒரு மாதத்திற்கு இவர்கள் இங்கிருந்து நகருவதேது?" என்று ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு ரேஷன் ஆபீஸை நோக்கி நடந்தார் அவர்.

* * *

அன்று பகலும் இரவும் நண்பர்கள் அங்கே சாப்பிட்டனர். வயிற்றுக் குணவில்லாதபோதெல்லாம் செவிக்குணவளிக்கச் சரசு இருந்தாள் பேசிப்பேசி மாளவில்லை அவர்களுக்கு ஆங்கிலமும், தமிழும் கலந்து சரமாரியாய்ப் பொழிந்த அவளது பிரசங்கங்கள் இவர்களது மூளைவரை சென்று எட்டாவிட்டாலும், சரசுவின் முகத்தினழகிலும் குரலினிமையிலும் மயங்கி உட்கார்ந்து கேட்டனர்

ராத்திரி நேரங்கழித்து அவர்கள் இருவரும் படுக்கையில் போய்ப் படுத்தனர்.. நியாயமாய்ப் பார்க்கும்போது, அவர்கள் படுத்த மறு நிமிஷமே குறட்டை விடத் தொடங்கியிருக்க வேண்டும்' ஆனால் இன்று அதுதான் இல்லை!

பொழுது விடியும் நேரம் வரை ராமுவும், சோமுவும் கண்மூடவில்லை கதிரவனின் முதல் கிரணம் காலில் பட்டதும், தாமதியாமல் எழுந்து முகங்கழுவித் தலையை வாரிக்கொண்டனர் இது ஆனதும் அவர்கள் காத்திருந்தது காப்பிக்காகவல்ல ஸ்ரீமதி சரசுவின் முகதரிசனத்துக்காகத்தான்

அதிகம் சொல்வானேன்? இந்த நண்பர்களிடம் தன் கைவரிசையைக் காட்ட வெகுநாளாய் ஒரு 'சான்ஸை எதிர்பார்த்திருந்த மன்மதன், இப்போது அவர்கள் மேல் தன் பாணத்தைப் பிரயோகித்தே விட்டான். அதன் பலனாக அவர்களது வாழ்க்கையிலேயே ஒரு அதிசய மாறுதல் ஏற்படத் தொடங்கியது அம்மாறுதலின் அடையாளங்கள் தான் மேற்சொன்னவை.

சொந்தச் சாப்பாட்டிற்கு ஒரு வாழைப்பழம்கூட உரித்துக்கொள்ள முடியாத சோம்பேறிகள், சரசுவைத் திருப்தி செய்வதற்காக எவரெஸ்ட் மலையின் உச்சிவரை ஏறத் தயாராயிருந்தனர் என்னே காதலின் அற்புத சக்தி!

நாட்கள் சென்றன. நண்பர்களிடையே ஒருவித மனக்கசப்பு தோன்றி வளர்ந்து வந்தது. காலையில் எழுந்ததும். 'என் சீப்பை ஏண்டா எடுத்துத் தலை வாரிக்கொண்டாய்?' 'என் கண்ணாடியை ஏண்டா எடுத்து முகம் பார்த்தாய்?' என்று அற்ப காரணங்களுக்காகத் தொடங்கும் சண்டைகள் நாளடைவில் ஒன்றுக்குப் பத்தாய்ப் பெருகின கடைசியாகப் பேச்சு வார்த்தைகள் அறவே நின்றுவிடும் நிலைமையும் வந்தது இதையெல்லாம் கவனித்தும் கவனிக்காதது போலிருந்தாள் சரசு இவர்களது மனஸ்தாபத்திற்குக் காரணம் யாதென்பது அவளுக்கு ஒருகால் தெரியுமோ என்னவோ?

உண்மை இவ்வளவுதான் இவர்கள் ஒவ்வொருவரும் சரசு தன்னைத்தான் காதலிப்பதாக எண்ணிக்கொண்டுவிட்டனர். தனக்குப் போட்டியாக மற்றவன் நிற்கிறான் என்ற எண்ணம் இயல்பாகவே இவர்கள் மனதில் ஊன்றிவிட்டது அதை வாயால் சொல்லிக் கொள்ளவில்லையே தவிர. மற்றப்படி அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்ட மாதிரியும், நடந்துகொண்ட விதமும். ஒருவரையொருவர் பழிசாற்றுவதாகவே இருந்தன. நேற்றுவரை நிலவிய ஒற்றுமை கணப்பொழுதில் எங்கோ மறைந்துவிட்டது

நாவல்களிலும், கதைகளிலும் எங்காவது காதலன்—காதலி என்றிருந்தால் அங்கே ஒரு போட்டிக் காதலனையும்கொண்டு வந்து புகுத்திவைப்பது வழக்கம் கதாநாயகியைத் தானே அடைவதற்காக அவன் செய்யும் சூழ்ச்சிகளும், அக்கிரமச் செயல்களும், கடைசியில் கதாநாயகன் அவற்றையெல்லாம் சிதறவடித்து. போட்டிக்காதலனை விரட்டியடித்து அவளைக் கைப்பிடிப்பதும், படிப்பதற்கு ரஸமாகத்தானிருக்கும் ஆனால் மேற்கண்ட மாதிரி சாஹஸச் செயல்களைக் காட்டியாவது சரசுவைத்தானே அடைய வேண்டும் என்ற துணிச்சல் ராமுவுக்கும் சோமுவுக்கும் இல்லை. அவர்களுக்கு 'எஞ்சி நின்றதெல்லாம் உள்ளூற வயிற்றெரிச்சலும் வெறுப்பும்தான்.

"இந்தப் பயலை இங்கே அழைத்துக்கொண்டு வந்ததே நான்தான். நானொருவன் இல்லாவிட்டால் இந்த வீட்டு வாசற்படி யேறக்கூட இவனுக்கு உரிமை கிடையாது சரசு என்னை மனப்பூர்வமாகக் காதலிப்பது நன்றாகத் தெரிந்திருந்தும்கூட இப்படி போட்டி போடுகிறானே இந்த அயோக்யச் சோமு" என்று ராமு (மனதிற்குள்) கர்ஜித்துக் கொண்டிருப்பான்

"அடடா! என்ன உலகமடா இது! ராமுவை நான் எவ்வளவு நம்பியிருந்தேன். அவனா இப்படி எனக்குத் துரோகம் செய்கிறானே எனக்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கும் உத்தமி சரசுவின் மனதை, அத்தான் அம்மாஞ்சி என்று உறவு கொண்டாடித் தன் பக்கம் திருப்பிக் கொள்ளப் பார்க்கிறான் எல்லாவற்றிற்கும் அவர்கள் சொப்புவைத்து விளையாடிய சம்பவத்தை வேறே கொண்டுவந்து குறுக்கே நுழைக்கிறான் இப்பேர்ப்பட்ட துரோகிகளை என்ன செய்தாலும் தகும்.' என்று பல்லைக்கடிப்பான் சோமு

இவற்றிற்கெல்லாம் காரணபூதமான கட்டழகி சரசுவோ, அவ்வப்போது அவரவர்களுக்குத் தகுந்த மாதிரி நடந்துவந்தாள் அவளது நோக்கம் என்னவோ, யாருக்குத் தெரியும்?

• • •

அன்றிரவு மணி சுமார் பத்திருக்கும். ஐந்தாம்பிறைச்சந்திரன் வானில் பிரகாசித்துக்கொண்டிருந்தான் பங்களாத் தோட்டத்தின் செடி கொடிகளடர்ந்த ஒரு பக்கத்தில் ராமு ஒரு கல்லின்மேல் உட்கார்ந்துகொண்டு யாருடைய வரவையோ எதிர் நோக்கியிருந்தான் ஆவலும் பரபரப்பும் அவன் முகத் தோற்றத்தில் காணப்பட்டன.

சற்றுத் தூரத்திற்கப்பால் சில செடிகள் விலகின ஒருருவம்தோன்றியது மேலே வளர்ந்திருந்த மரக்கிளைகள் சந்திரனொளியை மறைத்திருந்தபடியால் அவ்விடம் சற்று இருள் சூழ்ந்திருந்தது

ராமு எழுந்தான், அவ்வுருவத்தை நோக்கிப் பாய்ந்தான் அவ்வுருவமும் அவனை நோக்கியே பாய்ந்து வந்தது.

'சரசு! என் கண்ணே!' என்ற ஒரு அலறல்

அல்ல. அல்ல இரண்டு அலறல்கள் அவை ஏககாலத்தில் அவ்விருவர் வாயினின்றும் வெளிப்பட்டமையால்தான் ஒரே குரல் மாதிரி தோன்றின

ராமுதான் முதலில் தவறை உணர்ந்துகொண்டு அவ்வாலிங்கனத்தி

னின்றும், தன்னை விடுவித்துக்கொண்டான். பின் ஒரு நிமிஷ நேரம்வரை சோமுவும் அவனும் ஒருவரையொருவர் எரித்து விடுவதுபோல் பார்த்துக்கொண்டு நின்றனர்

'டேய் சோமு நீ இங்கே எதற்கடா வந்தாய்?' என்று வெகு அதிகார தோரணையுடன் கேட்டான் ராமு அதைவிடப் பிரமாதமான தோரணையில், 'அது கிடக்கட்டும். நீ ஏண்டா வந்தாய்? என்று சோமு பதிலுக்குக் கேட்டான். தர்க்கம் தொடங்கியது

அதே சமயத்தில் துரைஸ்வாமி அய்யர் தம் ஆபீஸ் அறையில் ஏதோ கேஸ் கட்டுகளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார் சரசு வெகு அவசரமாக உள்ளே நுழைந்தாள்

'சரசு நீ இன்னும் படுத்துக் கொள்ளவில்லையா? என்று கேட்டார் அய்யர்

'படுக்கை கிடக்கட்டும் அப்பா. வெளியே ஒரு வேடிக்கை நடக்கிறது. வாருங்கள் பார்க்கலாம் என்றாள் சரசு.

'இதென்னடியம்மா. இந்த வேளையில் வந்து......' என்று அய்யர் ஆரம்பித்ததும் குறுக்கிட்டு அவர் கையைப் பிடித்து வெளியே இழுத்துக்கொண்டு போனாள் செல்லப் பெண் சரசு

அங்கே தோட்டத்தில் வாக்குவாதம் பலமாக நடந்துகொண்டிருந்தது

'டேய் உனக்குச் சரசுவின் காலைப் பிடிக்கவும் யோக்யதை உண்டாடா?' என்று ராமு கேட்டுக்கொண்டிருந்தான்

'ஏண்டா. உனக்கு மாத்திரம் ரொம்ப யோக்யதை இருக்கிறதாக அபிப்ராயமோ? ஏன் இப்படி அலட்டிக்கொள்கிறாய்? என்றான் சோமு சற்று நேரம் இருவருமே மௌனமாயிருந்தனர் பேசிப் பேசி அவர்கள் வாய் வலியெடுத்துப்போயிருந்தது ராமு ஒரு யோசனை சொன்னான்

'ஏய் சோமு. இப்படி நான்தான் நீதான் என்று அடித்துக் கொள்வதில் பிரயோஜனமில்லை இரண்டிலொன்று தெரிந்தாக வேண்டும் ஒரு காலணாவைச் சுண்டி விட்டுத் தலையா, பூவா பார்ப்போம் ...சோமு இதைப் பலமாக ஆட்சேபித்தான்

'ஓ ஓ! அதெல்லாம் கூடாது இது என்ன அவ்வளவு சாதாரண விஷயமா? அப்படியெல்லாம் செய்தால் புனிதமான காதலையே அவமானப்படுத்துகிற மாதிரி ஆகும் இது என்ன கிரிக்கெட் பந்தயம் என்று நினைத்தாயா?'

பின் என்னதான் செய்யச் சொல்கிறாய்? வேறு வழியில்லையே ஒரு முடிவுக்கு வர' என்றான் ராமு

'வழிக்கென்னடா பஞ்சம்? நீயும் நானும் சண்டை போடுவோம். தோற்றவன் தக்ஷணமே இங்கிருந்து கம்பி நீட்டிவிடவேண்டியது ஜயித்தவன்தான் உண்மைக் காதலன்......... சம்மதமா?

ராமு சற்றுத் தயங்கினான் ஆனாலும் விட்டுக்கொடுத்துச் சொள்ளவில்லை "உம். சட்டையைக் கழற்று' என்றான் அவன் மறுகணம் இருவரும் திறந்த மார்புடன் யுத்தத்துக்குத் தயாராய் நின்றனர்.

அப்புறம் சற்று நேரத்திற்கு என்ன நடந்ததென்று அவர்களுக்கே தெரியாது ஆனால் அவர்களது முக்கல்களும் முனகல்களும் ஆழ்ந்த பெருமூச்சுக்களும் காற்றை நிரப்பின யாரோ அருகில்வந்து நின்றுகொண்டு "நிறுத்துங்கள் என்று கத்திய பின்தான் அவர்கள் போராட்டத்தை நிறுத்திவிட்டு எழுந்தனர்.

துரைஸ்வாமி அய்யரும் சரசுவும் எதிரே நின்றனர்.

ராமுவின் தலைமயிரில் ஒருகொத்து சோமு கையில் இருந்தது.

சோமுவின் மூக்கின் நுனிப்பாகம் ராமு வாயில் காணப்பட்டது.

அலங்கோலத்தில் ஒருவரையொருவர் தாக்கியடிப்பவர்களாக இருந்தனர் இருவரும்

'இதெல்லாம் என்ன கேலிக்கூத்து?' என்று துரைஸ்வாமி அய்யர் இரைந்தார் சரசுவோ அடக்கமுடியாமல் வரும் சிரிப்பைப் புடவைத் தலைப்பால் பொத்திக்கொண்டு அடக்க முயன்றாள்

காதலர்கள் தயங்கினர் 'இவரிடம் உண்மையைச் சொன்னாலென்ன? நாளை எனக்கு மாமனாராக வரவேண்டியவர்தானே இவர்? என்று தம்மைத் தாமே சமாதானமும் செய்துகொண்டனர். அதற்குள் அய்யர் இன்னொரு கத்தலும் போடவே, 'மாமா நீங்களே சொல்லுங்கள்.........' என்று ஆரம்பித்தான் ராமு

இருவரும் தங்கள் கட்சியை எடுத்துக் கூறினார்கள் அவற்றைக் கேட்கக் கேட்க அய்யரின் சினம் அதிகரித்து வந்தது சரசுவின் நகைப்பும் அதிகரித்தது

'மாமா. ராமு என்னுடைய ஆப்த சிநேகிதனாக இருந்தகாலம் ஒன்று உண்டு அதை எண்ணித்தான் இத்தனை நாள் பொறுத்திருந்தேன்,

ஆனால் இன்று இரவு இவன் செய்த காரியம்தான் எனக்குப் பொறுக்க முடியாமல் செய்துவிட்டது ராத்திரி பத்து மணிக்கு தன்னைத் தோட்டத்தில் சந்திக்கும்படி சரசு எனக்கு ஒரு குறிப்பெழுதி அனுப்பியிருந்தாள், இந்தப் பயல் அதை எப்படியோ தெரிந்துகொண்டு இதிலும் குறுக்கிடுவதற்கு வந்துவிட்டானென்றால்...'என்று சோமு சொல்லிக்கொண்டு போனான். ராமு குறுக்கே பாய்ந்தான்

'டேய், புளுகாதே சரசு எனக்காக்கும் சீட்டு அனுப்பியிருந்தாள், நீதான் அதை எப்படியோ தெரிந்துகொண்டு......'

'நானடா புளுகுகிறேன்? இதோ பாரடா சீட்டை ...என்று கையிலிருந்து ஒரு சிறு கடுதாசித்துண்டை எடுத்தான் சோமு

'பின்னே நான் சொல்வது பொய்யாடா? இதோ பார்.' என்று ராமு ஒரு சீட்டை எடுத்தான்.

அய்யர் இரண்டையும் அவர்கள் கையிலிருந்து பிடுங்கிப் பார்த்தார். அவற்றில் காணப்பட்ட விஷயமொன்றுதான்! இரண்டிலும் சரசுவின் கையெழுத்தே!!

அய்யர் மகளின் பக்கம் திரும்பி, "சரசு இதெல்லாம் உன் விளையாட்டுத்தானா?" என்று கேட்டார் அத்தனை நேரமாய் அடக்க முயன்ற அவளது சிரிப்பு இப்போது களுக்'கென்று ஒலித்தது

ஆனால் அச்சிரிப்பில் அய்யர் பங்கெடுத்துக் கொள்ளவில்லை அப்போது தாமும் சிரித்துவிட்டால் காரியம் கெட்டுவிடும் என்று அவருக்குத் தெரியாதா என்ன?

ராமுவையும் சோமுவையும் அடுத்த தெரு வரையில் விரட்டியடித்துவிட்டுத் திரும்பிய பின்தான் அய்யர் வயிறு வெடிக்கச் சிரித்தார் "சபாஷ், சரசு! நல்ல வேலை செய்தாய் என்று பெண்ணைத் தட்டிக் கொடுத்தார்.

* * * *

ராமுவும் சோமுவும் இன்றைக்கும் ஆப்த நண்பர்களே இடையில் ஏற்பட்ட ஒரு சிறு பிளவின் பின் அவர்கள் முன்னைவிட அதிகஒற்றுமையுடையவர்களாகி விட்டனர்.

———

"சக்தி ஆருடம்"!
ஸ்ரீ K R. அப்ளாச்சாரியார், M.A.L.T
வைஸ் பிரின்சிபால். டீச்சர்ஸ் காலேஜ்.
சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்
"தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்'
1 to 3 ஆருடகேள்விகளுக்கு ரூ. 1.
3-க்குமேல் கேள்வி 1க்கு அணா 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7-8-0.
வி பி பி தனி
ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.
N. B:-வெளிநாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.
சக்தி ஹோம்,
விருத்தாசலம். P. O (S. I.)

எச்சரிக்கை!

அண்ணாமலை முதலியாரின் யோசனையெல்லாம், அவர் இரண்டாவது மகள் ஜானகியின் எதிர்காலத்தைப்பற்றியே சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

வறுமையே தனக்குற்ற பூஷணமாகக் கொண்டிருந்த அவர், ஜானகியைத் தன் மூத்த மகள் லக்ஷ்மியைப் போல், நல்ல இடமாகப் பார்த்துக் கொடுத்து, அவள் சுகப்படுவதைக் கண்குளிரக் காணவேண்டுமென்று அவர் எண்ணியிருந்த நினைப்பெல்லாம் இப்பொழுது எங்கோ மறைந்து பஞ்சாய்ப் போய்விட்டது.

அவர் மாப்பிள்ளை, லக்ஷ்மியின் கணவன் ராமலிங்கம் வேறு இரண்டாந்தாரம் பண்ணிக்கொள்ள ஆசைப்படுகிறான் என்று அவர் காதில் விழுந்த சமாசாரம் அவர் மனதை என்னவோ செய்தது. அப்படி அவன் லக்ஷ்மியை விட்டுவிட்டு வேறு விவாகம் செய்துகொண்டால் அவள் கதி என்னாவது? அவள் கண் கலங்கி நிற்பதைப்பார்த்து எப்படி அவரால் சகித்துக்கொள்ள முடியும்?

* * *

ராமலிங்கம் ஒரு பணக்கார வியாபாரியின் மகன். முப்பது வயதுவரையில், கல்யாணமே வேண்டாமென்று வேதாந்தம் பேசிக்கொண்டு, அதே சமயம், எங்கெங்கோ கெட்டலைந்து திரிந்துவிட்டு ஒருநாள் முதுமையடைந்த பெற்றோர்களைத் திருப்திசெய்ய, கல்யாணத்திற்கும் உடன்பட்டான். அதன்பின் பணக்காரப் பிள்ளைக்கு பெண் கிடைக்காமலா போய்விடும்?

"இந்த வறிய நிலையில், லக்ஷ்மிக்கு எப்படிக் கல்யாணம் செய்துவைக்கப் போகிறோம்? யார் நம் வீட்டில் வந்து பெண் கொள்ளப் போகிறார்கள்?" என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்த அண்ணாமலை முதலியாரும், ராமலிங்கம் தந்தையின் கண்ணில் பட்டார்.

"பையனுக்கு வயதாகி விட்டதே. ஏன் அவனுக்கு இதுவரையில் விவாகமே நடக்காமலே இருந்துவிட்டது?" என்ற சந்தேகம் முதலில் அண்ணாமலை முதலியாரைக் கொஞ்சம் யோசிக்கச் செய்து விட்டது.

"என்ன இருந்தாலும் முதல் தாரம் தான். பணக்கார மாப்பிள்ளை" என்று அண்ணாமலை முதலியாரும் ராமலிங்கத்திற்குப் பெண் கொடுக்கச் சம்மதித்து விட்டார்.

இந்த சம்பந்தத்தை விட்டாலும் தான், அவருக்கு வேறு நல்ல இடம் எப்படி கிடைக்கும்? பிள்ளை வீட்டாரே கல்யாணச் செலவைச்செய்து கொள்கிறார்கள். அதுவுமன்றி, பரிசப் பணம் என்று சொல்லாவிட்டாலும், கையில் ஆயிரம் ரூபாய் வேறு கொடுக்கிறார்கள். அண்ணாமலை முதலியாருக்கு இதில் பூர்ண திருப்தியே ஏற்பட்டது.

ராமலிங்கத்திற்கும், லக்ஷ்மிக்கும் கல்யாணம் வெகு விமரிசையாகவே நடந்தேறியது.

இது நடந்து, இரண்டு மூன்று ஆண்டுகளில், ராமலிங்கம் பெற்றோர்கள் ஒருவர்பின் ஒருவராக இவ்வுலகை நீத்தனர்.

ராமலிங்கம் தன் தந்தையினால் ஏற்படுத்தப்பட்டு பிரபலமடைந்து அதிக லாபமளித்துவரும் இரும்பு வியாபாரத்தை மட்டும் நிறுத்தவில்லை. நாளுக்கு நாள் அவனிடம் பணப் பெருகிக்கொண்டேயிருந்தது.

அவன் லக்ஷ்மிக்கு வைரத்தாலும் தங்கத்தாலும், தினுசு தினுசான நகைகளாகவே இழைத்துப் போட்டான். அவள் உடம்பு பூராவும் ஒரே நகைகளாகவே குலுங்கிக் கொண்டிருந்தன. அவன் அவளிடம் பிரியமாகவும்தானிருந்தான்.

லக்ஷ்மியடைந்த ஆனந்தமோ சொல்லி முடியாது. அவள்தானே இப்பொழுது வீட்டிற்கு எஜமானி? கணவனின் எல்லாச் சொத்திற்கும் உரிமையுடையவள்.

தன் சின்னஞ்சிறு வயதிலும் சரி பருவமடைந்து வீட்டில் அடைந்து கிடந்த போதும் சரி நல்ல பாவாடையோ புடவையோ இன்றி வறுமையில் உழன்ற அந்தக் காலம் மாறி, தனக்கு எவ்விதக் குறைவுமில்லாமலிருக்கும். இந்த பாக்யத்தை எண்ணி எண்ணி அவள் உள்ளம் பெருமிதமடையும்.

லக்ஷ்மி தன் தாய், தந்தையர்க்கும், தங்கை ஜானகிக்கும் வேண்டியதையெல்லாம் செய்தாள். பண வசதியும், அவளிடமிருந்து அவர்களுக்கு நிறையக் கிடைத்துக்கொண்டிருந்தது. ராமலிங்கமும் அவளை ஒன்றும் தடை செய்யவில்லை.

லக்ஷ்மியின் சுக வாழ்வைக் கண்ட அவர்கள் தங்கள் இன்னொரு மகள் ஜானகியும் அவளைப்போலவே போய் வாழவேண்டும் என்று எண்ணினார்கள். பெற்றோர்கள் மனதில் இயற்கையாக எழக்கூடிய ஆசைதானே! இந்த ஆசை நிறைவேறுமா?

* * *

லக்ஷ்மிக்கு விவாகமாகி பத்து வருஷங்களாகியும், அவளுக்கு குழந்தைப் பாக்கியம் ஏற்படவில்லை. இது அவளுக்கு ஒரு குறையாகவேயிருந்தது.

ராமலிங்கமும், தன்னுடைய அளவற்ற செல்வத்திற்கு வாரிசாக ஒரு குழந்தை வேண்டுமென்று, இத்தனை வருடங்களாகக் காத்துக் கிடந்தான். சொத்துக்கள்தான் மேலும், மேலும் பெருகிக்கொண்டிருந்ததேயொழிய, குழந்தை பிறக்கவில்லை.

வேறு ஒரு மனைவியை அடைந்தாகிலும், தனக்கு ஒரு வாரிசு ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஒரு ஆசை அவன் உள்ளத்தில் அழுந்தப் புதைந்து போயிருந்தது. நாளாக ஆக, அந்த ஆசையும் வெளியில் தலைதூக்க ஆரம்பித்துவிட்டது.

ஒருநாள் அவன் இந்த எண்ணத்தை லக்ஷ்மியிடம் சொல்லவும் சொல்லி விட்டான். அதற்கு மேலும், அவள் என்ன செய்வாள்? கணவனின் விருப்பத்தை மாற்றுவதற்கு அவளுக்குப் போதிய தைரியமில்லை. அவள் 'வேண்டாம்" என்று சொன்னாலும், அவன் கேட்பவனாயும் தெரியவில்லை.

லக்ஷ்மி உள்ளுக்குள் மனம் புழுங்கினாள். "தனக்கு எல்லாம் கிடைத்தது போல், ஒரு மகவும் கிடைத்திருந்தால், இத்தகைய ஒரு நிலை ஏற்பட வழியிருக்காதே" என்று அவள் கவலைப்பட்டாள்.

வேறொருத்தி அந்த வீட்டிற்குவந்து விட்டால், அவளுக்கிருக்கும் ஏகபோக உரிமையெல்லாம் பறிபோய்விடும். அதன் பிறகு அவள் எப்படி அங்கு தலையைக் காட்டிக்கொண்டிருப்பது? ராமலிங்கம் அவளை அலட்சியம் செய்து விடலாம். அவள் ஒரு அடிமைபோலத்தான் அங்கிருக்கவேண்டும். அதைவிட அவள் இறந்து, அவள் கணவன் வேறு தாரம் தேடிக்கொண்டிருக்கலாம்.

இப்படி பலபல எண்ண அலைகள் அவள் உள்ளத்தைத் துளைத்து வேதனைப்படுத்திவிட்டன.

ஒரு நாள் ராமலிங்கம் ஒரு பெரிய வெடி குண்டை அவளிடம் தூக்கிப் போட்டான்.

'லக்ஷ்மி, நான் உன் தங்கை ஜானகியையே இரண்டாந்தாரமாகச் செய்து கொள்ளலாம் என்று பார்க்கிறேன். வேறு அந்நியத்தில் போனால் உனக்கும் கஷ்டம். உன் பெற்றோர்களுக்கும் மன வருத்தம். இந்த சொத்தை ஆள ஒரு குழந்தை இருக்கவேண்டாமா? நீதான் இதற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்' என்று ராமலிங்கம் அவளிடம் கூறினான்.

'ஆகட்டும் பார்க்கலாம்' என்று அவள் வறட்டுச் சிரிப்புடன் பதில் சொன்னாள்.

'ஜானகி தங்கையாகவிருந்தாலும், அவருக்கு மனைவியாக வந்து விட்டால் அவளும் எனக்கு எதிரிதானே! அக்கா, தங்கை என்று அருமை பெருமையாக இருந்துவிடலாம். சக்களத்திகளாகிவிட்டால் இருவருக்கும் ஒற்றுமை என்று ஒரு நாளும் இருக்கப் போவதில்லை. அவள் ஒரு பக்கம் பார்க்க, நான் ஒரு பக்கம் பார்க்க, மூகத்தை உம் என்று வைத்துக் கொண்டிருப்பதைவிட, எல்லா உரிமைகளையும் அவளுக்கே அளித்துவிட்டு, நான் தாய் வீடே கதி என்று இருந்துவிடுவதுதான் நல்லது' என்று ஒரு நினைப்பு அவள் உள்ளத்தில் எழும்.

'இளமை குலுங்க, நல்ல பொலிவுடன், தங்க விக்கிரகம் போலிருக்கும், பதினெட்டு வயது சரியாக நிரம்பப்பெறாத தங்கையை, நாற்பது வயதைத் தாண்டிவிட்ட, தன் கணவனுக்கே இரண்டாந்தாரமாகக் கொண்டுவந்து கொடுப்பதா? ஊரில் பார்ப்பவர்கள்தாம் என்ன சொல்ல மாட்டார்கள்?' என்று இன்னொரு நினைப்பும் கூடவே தோன்றும்.

அந்த வயதில் தாரமிருக்க, மறு விவாகம் செய்துகொள்ளப் பிரியப்பட்ட ராமலிங்கத்தின்மீது அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது.

"அவரைச் சொல்லி என்ன பயன்? எனக்கென்று ஒரு குழந்தை பிறந்திருந்தால், இவ்வளவுதூரம் நடக்கும்படி ஆகியிருக்காதே.

"இத்தனை சொத்து சுதந்திரத்தை வேறொருத்தி வந்து அனுபவிப்பதைவிட, தங்கை ஜானகியேதான் அடையட்டுமே. அவளுக்காகவே நாம் எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து விடுவோமே. எதற்கும் அப்பா, அம்மா சம்மதித்தால், அவர் இஷ்டப்படியே செய்துவிட்டால் போகிறது"

இப்படிப் பல யோசனைகளிடையே லக்ஷ்மி தன்னை சமாதானப்படுத்திக் கொண்டாள்.

கணவனின் இந்தக் கல்யாணத்தை உத்தேசித்தே அவள் பிறந்தகத்திற்கும் போய்ச் சேர்ந்தாள்.

* * *

லக்ஷ்மி மூலம் விவரம் அறிந்த அண்ணாமலை முதலியாருக்கு மனதில் 'பகீர்' என்றது. அவள் கணவன்மூலம் ஜானகிக்கு ஒரு நல்ல வரனைப் பார்க்கலாம் என்று அவர் கட்டியிருந்த மனக்கோட்டையும் இப்பொழுது தகர்ந்துவிட்டது.

அதுதான் போனால் போகட்டும். இப்பொழுது அவனுக்கேவா ஜானகியை இரண்டாந்தாரமாகக் கொண்டு போய்க் கொடுப்பது? அதுவும் லக்ஷ்மி உயிருடன் இருக்கும்போது. அவளுக்கு எதிரியாகவா ஜானகி போவது?

ஒரு மனைவியிருக்க, மறு மனைவியடைய ஆசைப்படும் ராமலிங்கத்தின் அற்பப் புத்தியைக்கண்டு அவருக்கு, அவன்மேல் வெறுப்புத்தான் உண்டாயிற்று.

அவருக்கும் சரி, அவர் மனைவிக்கும் சரி, இதில் கொஞ்சங்கூட இஷ்டமில்லை. ஜானகிமட்டும், அதற்குச் சம்மதிப்பாளா? அவள் மனதில் கற்பனை செய்துகொண்டிருக்கும். லட்சியக் கணவன் ராமலிங்கமாகவிருக்க முடியாதே?

லக்ஷ்மியோ ஒரே பிடிவாதம் பிடித்தாள். "ஜானகியை அவருக்குக் கொடுத்துத்தான் ஆகவேணும், அவர் வேறு கல்யாணம் செய்துகொள்வது நிச்சயம்தான். அந்நியத்தில் வேறு ஒருத்தி வந்து என்னை அதிகாரம் செய்வதைவிட, ஜானகியே அந்த இடத்தில் வந்துவிடுவது நல்லதில்லையா? எல்லா சொத்து சுதந்திரத்தையும் நாம்தானே அனுபவிக்கப் போகிறோம்? நான் ஜானகிக்காகவே என் இடத்தை ஒழித்துக் கொடுத்துவிடறேன். அவர் விரும்புகிறபடி சொத்திற்கு ஒருவாரிசு பிறக்குமல்லவா?" என்று அவள் ஏதேதோ பேசிக்கொண்டே போனாள். அப்பொழுது அவள் முகம் எவ்வித மான மாறுதல் உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கவில்லை.

"இரண்டாந்தாரமென்றும், மாப்பிள்ளைக்கு வயசாகிறதேயென்றும் யோசிக்கவேண்டாம். ஏழையாகவிருந்தால் இதற்கெல்லாம் ஈடுகொடுத்துக் கொண்டுதான் வரவேண்டும்" என்று அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகளை

யும் சொன்னுள் லக்ஷ்மி ஜானகிக்கும் அவள் தைரியம் கூறினுள்.

ஜானகிக்கு அக்கா இப்படிச் சொன்னது எரிச்சலைத்தான் உண்டு பண்ணியது

'என்ன அக்கா! இப்படிச் சொல்றே? இதைவிட என்னை யாராவது கிழவனுக்கு இரண்டாந்தாரமோ மூன்ரும் தாரமோ ஆககொண்டு போய்க் கொடுத்தாலும் எனக்குச் சம்மதமே? உனக்குப் போட்டியாக மட்டும் நான் வரமாட்டேன்' என்று ஜானகி சொல்லிப் பார்த்தாள்.

லக்ஷ்மி அவளை விடவில்லை. 'அப்படிச் சொல்லாதே ஜானகி அவருக்கு வேறு யாராவது வந்துவிட்டால், நான் எங்காவது ஆறு, குளத்தில் விழுந்துவிடுவது நிச்சயம் உனக்கு என்னிடத்தில் பிரியமிருந்தால், நான் சொல்கிறபடிக்கேட்டு நட. நீ சம்மதித்தால், அப்பாவும், அம்மாவும் சரி என்று சொல்லிவிடுவார்கள்.'

என்று அவள் கொஞ்சம் கண்டிப்பாகவே தங்கையைப் பார்த்துச் சொன்னுள்

அதற்குமேல் ஜானகிக்கு அக்காவின் வார்த்தையைத் தட்ட முடியவில்லை.

இந்தக் கல்யாண விஷயமாக நேரில் பேசவேண்டுமென்று ராமலிங்கத்தை வரும்படி அண்ணுமலை முதலியாரும் கடிதம் எழுதினுர்

அவனும் அங்கு வந்து சேர்ந்தான் உண்மையில் பார்க்கப் போனுல், அவன் வாரிசு கோரி, மறு மனைவியையடைய விரும்பியது என்பது இரண்டாம் பட்சம்தான் நல்ல இளமை கொழிக்கும், பருவ மங்கையை மீண்டும் ஒரு முறை கைப்பிடிக்க வேண்டுமென்று அவன் உள்ளத்தில் தோன்றிய ஏதோ ஒரு வேட்கைதான் அவனுக்கு இத்தகைய விபரீத புத்தியை உண்டு பண்ணியிருந்தது அதற்கேற்ப, அவனிடம் பண மயக்கமிருந்தது லக்ஷ்மி அப்படியொன்றும் குரூபியில்லை நல்ல அழகிதான் கவர்ச்சிகரமான முக வசீகரமும்கொண்டவள்தான் ஏனே அவன் புத்தி இப்படித் திரும்பிவிட்டது இப்பொழுதுஅவன் எண்ணியபடியே நடப்பதற்கிருந்தது அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கியது

பணக்கார மாப்பிள்ளை ராமலிங்கத்திற்கு மாமனுர் வீட்டில், விருந்தும் உபசாரமும் தடபுடல் பட்டது அவன் அங்கேயே ஒருவாரத்திற்கு மேல் தங்கினுன்.

* * * *

ராமலிங்கம் எங்கேயோ வெளியில் போய்விட்டு, மாமனுர் வீட்டுக்குத் திரும்பி வந்தான் அப்பொழுது ஜானகிமட்டும்தான் வீட்டிலிருந்தாள். லக்ஷ்மியும் அவள் தாயும் பெரிய கடைத் தெருவிற்குப் போயிருந்தார்கள் அண்ணுமலை முதலியாரும் வீட்டில் இல்லை

தனியாக இருந்த ஜானகியிடம் பேச்சுக் கொடுத்துப் பார்க்க வேண்டுமென்று ராமலிங்கம் மனம் பெரிதும் விரும்பியது கூடத்தில், அப்படியே சாய்வு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான். அவன் அங்கு கிடந்த பத்திரிகையை எடுத்து, தன் கண்களை அதில் ஓட்டினுன். அவன் கவனமோ படிப்பில் செல்லவில்லை ''சமையலறையிலிருக்கும் ஜானகி வெளியே தலையைக் காட்டமாட்டாளா? அவளையே கண் குளிரப் பார்த்துக்கொண்டேயிருக்க மாட்டேரமா?'' என்று ஒரு வேட்கை அவனுக்கு அப்பொழுது உண்டாயிற்று

அப்பொழுது அவனுக்கு உண்மையாகவே தண்ணீர்த் தாகம் எடுத்தது. ''லக்ஷ்மீ, லக்ஷ்மீ! ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வா என்று அவன் தன் மனைவியைக் கேட்பதுபோல் கூறினுன்

அடுத்த நிமிஷம் ஜானகியே நாணிக் கோணிக்கொண்டு அவனுக்குத் தண்ணீர்கொண்டுவந்து கொடுத்தாள்

ராமலிங்கம் அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான் அவள் முகத்தில் எவ்விதப் பிரகாசத்தையும் அவன் காணவில்லை அதற்குப் பதில் அவள் முகத்தில் ஏதோ ஒரு இனம் தெரியாத சோகம் குடிகொண்டிருப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. ஒரு வருஷத்திற்கு முன் ஒருதரம் அவளை அவன் நன்ருகப் பார்த்திருந்தான் அப்பொழுது அவள் முகம் இளமை கொழிக்கும் 'களை'யுடன் நன்ருகப பொலிவு பெற்றிருந்தது இப்பொழுது ஏன் அவள் முகத்தில் இத்தகைய மாறுதல்? ஒரு கால், அவனை அந்த வயதில் இரண்டாந் தாரமாக மணக்க அவளுக்கு இஷ்டமில்லையா?

அவன் யோசனை செய்தான்

மறு கணம் அவன் பேசினுன். 'ஜானகி! என்னை மணக்க உனக்குப் பிரியமிருக்கா? உண்மையைச் சொல்ல வேணும் ஒன்றும் வலுக்கட்டாயமில்லை, சொல், தைரியமா' என்று அவளைப் பார்த்துக் கேட்டான் அவன்.

ஜானகி ஒரு நிமிஷம் ஒன்றுமே பதில் பேசவில்லை

''அத்தான், உங்களைப்பற்றி எவ்வளவோ பெருமையாக நினைத்துக் கொண்டிருந்தேன் உங்களுக்கிருக்கும் செல்வாக்கினுலும், பணத்தினுலும், நல்ல இடத்தில் எனக்குக் கணவன் கிடைத்து சுகமாக இருக்கலாம் என்று கனவு கண்டுகொண்டிருந்தேன் இப்பொழுது அது பலிக்கவில்லை அக்காவும் உங்களையே மணந்து கொள்ளும்படி என்னை வற்புறுத்துகிருள். ஏழையாகிய நாங்கள் அவள் சொல்கிறபடிக் கேட்காமல் என்ன செய்ய முடியும்?''

''நான் சொல்கிறேனே என்று கோபம் வேண்டாம் சொத்துக்கு வாரிசு வேண்டி, நீங்கள் மறு விவாகத்தை விரும்பலாம் அதன்படி உங்களுக்குக் குழந்தை பிறக்கலாம், பிறக்காமலும் போகலாம் நீங்கள் விரும்புகிற இரண்டாம் மனைவியினுல் உங்களுக்கோ. உங்கள் முதல் மனைவிக்கோ மனநிம்மதி இருக்க முடியுமா? இதைக் கொஞ்சம் யோசியுங்கள்

''இந்த பத்து வருஷ காலமாக உங்கள் சுக துக்கங்களில் பங்கு கொண்டு. இரவும் பகலும் உங்கள் நன்மை ஒன்றையே நாடிய உங்கள் முதல் மனைவி கண்கலங்கி மனம் வெதும்பி வாடி வதங்கிப் போய்விடலாமா? எங்காவது சக்களத்திகள் இரண்டுபேரும் ஒன்றுபட்டு, கணவன் நன்மை ஒன்றையே நாடியிருக்கிருர்கள் என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அக்காவுக்கு நான் தங்கையாகமட்டும் இருந்துவிட்டால் அந்த ஒற்றுமை வந்துவிடும் என்பது என்ன நிச்சயம்?

''உங்களுக்கிருக்கும் செல்வத்தினுல் எத்தனையோ பெண்களை இரண்டாந் தாரம் மூன்ரும்தாரம்'' என்று கல்யாணம் செய்துகொண்டுவிடலாம் உங்கள் முதல் மனைவியைப்பற்றிக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் அவள் மனம் வெறுத்து உயிரைவிட்டால், அந்தப் பெண்தோஷம் உங்களை விடாதே

''ஒரு யௌவன மங்கையின் உள்ளத்தில் எத்தகைய கனவுகள் உருவாகியிருக்கும்? ஏழையாகவிருந்தாலும், நல்லவாலிபனுகக் கண்ணிறைந்த கணவனுகவே அடையவல்லவோ அவள் மனம் துடித்துக்கொண்டிருக்கும்? உங்களை நான் விரும்பவில்லை என்று சொலவதாக நினைக்க வேண்டாம்.

''என் அருமை அக்கா சொல்கிறபடி நடக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன் உங்களை மணப்பதற்கும் என் முழுச் சம்மதத்தையும் தெரிவித்துவிட்டேன் என்னை மணப்பதற்குமுன் கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள்'' என்று ஜானகி ஒரு பெரிய பிரசங்கமே அவனைப் பார்த்து செய்துவிட்டாள். அப்பொழுது அவளுக்கு அழுகையே வந்துவிட்டது முகத்தை மூடிக்கொண்டு உள்ளே ஓடிவிட்டாள்.

ஜானகியின் நீண்டப் பேச்சைக்கேட்ட ராமலிங்கம், அப்படியே மலைத்துப்போய் உட்கார்ந்திருந்தான் தன்னை அவள் எச்சரிப்பது போலவே அவனுக்குத் தோன்றியது.

ஜானகியின் சாமர்த்தியமான வார்த்தைகளை 'வாஸ்தவம்தான்' என்று அவன் மனம் ஆமோதித்தது.

'நான் ஒரு ஏழைக் கூலிக்காரனுக இருந்தால், எனக்கு இப்படி புத்தி தோன்றியிருக்க வழியில்லையே என் சொத்திற்காகத்தானே, என் மனைவியும் மற்றவர்களும் என்னுடைய இந்த யோசனையை ஒபபுக்கொண்டிருக்கிருர்கள் பணம் எல்லாம் சாதித்துவிடும் மனச் சாந்தியையும், நிம்மதியான வாழ்க்கையையும் ஒருவனுக்களிக்க பணத்தினுல் என்றும், எங்கேயும் முடிந்ததில்லையே எனக்குப் புத்தி வந்துவிட்டது இந்த மறு விவாக யோசனையே எனக்கு வேண்டாம். லக்ஷ்மியின் மனமும் நொந்து நொடித்துப் போகவேண்டாம். இனி நானே முன்னின்று ஜானகிக்கு நல்ல கணவனுகப் பார்த்துக் கல்யாணத்தை முடித்து வைத்துவிடவேண்டும் அதுதான் என்னுடைய தீய எண்ணத்திற்குப் பிராயச்சித்தம்' என்று அவன்

திடமான சங்கற்பம் செய்துகொண்டான்.

அன்றிரவு சாப்பாடு முடிந்து தெருத்திண்ணையிலிருந்து, அண்ணாமலை முதலியாரும், ராமலிங்கமும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள் லக்ஷ்மியும், ஜானகியும், அவர்கள் தாயும், வீட்டில் உள்ளே கொஞ்ச தூரத்தில் மறைவாக உட்கார்ந்து அவர்களிருவரும் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது ராமலிங்கம் "மாமா, நான் என்னுடைய கல்யாண யோசனையை விட்டுவிடப் போகிறேன் சிந்தித்துப் பார்த்தபோது, என் ஏற்பாடு எவ்வளவு அடத்தமானது; ஆபத்தானது என்பது எனக்கு இப்பொழுதுதான் தெரிகிறது சொத்திற்கு ஒரு குழந்தை பிறக்கவேண்டுமென்றால், என்றுவது ஒருநாள் லக்ஷ்மிக்கே பிறந்துவிட்டுப் போகிறது ஜானகியின் கல்யாணத்தைப்பற்றி நீங்கள் ஒன்றும் கவலைப் படவேண்டாம். அவளுக்கு வரன் தேடுவது மற்றதெல்லாம் என் பொறுப்பு, என் செலவு" என்று தீர்மானமாகவே சொன்ஞன் அப்பொழுதுதான் அவன் மனம் என்றுமில்லாத ஒரு தனி நிம்மதி பெற்றது.

அண்ணாமலை முதலியாருக்கு ராமலிங்கத்தின் திடீர் மனமாற்றத்திற்குக் காரணம் எதுவாகயிருக்கும் என்று ஒன்றுமே புரியவில்லை

"அதான் சரி, மாப்பிள்ளை. நீங்களே பார்த்து, அவள் கல்யாணத்திற்கு நல்ல ஏற்பாடு செய்யுங்கள்" என்று மன மகிழ்ச்சியோடு கூறிஞர் முதலியார்

இந்தச் சம்பாஷணையை விடாது உள்ளிருந்து கேட்டுக்கொண்டிருந்த அந்த மூன்று பெண்மணிகள் உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கியது

"ஜானகி, நீ நல்ல அதிர்ஷ்டக்காரியடி! அவர் மனம் மாறிவிட்டது. பார்த்தாயா? என்று லக்ஷ்மி தங்கையை அணைத்துக்கொண்டாள்.

அப்பொழுது ஜானகி உள்ளம் அனுபவித்த இன்ப உணர்ச்சியை என்னவென்று சொல்வது? இனி அவள் யாருக்கு வாழ்க்கைப்பட்டாலும், முதல் மனைவிதான்.

விசேஷ சுதந்திர தின சலுகை

ரகத்திற்கும் வேலைப்பாட்டிற்கும் பிரசித்தி பெற்ற கீழ்க்குறித்த கடியாரங்கள் உண்மையான ரகங்களாகும் 15 & 17 ஜுவல் பதித்த கடியாரங்கள் யாவும் 5 வருடக்கும் மற்றவை 3 வருட உத்தரவாதமளிக்கப்படும் உத்தரவாத சர்டிபிகேட் எழுதப்பட்டு அழகிய ஸ்டிராப்பும் ஒரு வெல்வெட பெட்டியும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் இலவசமாக வழங்கப்படும் பாக்கிங் தபாற் செலவு விற்பனை வரி இலவசமாக, வி பி பி யிலும் சப்ளை செய்யப்படும். இந்த சலுகை 31—8—1950 தேதிவரை மட்டுந்தான்

இலவசம்

(1) ஒரே தடவையில் 2 கடியாரங்கள் வாங்குவோருக்கு ஒரு அமெரிக்க பவுண்டன் பேனு—தங்க மூடியுடனும்—ஒரு அழகிய புரொபெல்லிங் பென்ஸிலும் இலவசம்

(2) ஒரே தடவையில் 3 கடியாரம் வாங்கினுல். ஒரு உயர் ரக டேபிள் கிளாக் இலவசம்.



(கர்வெக்ஸ் சைஸ் 7¾)

காட்லாக் நெ.		ஜுவல்	விலை ரூ
201	ரோல்டு கோல்டு எஃகு பின்புறம்	5	36
202	குரோம் டி	7	39
203	குரோம் டி	15	50
204	ரோ கோல்டு டி	15	55
205	முழு ரோல்டு கோல்டு	15	60

(ரவுண்டு சைஸ் 10½)

காட்லாக் நெ.		ஜுவல்	விலை ரூ
216	குரோம் எஃகு பின்புறம்	7	27
217	ரோல்டு கோல்டு டி	7	30
218	20 மைக்ரான் தங்கம் (சிறிய சைஸ்)	7	37
219	குரோம் எஃகு பின்புறம்	15	38
220	ரோ கோல்டு டி	15	43

(ரவுண்டு சென்டர் செகண்டு சைஸ் 8¾)

206	ரோல்டு கோல்டு கேஸ்	5	33
207	டி டி	7	37
208	குரோம் எஃகு பின்புறம்	15	59
209	ரோ கோல்டு டி	15	64
210	வாடர் புரூப் ஷாக் புரூப் குரோம் எஃகு பின்புறம் ரேடியம்	15	85
211	வாடர் புரூப் ஷாக் புரூப் ரோல்ட் கோல்டு ஸ்டீல் பாக்—ரேடியம்	15	90

(சென்டர் செகண்டு சைஸ் 10½)

221	வாடர்புரூப் குரோம் ஸ்டீல்	5	45
222	வாடர் புரூப் ஷாக் புரூப் குரோம் ஸ்டீல்பாக் ரேடியம்	15	59
223	வாடர் புரூப் ரோ கோல்டு ஸ்டீல் பாக்	15	66
224	டி 20 மைக்ரான் தங்ககேஸ்	15	72
225	வாடர் புரூப் ஆல் புரூப் குரோம் ஸ்டீல் பாக் ரேடியம்	17	79
226	ஆல் புரூப் ரோல்டு கோல்டு ஸ்டீல் பாக்	17	85

(சிறிய ரவுண்டு சைஸ் 8¼)

212	குரோம் எஃகு பின்புறம்	5	27
213	ரோல்டு கோல்டு டி	5	30
214	குரோம் டி	15	55
215	ரோல்டு கோல்டு டி	15	60



(மிகச் சிறிய சைஸ் 5¼")

227	குரோம் எஃகு பின்புறம்	5	39
228	ரோல்டு கோல்டு கேஸ்	5	42
229	டி எஃகு பின்புறம்	15	61
230	கெட்டி 18காரட் தங்க கேஸ்	15	118

CAROLINE AGENCIES (INDIA)

(Sec 8) P. B. No. 6764, BOMBAY 22.

சினிமாவில் தவறுகள்

[மெலட்டூர் விச்சு]

★

நாம் பல வருடங்களாக இந்திய சினிமாப் படங்களைப் பார்த்தும் அனுபவித்தும் வருகிறோம் ஆனால் எந்தப்படத்திலும் தவறுகள் இல்லாமல் இருப்பதில்லை வருடத்தில் மிகச் சிறந்தவை எனத் தேர்ந்தெடுக்கும் படங்களில் கூட தவறுகள் இருக்கத்தான் செய்கின்றன.

உதாரணமாக கதாநாயகன் தூரத்திலிருந்து பாடிக்கொண்டுவருகிறான் என்று வைத்துக்கொள்வோம் (நம் படங்களில்தான் கதாநாயகன் பாடிக்கொண்டே யிருக்கிறனே!) அப்போது அவனைத் தூரத்தில் காண்பிக்கும்போது பாட்டின் சப்தம் மிகவும் குறைவாகக் கேட்கவேண்டும், உடனே "குளோஸ் அப்' காட்சி காண்பிக்கப்படும்போது பாட்டின் சப்தம் பெரியதாகக் காண்பிக்கப்பட வேண்டும் அப்படியில்லாமல் எவ்வளவோ படங்களில் எவ்வளவு தூரத்திலிருந்தோ, அருகிலிருந்தோ பாடினுலும் ஒரே விதமாகத்தான் பாட்டு ரிக்கார்டு செய்யப்படுகிறது. இத்தவறிற்கு காரணம் ஒலிப்பதிவாளர் தான் என்றாலும் 'டைரக்டரும்' இதை கவனிக்கவேண்டும்.

அடுத்தபடியாக 'செட்டிங்' தவறு. ஒரே செட்டிங்கை உடைய காட்சியைப் படம் பிடிக்க மூன்று நான்கு நாட்களும் ஆகும் இம்மாதிரி சமயங்களில் செட்டிங்களும் மாருதபடி பார்த்துக்கொள்ளப்பட வேண்டும் எவ்வளவோ படங்களில் 'ஸீன் நடந்துகொண்டிருக்கும்போதே 'காந்தி மகான்' படம் இருக்கும் இடத்தில் 'நேருஜி' படம் வந்துவிடும் அதேபோல் 'நேருஜி' படம் இருந்த இடத்தில் காந்தி மகான்' படம் போய்விடும்! ஏனெனில் பாதி காட்சியை முதல் நாள் படமாக்கிவிட்டு 'செட்டிங்குகளை எடுத்துவிட்டிருப்பார்கள் மறுநாள் மறுபடியும் 'செட்'டை ஏற்பாடு செய்யும் போது படங்களை இடம் மாற்றி வைத்துவிடுவார்கள். சில சமயங்களில் பேசிக்கொண்டிருக்கும்போதே கதாநாயகியின் புடவையும் 'டக்' கென்று மாறுவதுண்டு!

கதாநாயகன் 'ஸ்டைலாக' தன் கைக் கெடிகாரத்தைப் பார்த்து 'மணி எட்டு ஆகிறது! நான் வருகிறேன்!' என்று சொல்லும்போது சுவர்க் கடிகாரத்தில் மணி ஒன்றரை ஆகியிருக்கும்! ரேடியோவை முடுக்கினவுடனேயே பாட்டு வந்துவிடும்! பின் பக்கத்திலிருந்து போட்டோ எடுத்தால் முன்புறம் அழகாக விழுந்திருக்கும் போட்டோவில்! மழையில் நனைந்து விட்டுவீட்டினுள் நுழையும்கதாநாயகி அடுத்த விநாடி சலவை செய்யப்பட்ட புடவையுடன் காட்சியளிப்பாள்!

'இதையெல்லாம் எங்கே சார் சாதாரண ஜனங்கள் கவனிக்கப் போருங்க?'—என்ற பட சம்பந்தப் பட்டவர்கள் சொல்லிவிடக்கூடாது கூடியவரையில் தவறுகள் இல்லாமல் இருந்தாலே படம் உண்மையாக நடப்பதுபோல் தோன்றும்!

பங்கால் நேஷனல் ஸ்டுடியோவின் "ஏக் ஔரத்' என்ற படத்தில் கதாநாயகன் தாராங்கும் தோஸ்ரீயும்.

நமது பம்பாய்க் கடிதம்

ஸ்ரீமதி நளினி ஜயவந்த்

★

எல்லாத் தொழிலைக் காட்டிலும், சினிமாத் துறையில்தான் ஜாதி மதபேதமின்றி ஆண்களும், பெண்களும் ஒரு மனப்பான்மையுடன் ஒத்துழைத்து வேலை செய்கிறார்கள் என்னும் விஷயம் நேயர்களுக்கு இப்பொழுது தெரிந்திருக்க வேண்டும் பம்பாய் சினிமாவில், ஹிந்துக்களைக் காட்டிலும், முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவர்கள் தான் அதிகம். தற்சமயம், இந்திய சினிமாவின் முதல் தர பட முதலாளிகளாகவும் (ஸ்ரீ கந்தார், ஸ்ரீ மெஹ்பூப்) நக்ஷத்திரங்களாகவும் (ஸ்ரீமதிகள் நர்கிஸ், ஸுரையா) திகழுபவர்கள் முஸ்லீம் மதத்தைத் தழுவினவர்களே ஆனால் இந்த நக்ஷத்திரங்களுக்கு நேர் ஈடாக, ஹிந்துமதத்தைச் சார்ந்த ஸ்ரீமதி நளினி ஜய வந்த் இப்பொழுது பம்பாயில் ஒரு பிரபல நக்ஷத்திரமாக விளங்கி வருகிறார்.

இவ்வூர் சினிமாவில் ஹிந்து நடிகைகள் மிகவும் குறைவு இந்த குறைந்த எண்ணிக்கையில், ஸ்ரீமதி நளினி ஜயவந்த் முதன்மையான ஸ்தானத்தில் இருப்பதுமல்லாமல், அவள் தன் சொந்தத் திறமையாலும், அழகினாலும் வசீகரத்தினாலும், பாட்டிலும், நாட்டியத்திலும் இருக்கும் பாண்டியத்தினாலும் எல்லா கீர்த்திபெற்ற நக்ஷத்திரங்கள் இருக்கும் ஸ்தானத்தை பெற்றுவிட்டாள்.

ஸ்ரீமதி நளினி ஜயவந்த் ஒரு உயர்ந்த மகராஷ்டிரிய குடும்பத்தில் 1926-ம் வருஷம் பம்பாயில் பிறந்தவர் இவர் சிறு வயது முதற்கொண்டு பாட்டிலும் நாட்டியத்திலும் மிகவும் ஊக்கம் செலுத்தி, ஒரு நல்ல உபாத்தியாயரின் உதவியால் நடனத்திலும் சங்கீதத்திலும் நல்ல தேர்ச்சிபெற்றார் 5-ம் வகுப்பு படித்து முடிக்குமுன் சினிமாவில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது 13-வயது இருக்கும்பொழுது இவருடைய அத்தங்காவான, ஸ்ரீமதி சோபனா சமர்த்து என்னும் பெயர்பெற்ற நடிகை, இவரை 1940ம் வருஷம் நேஷனல் ஸ்டூடியோவின் "ராதிகா" என்னும் படத்தில் நடிக்க வைத்தார் இப்படத்தின் டைரக்டரான ஸ்ரீ விரேந்திர தேசாய் என்பவரை காதலித்து, ஐந்து வருஷங்களுக்குப் பிறகு அவரை மணந்தார்.

"ராதிகா" என்னும் படத்தில், நளினி ஜயவந்த் மிகவும் வெற்றிகரமாக நடிக்கவே, இன்னும் அநேக படங்களில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. இப்படத்திற்குப் பிறகு, "சகோதரி", "நிர்தோஷ்", 'கண்ணாமூச்சி", "ஆதாப் அர்ஜ்", 'லோதோனே' 'ருன் ஜன்' 'வரஸ்தர்', 'அனேக யியார்' 'முகத்தர்' 'அங்கே முதலிய படங்களில் நடித்திருக்கிறார் பிலிமிஸ்த்தான் 'சமாதி என்னும் படத்தில் இவர் மிகவும் அபாரமாக நடித்தது பம்பாயையே கொள்ளை கொண்டுபோய்விட்டது இவள் தற்சமயம், "ஜாது" "நவ்ஜவான்" 'ஏக் நஜர்" "தோரா" என்னும் நான்கு படங்களில் நடித்துவருகிறார். இவருடைய நடிப்புத்திறமைக்கு காரணம் தன்னுடைய கணவன், ஸ்ரீ விரேந்திர தேசாய்தான் என்று சொல்லுகிறார்

அன்றொரு நாள் நளினி ஜயவந்தை அவருடைய மடுங்காவிலிருக்கும் வீட்டில் நான் பார்க்கச் சென்றபொழுது, அவர் ஒரு கட்டிலில், பூனைபோல் ஒடுங்கிபடுத்திருந்தார். அப்பொழுதுதான் ஒரு ஸ்டூடியோவிலிருந்த களைத்துவந்திருந்தார் என்னைக்கண்டதும், மிகுந்த முகமலர்ச்சியுடன் வரவேற்று, என்னுடையகேள்விகளை ஏற்கனவேயெதிர்பார்த்தவாபோல், மட மடவென்று கிராமபோனுக்கு சாவி கொடுத்தது போல், பேசினார்.

ஸ்ரீமதி நளினி ஜயவந்த்தான் நடிப்புத் தொழிலில் மிகவும் ஊக்கம் செலுத்தி நல்ல பெயர் எடுக்க முயன்று வருவதாகவும், சினிமாத் தொழிலும் மற்ற தொழில்களைப் போல். மிகுந்த உயர்ந்த தொழிலென்றும், நல்ல கண்ணியமுள்ள ஸ்திரீகள் நடிகைகளாகச்சேரவேண்டுமென்றும் சொன்னார் ஆனால், சினிமாத்தொழிலில், பட முதலாளிகள் என்று பெயர் பூண்டு, தீய எண்ணம் கொண்டவர்களும் இருக்கிறார்களென்றும், புதிதாக சினிமாவில் சேரவிரும்புபவர்கள் இப்பேர்ப்பட்டவர்களை அணுகாமல், நல்ல ஸ்டூடியோ சொந்தக்காரர்களை அணுகவேண்டுமென்றும் தெரிவித்தார். கடைசியாக, நளினியஜயவந்த் பாட்டுத்தெரிந்த நடிகைகளை படங்களில் பாட சங்கீத டைரக்டர்கள் அனுமதிக்கவேண்டுமென்றும் தனக்கு தென்னிந்தியாவில் தமிழ் படங்களிலும், டெக்னிகலர் (பலவர்ண) படங்களிலும், நடிக்க ஆவலாக இருப்பதாகவும் என்னிடம தெரிவித்தார்

ஸ்ரீமதி நளினி ஜயவந்த், மிகுந்த கூரியபுத்தியும், வசீகரமும் வனப்பும், நாகரீகமும் பொருந்தியவர். இவள் தன் கணவனான ஸ்ரீ விரேந்திர தேசாயுடன், மிகவும் அன்யோனமாகவும், அத்தியந்த பிரீதியுடனும் தாம்பத்திய வாழ்க்கையை நடத்திவருகிறார்.

—தி. மா. ராமச்சந்திரன்.

சிறுமிக்குப் பாராட்டு

★

சமீபத்தில் விழுப்புரம் ஜோதி கிரவுண்டு தியேட்டரில் குமாரி வஸந்த கோகிலத்தின் பரத நாட்டிய கச்சேரி நடந்தது சுமார் பத்து வயதுள்ள இச் சிறுமியின் நடன சாதுர்யமும், கலை ஞானமும் சபையினர் மனதை கவரச் செய்து பரவசப்படுத்தின குமாரியின் அபிநயங்களும், லயக்கட்டு, பாவம் முதலிய அம்சங்கள் பொருத்தமாயிருந்தன. இச்சிறுமி வயதில் சிறியவளாயினும் பரத நாட்டியக் கலையில் மிக்க உயர்தரமான திறமை அடைந்திருப்பதாகவும் நல்ல கீர்த்தியுடன்பிரகாசிப்பாள் என்றும் ஸ்ரீ ச. வி. சுந்தரரெட்டியார் சபையின் சார்பாகபாராட்டிப்பேசினார் நெல்லிக்குப்பம் பாரி அண்டு கம்பெனி மானேஜர் ஹாட்ஸன், லெப்டினெண்டு கர்னல் பிரான்ஸிஸ், ஸ்ரீமான்கள் கொண்டா ரெட்டியார், நாகராஜன் ஷண்முக உடையார் முதலிய பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

மூன்று தங்க பதக்கங்களும், மோதிரங்களும், இன்னும் அனேக பரிசுகளும் வஸந்த கோகிலத்திற்கு ஆசீர்வாதத்துடன் அளிக்கப்பட்டன.

இச்சிறுமி நெல்லிக்குப்பம் ஆலை பர்ஸனல் அஸிஸ்டெண்ட் ஸ்ரீ பீ. ஸ்ரீனிவாஸனின் புதல்வியும், நடன கலா ஸ்ரீமதி ரத்னாபாய் அவர்களின் மாணவியுமாவாள்.

ஸ்ரீமதி நளினி ஜயவந்த்

உலக நாடக மேடை

இந்தியாவில் நாடகம்

சக்திதாஸன் சுப்பிரமணியன்

II

இப்படி உலகத்து ரசிகர்களின் நன் மதிப்பைக் கவர்ந்த இன்னொரு நாடகம் மிருச்சகடிகம் சூத்ரககவி இயற்றியது அன்றைய சமூக வாழ்வை அப்படியே சித்தரிக்கும் அருமையான நாடகம் என்று எல்லோராலும் போற்றப்படுகிறது கி பி ஆரும் நூற்றுண்டில் வாழ்ந்த ஹர்ஷர் இயற்றிய ரத்னவளி என்கிற நாடகமும், நாகானந்தம் என்கிற நாட்டிய நாடகமும் அடுத்தபடி சொல்லக்கூடியவை

ஏழாவது நூற்றுண்டிலே வாழ்ந்த மகாகவி பவபூதியின் உத்தர ராம சரிதம் உள்ளத்தை உருக்கும் நாடகம் காளிதாசனுக்குச் சமமாக எண்ணத் தகுந்த நாடககவி இவரே

கி பி 850-ல் பட்ட நாராயண கவி என்பவர் இருந்தார் இவர் எழுதிய நாடகம் வேணிஸம்ஹாரம். ஒன்பதாம் நூற்றுண்டிலே வாழ்ந்த விசாக தத்தர் முத்ரா ராக்ஷஸம் என்கிற நாடகத்தை எழுதினுர்

ராக்ஷஸன் என்பவர் நந்த அரசனிடத்திலே முதல் மந்திரியாயிருந்தவர் இவரை சந்திர குப்தன் பக்கம் திருப்பவேண்டும் என்பதற்காக சாணக்கியன் செய்த ராஜீய சாகசங்கள் எல்லாம் இந்த நாடகத்திலே தெளிவாக்கப்படுகின்றன.

இத்துடன் இந்திய நாடகமானது க்ஷீண தசை அடைந்தது எனலாம் காரணம் என்னவென்றுல், வட இந்தியாவிலே நிலையான வல்லரசு எதுவும் நிலைக்கவில்லை சம்ஸ்கிருதமானது பேச்சு வழக்கிலிருந்து மறைந்தது

மொகலாயர் ஆட்சிக் காலத்தில் நாடகமானது அரசாங்கத்தாலும், பிரபுக்களாலும் நிராகரிக்கப்பட்டது ஆகவே. சாதாரண மக்களிடத்திலே நாடகம் தஞ்சம் புகுந்தது

ஆதிகாலம் தொட்டு இந்திய நாடக ஆசிரியர்களுக்கு உணர்ச்சிப் பொறியாக விளங்கியவை ராமாயணமும் மகா பாரதமுமே இந்த இரண்டு இதிகாசங்களிலிருந்தும் எவ்வளவோ நிகழ்ச்சிகளை நாடகமாக்கியிருக்கிறுர்கள்

நாடகமானது சாதாரண மக்களின் மடியிலே தவழ்ந்தாலும், முன்னே சொன்ன இந்த ஊற்றுக் கண் மாத்திரம் அடைபடாமல் எப்போதும் போலவே யிருந்தது

ராஜாங்க சபைகளிலிருந்தும், பிரபுக்களிடமிருந்தும் ஓடி வந்த நாடகத்தை சாதாரண மக்கள் எடுத்து வளர்க்கத் தொடங்கியபோது என்ன ஆயிற்று. இதற்கு முன்பு நாடகாசிரியர்கள் எப்படி ராமாயண மகா பாரதங்களிலிருந்து கதைகளை எடுத்துக் கொண்டார்களோ அதே மாதிரியாக அவர்களைப் பின்பற்றி இவர்களும் செய்தார்கள்

இமயம்முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள இந்திய மக்களின் இதயத்தை கவர்ந்த இதிகாச புருஷர் இரண்டு பேர் இராமன், கிருஷ்ணன் இந்த இரண்டு பேரது சரித்திர நிகழ்ச்சிகளையும் பொது மக்கள் கொண்டாடத் தொடங்கினுர்கள்.

யாத்திரை

இப்படிப்பட்ட கொண்டாட்டங்களில் ஒன்று யாத்திரை ஜ்வாத்திரை என்றும் சொல்வார்கள்.

வங்காள தேசத்திலே இது மிகவும் பிரபலமானது ஊர் ஜனங்கள் எல்லாரும் சேர்ந்து கிருஷ்ண பகவானுக்கு விழாக் கொண்டாடுவார்கள். கிருஷ்ண விக்கிரகத்தை எடுத்துக் கொண்டு ஊர்வலமாக யாத்திரை போவார்கள் ஊருக்கு வெளியே குளத்தங்கரையிலே போய் கிருஷ்ண விக்கிரகத்தைக் கீழே வைத்து விட்டு, கிருஷ்ண பரமாத்மாவின் லீலைகளை எல்லாம் நாடகமாக நடிப்பார்கள்

நாடகக் கொட்டகையோ, சீனே இடையாது எல்லாம் மரத்தடியில் தான் இயற்கையான காட்சிகள் அல்லவா? கண்ணனின் லீலைகளை எல்லாம் ஒவ்வொன்றுக நடித்துக் காட்டுவார்கள் வங்காளத்து மக்களது மனத்தை வசீகரித்த விழா இது

அமரத்துவம் பெற்ற கீத கோவிந்தத்தை இயற்றிய ஸ்ரீ சைதன்யர் இந்த மாதிரி ஜாத்திரை நாடகங்களில் மிகவும் ஈடுபட்டார். பன்னிரண்டாம் நூற்றுண்டிலே வாழ்ந்த இப் பெரியார்தான் நவீன வங்காளி நாடகத்தின் ஆதிகர்த்தா எனலாம்

ஜ்வாத்திரை கிளம்புகிறது என்று சொன்னுல் அங்கே கௌரங்க தேவரைப் பார்க்கலாம். கிருஷ்ணனது லீலைகளை அப்படியே உணர்ச்சியோடு பக்தி ரஸம் ததும்பப் பாடியும் ஆடியும் காட்டுவார் அவர் ஸ்ரீ சைதன்யரின் கானுமிர்தத்தைக் கேட்டு அப்படியே மெய்மறந்து போவார்கள் ஜனங்கள்.

ரஸதாரிகள்

வட இந்தியாவில், மதுராபுரியைச் சூழ்ந்த பிரதேசங்களில் இந்த ரஸக்கிரீடை உற்சவம் நடக்கிறது அதாவது என்ன என்றுல் கிருஷ்ண பரமாத்மாவின் ரஸக்ரீடையை நடித்துக் காட்டுவது அவ்வளவுதான் ராதையாகவும், கிருஷ்ணனுகவும் கோபிகளாகவும் வேஷம் போட்டுக்கொண்டு, நல்ல பௌர்ணமி நிலவிலே இவர்கள் நடிப்பார்கள் பிருந்தாவனத்திலே இன்றும் இதைக் காணலாம்.

ராம லீலா

மத்திய இந்தியாவிலே மிகவும் பிரபலமானது இந்த ராம்லீலா உற்சவம் தான்

ஸ்ரீ ராமனின் விழாவுக்குத்தான் ராம் லீலா என்று பெயர் இந்த விழாவின்போது ராமாயணத்தை நடித்துக் காட்டுவார்கள். ஸ்ரீ துளசிதாஸரின் ராமாயணத்திலிருந்து பாட்டுக்களைப் பாடுவார்கள்.

தசாவதாரம்

மகாராஷ்டிரத்திலே, குஜராத்திலே மிகப் பிரபலமானது தசாவதாரம். மச்சாவதாரம் முதல் பன்னிரண்டு அவதாரங்களையும் அங்கே நடிப்பார்கள்

புர கதா

ஆந்திர தேசத்திலே புரகதா என்று ஒன்றுண்டு அதாவது இரண்டே பேர் ஒரு கதையை நடிப்பது. அது ஆந்திர தேசத்திலே மிகவும் பிரபலமானது நம்முடைய தமிழ் நாட்டிலே தேசிங்கு ராஜன் கதையைப் பக்கவாத்தியங்களுடன் இரண்டு பேர் பாடிக்கொண்டு வருவதைப் பார்க்கிறேமல்லவா? ஏறக்குறைய இதே மாதிரி தான்.

ஹரிகதை

நம்முடைய தமிழ் நாட்டிலே மிகவும் பிரபல்யமானது ஹரிகதை அல்லது. காலட்சேபம் இதுவும் நாடக வகையிலே சேர்க்கப்பட வேண்டியதுதான்

தெருக்கூத்து

தமிழ் நாட்டிலே தெருக்கூத்து சர்வ சாதாரணம் இதற்காகக் கூத்தாடிகள் என்று ஓர் இனத்தவரே இருக்கிறுர்கள். மாரியம்மன் கோவில் உற்சவத்திலே "பள்ளாடிக் காப்புக் கட்டுவது" என்று ஒரு நிகழ்ச்சியுண்டு தஞ்சாவூரிலே பச்சைக் காளி, பவளக் காளி உற்சவம் என்று ஒன்றுண்டு. அது இப்போதும் நடக்கிறது அந்த உற்சவத்தின்போது முகமூடி வேஷம் அணிந்து தெருத் தெருவாக நடிப்பார்கள்.

இன்னென்று சிறுத்தொண்டர் உற்சவம். இந்தக் கதையையும் வேஷம் அணிந்து தெருத் தெருவாக வந்து நடிப்பதுண்டு

இப்படியாக நடுத் தெருவில் நின்று கொண்டிருந்த நாடகமானது, பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் தான் மறுபடியும் அரங்கம் ஏறிற்று.

உண்டியல் பணம்

'கார்த்திகேயன்'

"இன்று கார்த்திகை சாயங்காலம் ஐந்து மணிக்கெல்லாம் வந்து விடுங்கள் மறந்துவிடப் போகிறீர்கள் என்று ஞாபகப்படுத்தினுள் ஸ்ரீமதி ஆபீஸுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த தன் கணவன் ஸ்ரீதரனிடம்.

"ஆஹா! தேவியின் உத்தரவுப்படியே ஆகட்டும்,' என்று கொஞ்சலாகக் கூறிவிட்டுக் கிளம்பினுன் ஸ்ரீதரன் கணவன் வீதியில் இறங்கிப்போவதைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீமதி, அவன் தலை மறைந்தவுடன் உள்ளே வந்தாள் ஸ்ரீமதி சாப்பிட்டுவிட்டு காரியங்களெல்லாம் முடித்துக்கொண்டு வருவதற்குள் மணி பன்னிரண்டு அடித்துவிட்டது. வெற்றிலைத் தட்டுடன் கூடத்தில் வந்து உட்கார்ந்தாள் அவள். "இன்று சாயங்காலம் அந்தப் பட்டுப் புடவையைக் கட்டிக்கொள்ளலாமா?" என்று அவள் நினைத்த அதே சமயம் அதற்கு முந்திய மாதம் நடைபெற்ற சம்பவங்கள் அவளுக்கு ஞாபகம் வந்தன.

* * *

ஸ்ரீதரன். மாதம் ஐம்பது ரூபாய் சம்பாதிக்கும் ஒரு சாதாரண குமாஸ்தா. ஸ்ரீமதியின் தந்தையோ ஒரு கிராமாந்திரப் பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயர் ஸ்ரீமதிக்கு பட்டுப் புடவை வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டும் என்பது வெகு நாளைய ஆசை. தனக்குக் கல்யாணம் ஆனதும் வாங்கிக் கட்டிக்கொள்ளலாம் என்று மனதைத் தேற்றிக்கொண்டாள் ஒரு ஏழை குமாஸ்தாவுக்கு வாழ்க்கைப்படப்போகிறேம் என்று அவள் கண்டாளா? தலை தீபாவளிக்குக்கூட அவளுடைய ஆசையைப் பூர்த்தி செய்ய ஸ்ரீதரனுலோ, அவளுடைய தகப்பனுராலோ இயலவில்லை இந்தத் தீபாவளிக்காவது நிச்சயம் வாங்கிவிட வேண்டும் என்று துடி துடித்துக் கொண்டிருந்தாள்

தீபாவளிக்கு இரண்டே தினங்கள் தான் இருந்தன வழக்கம் போல் ஸ்ரீகரன் மாலையில் வீட்டுக்கு வந்தான் உடைகளை மாற்றிக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தான் ஸ்ரீமதி சூடான காப்பியைக்கொண்டு வந்து மேஜைமேல் வைத்தாள்.

"ஸ்ரீமதி உனக்கு அதிருஷ்டமில்லை எங்கள் ஆபீஸில் இந்த வருஷம் 'போனஸ்' சம்பளத்தில் பாதிதான் கொடுத்தார்கள். லாபம் அதிகமாக வரவில்லையாம். சம்பளத்தோடு கையில் எழுபத்தைந்து ரூபாய்தான் இருக்கிறது. நீ சொல்கிற பட்டுப் புடவையைப் பார்த்தால் நூறு ரூபாய்க்கு மேல் ஆகிறது சரி, எப்படியோ வாங்கிவிட்டாலும் இந்த மாதம் வீட்டு வாடகைக்கும் சாமான்களுக்கும் பணத்துக்கும் எங்கே போவது?"

இதைக்கேட் ஸ்ரீமதி ஆத்திரத்துடன் "உங்களால் முடியாவிட்டால் என் அதிருஷ்டத்தை ஏன் குறை கூறுகிறீர்கள்? வாங்க இஷ்டமில்லாவிட்டால் முடியாது என்று சொல்லிவிட்டுப் போங்களேன் ஏன் பொய்சொல்கிறீர்கள்? கைச்செலவிற்கு வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று உண்மையைச் சொல்லிவிடுங்களேன்" என்றுள்.

ஆபீஸில் இயந்தரத்தைப்போல் உழைத்துவிட்டு வீட்டிலாவது கொஞ்சநேரம் சுகமாக இருக்கலாம் என்று வந்த ஸ்ரீதரனுக்கு இதுபெரிய ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் மூட்டியது.

"ஆமாம்! ஸ்ரீமதி எனக்கு வாங்க இஷ்டமில்லைதான். உன் அப்பா வாங்கிக்கொடுத்தால் கட்டிக்கொள் நான் வேண்டாமென்று சொல்லவில்லை. தீபாவளிக்கு நான் ஒன்றும் வாங்கப் போவதில்லை பொய்யாம், பொய்! உன்னிடம் எத்தனை தடவை நான் இது மாதிரி பொய் சொல்லியிருக்கிறேன்?" என்று மொழிந்துவிட்டு ஆபீஸரைக்குள் நுழைந்துவிட்டான்

ஸ்ரீமதிக்கு இப்பொழுதுதான் செய்த பிசகு தெரியவந்தது. ஆபீஸில்

"நேற்று எங்க ஆபீஸ்லே" யார் நிறைய இட்லி சாப்பிட முடியும்' னு ஒரு பந்தயம் நடந்தது என்னுலே 20 இட்லிதான் தின்ன முடிஞ்சுது..."

"சரி...சரி! நான் இங்கே பந்தயத்துக்கு இட்லி பண்ணலே; டிபனுக்குத்தான் வாத்து வெச்சிருக்கேன்...!"

வேலை செய்து களைப்படைந்த அவருடைய மனதிற்கு உற்சாகமூட்டுவதற்குப் பதிலாக அவரை ஆத்திரப்படும்படி செய்துவிட்டோமே! என்று அவள் நினைக்கும்பொழுது கண்களில் நீர் மல்கியது மேஜை மீது வைத்திருந்த காப்பி ஆறி சில்லிட்டுப் போயிருந்தது வீட்டில் பயங்கர அமைதி குடிகொண்டிருந்தது இரவு

சாப்பிடும்பொழுதுகூட ஒருவருக்கொருவர் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

மறுநாட் காலை எட்டுமணிக்கே சாப்பிட்டுவிட்டு ஸ்ரீதரன் ஆபிஸிற்குப் போய்விட்டான், பகல் பூராவும் ஸ்ரீமதிக்கு ஒரு யுகம்போல் தோன்றியது மறுநாள் பொழுது விடிந்தால் தீபாவளிப்பண்டிகை. தீபாவளியும் அதுவுமாக இப்படிச் சண்டை போட்டுக்கொண்டால் வீடு உருப்படுமா? என்று எண்ணினுள் ஸ்ரீமதி ஏதோ இரண்டு பட்சணங்கள் பண்ணிவைத்தாள் மாலை ஐந்துமணியானதும் வாசலில் நின்றுகொண்டு கணவனின் வருகையைஎதிர்பார்த்துக்கொண்டிருந்தாள், எப்படியாவது அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று அவள் மனம் துடித்தது தெருக்கோடியில் ஸ்ரீதரன் காகிதத்தால் சுற்றப்பட்ட ஒரு சாமானைக்கையில் எடுத்துக்கொண்டுவருவதைப்பார்த்தாள் உள்ளே சென்றுள்

'ஸ்ரீமதி. ஸ்ரீமதி.' என்று கூப்பிட்டுக்கொண்டே புடவையை ஸ்ரீமதியின் கையில் கொடுத்தான்.

'எங்கிருந்து முளைத்தது பணம்? நான்பட்டுப்புடவைவேண்டாமென்று சொல்லவேண்டுமென்றல்லவா நினைத்தேன் என்று ஆச்சரியத்துடன் கூறினுள்,

'ஸ்ரீமதி எல்லோருக்கும் ஆசை என்று ஒன்றிருக்கிறதல்லவா? அதைப் பூர்த்தி செய்யாவிட்டால் என்ன பிரயோஜனம்? இன்று காலையில்தான் இதை எண்ணிப் பார்த்தேன். என் நண்பர் ஒருவரிடமிருந்து எழுபது ரூபாய் கடன் வாங்கி இதை வாங்கினேன்,' என்று உணர்ச்சி ததும்பக் கூறினுன்.

'கடனு வாங்கினீர்கள்? அப்படி எதற்கு இந்தப் புடவை? நேற்று சாயங்காலம் உங்களை நோகச்செய்துவிட்டேனே? என்று ஏங்கிக்கொண்டிருந்தேன் தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டுவிட வேண்டு

மென்று உங்கள் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தேன்,' என்று கூறிக்கொண்டே கண்களில் மல்கிய நீரை புடவையால் துடைத்துக்கொண்டு நின்றுள் ஸ்ரீமதி.

இந்தா ஸ்ரீமதி ஏன் வீணுக அழுகிருய்? உன் ஆசையைப் பூர்த்தி செய்துவிட்டேன். நாளைக்காலை நீ இதைக் கட்டிக்கொண்டவுடன் ஒரு புது அழகுடன் விளங்கப் போகிருய்!' என்றுன் ஸ்ரீதரன்.

* * *

.........சட்டென்று கண் விழித்தாள் ஸ்ரீமதி அடாடா!' பழைய சம்பவத்தை நினைத்துக் கொண்டே தூங்கிவிட்டோமே மணி நாலரை ஆகிவிட்டதே அவர் வரும் சமயமாயிற்றே, என்று எண்ணிக்கொண்டே எழுந்தாள் காப்பி போட்டு முடித்துக்கொண்டு, பட்டுப் புடவையை எடுத்து கட்டிக்கொண்டு அலங்காரம் செய்வதற்குள் மணி ஆறுகிவிட்டது 'ஏன் இன்னும் அவர் வரவில்லை!,' என்று எண்ணிக்கொண்டே உள்ளுக்கும் வாசலுக்கும் நூறு தடவை நடந்துவிட்டாள் மணி ஆறரை ஆகிவிட்டது அவரும் வரவில்லை. எல்லா வீட்டிலும் வரிசையாக ஏற்றி வைத்திருந்த விளக்கெல்லாம் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது

ஸ்ரீமதி கூடத்தில் மாட்டியிருந்த வெங்கடாசலபதி படத்திற்கு முன்பு மெழுகிக் கோலமிட்டு, அதன் மேல் பலகையை வைத்து அகல் விளக்கையெல்லாம் வரிசையாக வைத்து ஏற்றினுள் நமஸ்காரம் செய்து எழுந்து நின்று கண்களை மூடிக்கொண்டு கை கூப்பித் தியானித்துக் கொண்டிருந்தாள் பத்து நிமிஷ நேரம் அப்படியே நின்று கொண்டிருந்தாள் உடம்பில் ஏதோ ஒரு உணர்ச்சி ஏற்படவே, கண்களை விழித்துப் பார்த்தாள்.

'ஐயோ!' பட்டுப் புடவை நெருப்புப் பற்றி எரிகிறதே!' என்று கூச்சலிட்டுக்கொண்டே அங்குமிங்கும் ஓடினுள் காற்றின் வேகத்தால் நெருப்பு இன்னும் நன்ருகப் பிடித்துக்கொண்டு எரிந்தது உடனே கொல்லைக்கு ஓடினுள் தொட்டியில் இருந்த தண்ணீரை செம்பினுல் மொண்டு மேலே ஊற்றிக்கொண்டாள் திடீரென்று மயக்க முற்றுக் கீழே விழுந்தாள்.

'ஸ்ரீமதி! ஸ்ரீமதி!'

கூடத்தில் நின்றுகொண்டிருந்த ஸ்ரீதரன் பதில் வராததைக் கண்டு வியப்படைந்தான் ஸ்வாமி படத்திற்கெதிரில் அவனைப் பார்த்து நகைப்பதுபோல் அகல் விளக்குகளெல்லாம் எரிந்து கொண்டிருந்தன சமயலறை, ஆபீஸறை, படுக்கையறை,

எல்லாவற்றிலும் சென்று பார்த்துவிட்டான். ஒன்றிலும் ஸ்ரீமதியைக் காணவில்லை. கொல்லைப்புறத்துக்கு ஓடினுன்.

'ஐயோ! ஸ்ரீமதி! ஏன்? என்ன வந்துவிட்டது புடவையில் தீப்பிடித்துக்கொண்டு எரிந்துவிட்டதுபோலிருக்கிறதே?' என்று சொல்லிக்கொண்டே விழுந்தான்.

* * *

கண்-விழித்துப் பார்த்தான் ஸ்ரீமதி உடம்பில் பல நெருப்புக் காயங்கள். எண்ணெய் போடப்பட்டிருந்தது பக்கத்தில் ஸ்ரீதரன் உட்கார்ந்திருந்தான். எழுந்திருக்க முயன்றுள்

'ஸ்ரீமதி. எழுந்திருக்க வேண்டாம் நான் நேரங் கழித்து வந்ததினுல் தானே உனக்கு இவ்வளவும்? எப்படி உன் புடவையில் தீப் பிடித்துக்கொண்டது?

"அகல் விளக்கையெல்லாம் ஏற்றிவிட்டுச் சுவாமி படத்திற்கு முன்பு தியானித்துக்கொண்டிருந்தேன் குத்து விளக்கில் பட்டு என் புடவை தீப் பிடித்துக்கொண்டது."

'எனக்கு அப்பொழுதே தெரியும்."

'என்ன?'

'ஸ்ரீமதி நான் உன்னிடம் இன்று வரையில் ஒரு பொய்தான் கூறியிருக்கிறேன் நான் உனக்கு வாங்கிக் கொடுத்த பட்டுப் புடவைக்குப் பணம் என் நண்பர் கொடுக்கவில்லை. என் தாயார் இறக்கும்பொழுது என்னிடம் ஓர் உண்டியலைக்கொடுத்துவிட்டு அதைத் திருப்பதி வெங்கடாசலபதிக்குச் சேர்த்துவிடு என்று சொல்லிவிட்டு இறந்தாள் அந்தப் பணந்தான் இந்தப் பட்டுப் புடவை. நான் அதை அதாவது அவ்வுண்டியலை உடைக்கும்பொழுதே அபசகுனம் போல் என் அறையில் மாட்டியிருந்த என் தாயார் படம் கீழே விழுந்து உடைந்தது. அதன் பலன்தான் இப்போது......'' என்று சொல்லிவிட்டு விம்மினுன்

'அழாதீர்கள். இனிமேல் எனக்குப் பட்டுபுடவையே வேண்டாம் அம்மாவின் பணத்தை எப்படியாவது சேர்த்து திருப்பதிக்குப் போய் சுவாமிக்குச் சேர்த்து விடுங்கள்' என்று ஸ்ரீமதி கூறியவுடனே இருவர் முகத்திலும் புன்னகை தோன்றி மறைந்தது.

ராமானுச நூற்றந்தாதி

காயகசிகாமணி அரியக்குடி ஸ்ரீராமானுஜய்யங்கார் ஸ்வரப்படுத்தியது

ஆண்டுகள் நாள் திங்களாய் நிகழ்காலமெல்லாம் மனமே
ஈண்டுபல் யோனிகள் தோறுழல்வோம் இன்றோரெண்ணின்றியே
காண்தகு தோளண்ணல் தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்
பூண்ட அன்பாளன் ராமானுசனைப் பொருந்தினமே

பொருந்திய தேசும்பொறையும் திறலும் புகழும் நல்ல
திருந்திய ஞானமும் செல்வமும் சேரும் செறுகலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்தெடுத்தளித்த
அருந்தவன் எங்களி ராமானுசனை அடைபவர்க்கே.

16-வது பாட்டு

ஹிந்துஸ்தானி ராகம்: பாகேஸ்ரீ தாளம்: ரூபகம். (6-அக்ஷரம்)

X
ஆ: ஸகாம தநீஸ்—அ: ஸ(நி)நீதபம காரிஸ.

(22—வது கர்த்தா காஹரப்ரியாவில் ஜன்யம்)

X இந்த அடையாளம் காகலி நிஷாதம்.

			X
; ரிஸ்ா நிதா தா ;	மதநீ தா மா ; நிப	கா ; மா தா தா . நி	ஸ்ா நீ ரிஸ் ஸ்ா ; ; ‖
ஆண் . டு கள் நாள்	திங் களாய் நிகழ்	கா ல மெல்லாம்	ம ன மே
; நிரி ஸ நிதா மதாநி	தா மா த பா கா ;	பம மக மா . தா .	நீ ; மதநி ரிஸ்ா ; ‖
ஈண் . டு பல் யோ னி	கள் தோ றுழல்வோம்	இன் . றோ ரெண்	ணின் றி . . யே ‖
		X	X
; கமா தநீ ஸ்ா :	ஸ்ா ; ஸ்ா ரிரி ஸ்ஸ்	நிதா நீ ஸ்ரி க்ரீ	ஸ்நி ரிஸ் ஸ்த ஸ்நி நித தா ‖
காண் தகு தோ	ளண் ணல் தென்	னத்தியூ ரர்	க ழ லி ணை க்கீழ் ‖
; தா தா . நீ	தா , தா ; ; மத	தா ஸ்நி நீ நித கம மப நிப	கா கா கா மா கம தநி . ‖
பூண் ட அன்	பா ளன் ரா .	மா . . னு சனை . . .	ப் பொருந் தின மே . ‖
X			
ஸ்ா—ஸ்ா ஸ்நி ரிஸ் நீ தா	தா . மதநீ தா மா	மா ; மப நிப கா :	கா மா தா நீ ஸ்ா ; ‖
. —பொருந் திய	தே சும் பொறை	யும் தி ற லும்	பு க ழும் நல் ல ‖
X			
; தா நீ க்ரி ஸ்ா நி	தநி ரிஸ் நீ தா கா .	மதநீ தா மா மா ;	நிப கா மதநி ரிஸ்ா ; ‖
தி ருந் தி . ய	ஞா னமும் செல்	வ மும் சே ரும்	செ று க லி யால் ‖
	X		X
; கா மா தா . நீ	ஸ்ா ஸ்ா ஸ்நி ரிரி ஸ்ஸ்	நிதா நீ ஸ்ரி க்ரீ	ஸ்நி ரிஸ் ஸ்த ஸ்நி நித தா ‖
வருந் தி ய	ஞா லத்தை வண்	மை யி னால் வந்	தெ டுத் த ளி த்த ‖
; கா மா தா தா ;	தா தா நீ நி தாம	மத தஸ் ஸ்நி நீ நிதாம	மப நிப கா மா கம தநி ‖
அ ருந் த வன்	எங் க ளி ரா	மா . . னு சனை . .	அ டை பவர்க் கே . . ‖

ஸ்ா —

([illegible])

நினைவிருக்குமா?

ஸீதா

அன்று திவான்பகதூர் சங்கரன் பிள்ளையின் ஒரே மகளுக்குக் கலியாணம் தெருவை 'வளைத்துப் போடப்பட்டிருந்த அழகிய பந்தலில் விதவிதமான வர்ண விசித்திரங்களுடன் மிளிர்ந்த மின்சார விளக்குகள் இரவைப் பகல்போலாக்கின உள்ளே எள்ளுப் போட்டாலும் தரையில் விழாத படி ஜனக் கூட்டம் பார்க்குமிடமெல்லாம் பிரமுகர்களின் தலைகள்; சரிகைக் குல்லாக்களும் வழுக்கைத் தலைகளும் மின்சார ஒளியில் போட்டியிட்டுக் கொண்டு 'டால்' வீசின பிரபல நாகஸ்வர வித்வான் செம்பனார் கோவில் ராமசாமி தன் வாத்யத்தில் எழுப்பிய இன்னிசை கேட்டோர் காதில் 'இன்பத் தேன் வந்து பாய்வது' போல் புகுந்து பரவசமடையச் செய்தது பந்தலுக்குள் நுழைய முடியாத ஜனங்கள் வீதி நெடுக நின்று அத்தெய்வீக கானத்தை ரஸித்துக் கொண்டிருந்தனர்.

ராமசாமி மோஹன ராகத்தை அலசிப் பிழிந்து கொண்டிருந்தான் மகுடியின் ஓசையில் நாகம் வெறி கொண்டு மயங்குவதையொத்திருந்தது பல சங்கீதப் பிரியர்களின் நிலை. வித்வானது அபூர்வ கற்பனைகளும், நவநவமான பிடிகளும் அந்த ராகத்துக்கே ஒரு தனி அழகளித்தன 'அவன் விரல்களில் தான் என்ன அமானுஷ்ய சக்தி இயக்குகின்றதோ? என்று வியக்கும்படியாக இருந்தது

மெல்லென வீசிய காற்றிலே மிதந்து சென்று எத்தனையோ ஜனங்களுக்கு இன்பமளித்த கானம் தெருக்கோடியில் உயிருக்கு யமனுடன் மன்றாடிக்கொண்டிருந்த ஒரு ஜீவனின் செவியிலும் புகாமலில்லை பல நாள் பட்டினியுடன் தள்ளாடிக்கொண்டே வந்த அநாதைப் பரதேசியை அன்று பகலில் கலியாண வீட்டு வேலையாட்கள் சோறு போடாமல் விரட்டியடித்திருந்தனர். அவன்தான் இப்போது இங்கே சாவை எதிர் நோக்கிக்கொண்டிருந்தான் தெரு நாய்கள் கூட எச்சிலைகளை வேண்டி பந்தலருகே குழுமிவிட்டன அவ்வேழையின் மரணம் யாரும் கவனிப்பாரற்றபடி வீதியின் ஓரத்தில் அவனைச் சந்திக்க வந்தது. அந்த அற்புதமான சங்கீதம் கூண்டு விடுதலையடையப் போகும் விருந்து ஆத்மாவுக்கு ஒரு கால் நிம்மதியளித்திருக்கலாம் ஆனால் அவனது காய்ந்த தொண்டையை நனைக்க பயன் படவில்லை.

'தாகம்—தாகம்' மரண தாகத்தைத் தணிக்க ஒரு பொட்டுத் தண்ணீர் தருவார் யாரும் அருகிலில்லை மேலே சொருகிக் கொள்ள முயன்ற குழி விழுந்த அக் கண்களின் பார்வை சில அடி தூரத்துக்கப்பாலிருந்த முனிஸிபல் குழாயின்மீது விழுந்தது தண்ணீர், தண்ணீரென்று ஓரே ஸ்மரணையாயிருந்தவனுக்கு அதைக் கண்டதும் உடலில் சிறிது வலுவேற்படவே, பிராணனைக் கையில் பிடித்துக்கொண்டு முன்னால் நகர்ந்தான் அங்குலம் அங்குலமாக ஊர்ந்து சென்ற அவ்வெலும்புக்கூடு குழாயடியைச் சேரும்வரை யமனும் காத்திருக்கவில்லை

அவனது உலர்ந்த உதடுகள் அசைந்தன 'மகனே' இதோ வந்துவிட்டேனடா என்று முணுமுணுத்தான் அவன் ஐம்பத்தேழு வருட வாழ்க்கையில் ஓரே ஒரு சம்பவந்தான் சாகுந்தறுவாயிலும் அவன் மனக்கண் முன் நின்றது இவ்வுலகினின்று பிரிகையிலும் அந்த ஒரு நினைவையே சுமந்து சென்றது அவன் ஆத்மா.

* * *

ஒரு வாரமாக விடாமல் கொட்டிய மழையின் பலனாக எங்கும் ஓரே வெள்ளக்காடு உடைப்பெடுத்துக் கொண்ட சுருணையாற்றின் கரைகளை கும்பனூர் கிராமத்தார் வெகு சிரமத்துடன் செப்பனிட்டு சேதம் அதிகமேற்படாமல் தடுத்திருந்தனர். ஆயினும் கிராமத்தைச் சுற்றி எங்கும் இடுப்பளவுக்குத் தண்ணீர் தேங்கி நின்றது பல குடிசைகள் நீருள் மூழ்கிக் கிடந்தன 'ஹோ' வென்ற பேரிரைச்சலுடன் ஓடிய வெள்ளத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு படித்துறையில் நின்றுகொண்டிருந்தான் படகோட்டி பக்கிரி நாற்பது வருஷங்களாகத் தண்ணீரோடு பழகிய அவன் மனதிலேயே ஆற்று வெள்ளம் சிறிது கலக்கமேற்படுத்தியது அவனது முடிவை எதிர்பார்த்து சுற்றி நின்ற பிரயாணிகளின் முகத்தில் ஆவலும் கவலையும் படர்ந்திருந்தன

வாயிலிருந்த பீடித்துண்டையெடுத்து ஆற்றிலெறிந்தான் அவன் கண்ணிமைக்குமுன் ஆறு அதை விழுங்கிவிட்டது விதி அங்ஙனமிருந்தால் நம் கதியும் அப்படித்தானே ஆகும்? என்று பக்கிரி சிந்தித்தான். அவன் மௌனத்தினால் பிரயாணிகளின் பரபரப்பு வளர்ந்ததேயன்றிக் குறையவில்லை

"என்ன ஐயா, ரொம்ப நேரமாய் யோசனை செய்கிறீரே......" என்றார் படகிலேற வந்திருந்த குடும்பத்தின் தலைவர் அவரது மனைவியும் சிறு மகளும்தான் உடன் நின்றனர்

"ஸ்வாமி என்னைக் கேட்டால், பேசாமல் திரும்பி ஊருக்குப் போய்விடுங்கள் என்று தான் சொல்வேன் ஆற்றின் இழுப்பு இன்றைக்கு ஒரே வெறி பிடித்த வேகத்துடனிருக்கிறது "என்றான் பக்கிரி.

அவர் முகத்தில் ஏமாற்றம் தோன்றியபோதிலும் அதோடு விட்டுவிடாமல் இன்னும் வற்புறுத்தினார் ஒன்றன் பின்னொன்றாக ரூபாய் நோட்டுகளை யெடுத்து பக்கிரியிடம் நீட்டினார் எப்படியாவது அன்று ஆற்றைக் கடந்து அக்கரை சென்றாகவேண்டும் அவருக்கு அந்நிமிஷத்தின் அவசரத்தில் மரணபயம் கூடப் பெரிதாகத் தோன்றவில்லை

எதிர்க்கரையிலிருந்தது வரகூர் கிராமம். ஆற்றிற்குக் குறுக்கேயிருந்த வண்டிப்பாலம் மழையாலும், வெள்ளத்தாலும் சேதமடைந்து உபயோகிக்க முடியாமலிருந்தது அப்பிரயாணியின் பணக்கார உறவினரொருவர் வரகூர் கிராமத்தில் நோய் வாய்ப்பட்டு மரணத்தருவாயிலிருப்பதாக தந்திச் செய்தி வந்ததன்பேரில் இவர் அவரைக்காண ஓடிக்கொண்டிருந்தார் அவர் இறக்குமுன் தாம் போய்ச் சேர்ந்தால் உயில் தமக்குச் சாதகமாக அமையலாம் என்ற நம்பிக்கைதான் இப்படி ஆபத்தைப் பொருட்படுத்தாத வகையில் ஆட்டி வைத்தது

சற்று நின்றிருந்த மழைத் தூறல் மீண்டும் தொடங்கியது வாதப் பிரதிவாதங்களும் ஓர் முடிவுக்கு வந்தன படகைக் கட்டியிருந்த கயிறை அவிழ்ப்பதில் முனைந்தான் பக்கிரி. பிரயாணிகள் படகிலேறிக் கொண்டனர் பக்கிரியின் மகன் சின்னப்பன் தானும் ஏறித் தந்தையின் ஸ்தானத்துக்கருகில் அமர்ந்தான் படகு கிளம்பியதுமே துடுப்பின் தேவையில்லாமல் வேகமாக நீரோட்டத்தில்மிதந்து செல்லத் தொடங்கிற்று. அதே திசையில் இன்னும் பதின்மூன்று கல் தூரத்தில் இருந்தது வரகூர் கிராமம் இந்த ரீதியில் ஆபத்தில்லாமல்

போனால் முக்கால்மணி நேரத்துக்குள் போய்ச் சேரலாம்.

ஆனால்........?

எங்கிருந்தோ கிளம்பிய ஒரு பேய்க்காற்று நிமிஷத்துக்கு நிமிஷம் வலுத்து ஆற்று நீரில் அலைகளெழுப்பிக் கொந்தளிக்கச் செய்தது படகு இருபுறமும் சாய்ந்து பயங்கரமாய் ஆடியது. எதற்கும் துணிந்து கிளம்பிய பிரயாணியின் முகம் பீதியால் வெளுத்திருந்தது. அவர் மனைவியும் மகளும் கிட்டத்தட்டக் கண்ணீர் விடும் நிலையிலிருந்தனர் ஆபத்தின் கடுமையை உணர்ந்தவனாயினும் பக்கிரி ஒன்றும் பேசவில்லை. தன் முழுத் திறமையையும் உபயோகித்துப் படகைச் சமாளிக்க முயன்றுகொண்டிருந்தான் ஆனால் அவன் மகன் சின்னப்பனோ ஒன்றையும் பொருட்படுத்தாத அமைதியுடன் வீற்றிருந்தான்

அடேயப்பா! பார்த்தால் பதினைந்து வயதுகூட மதிப்பிட முடியவில்லை இந்தப்பயலுக்குத்தான் என்ன நெஞ்சு உரம்!' என்று பிரயாணி நினைத்துக்கொண்டார் 'சடக்' கென்று உள்ளே பாய்ந்து அவர்கள் முகத்தை நனைத்தது ஒரு பெரிய அலை அதற்குமேல் அவரால் பேசாதிருக்க முடியவில்லை 'ஐயா படகு கவிழ்ந்துவிடும் போலிருக்கிறதே!' என்று பதறினார்

பக்கிரி அவரை அலட்சியமாய் ஒரு பார்வை பார்த்தான். 'முட்டாள் மனுஷ்யா. அத்தனை முரண்டு செய்து கொண்டு என்னைக் கிளப்பி விட்டாயே இப்போது பயந்து என்ன பிரயோசனம்?' என்பதுபோலிருந்தது அப் பார்வை.

ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றாக அலைகள் மோதின. ஏற்கெனவே நல்ல பாரத்துடன் அழுந்தியிருந்த படகு நீரால் வேறு நிரம்பிக் கொண்டே வந்தது

'இன்னும் வரகூர் கிராமம் எவ்வளவு தூரமிருக்கும் ஐயா? என்று அவர் கேட்டார்.

'அதைவிட யமலோகம்தான் சமீபத்திலிருக்கும்போல் தோன்றுகிறது ......முதலில் உயிருடன் தப்பிக் கரை சேர்ந்தோமானால் போதாதா?' என்றான் பக்கிரி. உள்ளூர அவனுக்கிருந்த எரிச்சல் இவ்வார்த்தைகளில் வெளிப்பட்டது

'அப்படியானால் தோணி கவிழுவது நிச்சயந்தான் என்கிறீரா?' அவர் குரல் ஒரேயடியாகக் கம்மிவிட்டது படகிலிருந்த பெண்பிள்ளைகளிருவரும் 'ஓ'வென்று அழத் தொடங்கினர்.

'கவிழாமல் தப்ப ஒரே வழிதானுண்டு ஆனால் அது நடக்காத காரியம்' என்றான் பக்கிரி

'ஏன்? அது என்னவழி?' என்று மற்றவர் பரபரப்புடன் கேட்டார்.

'படகின் பாரத்தைக் குறைக்க வேண்டும்'

'இங்கு அனாவசியமான பாரம் என்னவிருக்கிறது? நாங்கள் மூட்டை முடிச்சொன்றும் எடுத்துவரவில்லையே'

'இதில் அவசியம் அனாவசியமென்று கிடையாது எல்லாப் பாரமும் ஒன்றுதான் நம்மில் யாராவது ஒருவர் தண்ணீரில் குதித்துவிட்டால் பளு குறையும் படகு கொஞ்சம் நீர் மட்டத்திற்கு மேலே கிளம்பும் காற்றின் வேகத்துக்கு அசைந்துகொடுக்க முடியாவிட்டால் கவிழுவது நிச்சயம் பக்கிரி பதறாமல் நிதானமாய்த்தான் பேசினான். சாகத்துணிந்தவனுக்குச் சமுத்திரமும் முழங்கால் ஆழந்தானே?

உண்மையில் பக்கிரி தன்னைப்பற்றி கவலைப்படவில்லை அருகிலமர்ந்திருந்த தன் ஒரே மகனும் தன்னுடன் வந்து ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறானே யென்றுதான் வருந்தினான் ஆனால் இனியாரை நோவது? ஆற்றின் இழப்பையும் சுழல்களையும் பார்க்கும்போது, எவ்வளவு நல்ல நீச்சுக்காரனாயிருந்தாலும் தப்புவது கடினமென்பது தெளிவாய்த் தெரிந்தது

"ஐயா உமக்குச் சரியாகப் படகு தள்ளிப் பழக்கமில்லைபோலிருக்கிறது. அதனால்தான் இப்படிப் 'பளுவைக் குறைக்க வேண்டும்' என்று உளறுகிறீர்' என்றார் பிரயாணி

"அப்படியானால் நீங்கள்தான் கொஞ்சம் துடுப்பைப் பிடித்துப் பாருங்களேன் என்னை நம்பவேண்டாம்" பக்கிரி துடுப்பை அவரிடம் நீட்டினான் அவர் பயந்தே போனார். 'இல்லை ஐயா யோசிக்காமல் சொல்லி விட்டேன் ......" என்று தடுமாறினார்.

"ஸ்வாமி இங்கே வாக்குவாதம் செய்து பிரயோசனமில்லை நீங்கள் தண்ணீரில்குதித்தால் உங்கள் பெண்டு பிள்ளைகளாவது பிழைத்துப்போகும். இல்லாவிட்டால் எல்லோரும் ஒன்றாகச் சாகவேண்டியதுதான்" என்று பக்கிரி கண்டிப்பான குரலில் சொன்னான்

அம்மனிதர் அலறிவிட்டார். 'ஐயோ எனக்கு நீந்தத் தெரியாதே'' அவர் மனைவி இன்னும் பலமாய் ஒப்பாரி வைத்தாள்.

"இதோ பாருங்கள். நான் குதிப்பதற்குத் தயார். ஆனால் கரை சேரும் வரை படகைச் சமாளிப்பது உங்களால் முடியாத காரியம் இப்போது வேறு வழியே கிடையாது நீங்கள்தான் இவ்வளவுக்கும் பொறுப்பாளி. உங்களது கட்டாயமில்லாவிட்டால் நாம் இப்படிக் கிளம்பியே இருக்க மாட்டோம்.'

உண்மையை மறுக்கவும்முடியாமல் பலனை ஒப்புக்கொள்ளவும் முடியாமல் பிரயாணி தத்தளித்துக்கொண்டிருந்த போதுதான் சின்னப்பன் தன் மூலையிலிருந்து துள்ளியெழுந்தான் அவன் முகத்தில் ஒரு புதிய ஒளி பிரகாசித்தது "அப்பா! நான் குதித்து விடுகிறேன் என்றான் அவன்.

"ஐயோ மகனே வேண்டாமடா" என்று தகப்பன் கத்தினான். அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் சின்னப்பன் தண்ணீரில் குதித்தே விட்டான் பக்கிரியின் கண்முன் உலகமே சுழன்றது சின்னப்பன் நீந்த முயற்சித்தான். ஆனால் ஆற்றின் வேகம் ஒரு அமுக்கி அமுக்கி அவனை இழுத்துச் சென்றது 'அட கடவுளே!' என்று வாய்விட்டலறுவதைத் தவிர பக்கிரியால் வேறொன்றும் செய்ய முடியவில்லை. கணப்பொழுதில் அவனது அருமை மகன் மறைந்துவிட்டான் பக்கிரிக்கு உலகமே அஸ்தமித்துவிட்டது

ஆனால் அவன் துடுப்பைத் தளரவிடவில்லை மிகுதியுள்ள ஜீவன்களையாவது உயிருடன் கரை சேர்த்துவிடுவோமென்று முனைந்தான். பாரங்குறைந்த படகும் மேலெழுந்தது அச் சிறுவனின் துணிவும் தியாகமும் தங்களுயிரையே காத்தமை பற்றி பிரயாணி வியந்தார். அவர் கண்களிலும், அவரது மனைவியின் கண்களிலும் நீர் மல்கியது ஆனால் மகனையிழந்த தந்தைக்கு அவர்களால் என்ன ஆறுதல் சொல்ல முடியும்?

வரகூர் கிராமத்தின் படித்துறையை அடைந்ததும் அனைவரும் இறங்கினர் பக்கிரி தன் மடியிலிருந்து பிரயாணி கொடுத்த ரூபாய் நோட்டுகளை எடுத்து அவரிடமே நீட்டினான். 'ஐயா என் மகன் போனபின் பணத்தால் எனக்கு ஆகவேண்டியதொன்றுமில்லை. இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.' என்று சொல்லிவிட்டு அப்படியே நடந்தவன் மீண்டும் கும்பனூர்ப் பக்கம் காலெடுத்து வைக்கவில்லை. உன்மத்தம் பிடித்தவன்போல் எங்கெங்கோ அலைந்து திரிந்தவனுக்கு மரணத்தின் அமைதி கிட்ட இத்தனை வருஷங்களாயின.

* * *

திவான் பகதூர் வீட்டுக் கலியாண ஊர்வலம் தடபுடலாய்க் கிளம்பித் தெரு முனையை நெருங்கிக்கொண்டிருந்தது முனிஸிபல் குழாயருகில் விறைத்துக் கிடந்த ஓர் மனித உடல் அதன் போக்கைத் தடைப்படுத்தியது 'சீ! இது என்ன அபசகுனம் மாதிரி வழியில் பிணம் கிடக்கிறதே!' என்று பலரும் முணுமுணுத்தனர் எவ்வித சிரத்தையுமின்றி பிணம் வீதியோரமாக இழுத்தெறியப்பட்டது சங்கரன் பிள்ளையின் மனமும் இந்த அபசகுனத்தைக் கண்டு சிறிது சங்கடப்பட்டது.

ஆனால் பன்னிரண்டுவருஷங்களுக்கு முன் அவர் சாதாரண மனிதராயிருந்தபோது, ஆற்றில் கவிழ்ந்து மரணமடையாமல் அவரையும் அவர் குடும்பத்தையும் காத்த மஹானுபாவனின் தந்தையான படகோட்டி பக்கிரியின் சடலம் அது என்று அவருக்கு எப்படித் தெரியும்? இன்று அவர் திவான் பகதூராக பணத்தில் புரளுவதற்கு மூலகாரணமே அச் சிறுவனின் தியாகம்தானே? அச் சம்பவம் இப்போது அவருக்கு நினைவிருந்ததோ என்னவோ?

198587

சரியான பாடம்

ஜி.எஸ்.மணி

பூரண சந்திரிகை அமிர்தத்தைப் பொழிந்துகொண்டிருந்தது. உயர்ந்து நின்ற கோபுரங்களின் மீதும், மொட்டை மாடிகளின் மீதும் ஜன சஞ்சாரமற்ற தெருக்களின் வழியேயும் உயிர் இருந்தும் உள்ளமற்ற மரங்களின் மீதும், உயிரும் அற்று உணர்ச்சியும் வறண்டுபோன ஸ்மசானத்தின் மீதும் அழகு நிலா தவழ்ந்து விளையாடியது ஆயினும் அந்த அழகை அனுபவிப்பார் இல்லை உள்ளத்து உணர்வெல்லாம் வறண்டு விட்டதுபோலே உலகம் அயர்ந்து கிடந்தது.

அனைவரும் நித்திரையில் ஆழ்ந்து விட்டபோதிலும் இரண்டு ஆத்மாக்கள் மட்டும் அயரவில்லை

'தங்கம்!' என்று உடைந்த குரலில் அழைத்தார் அறைவாசற்படியண்டை வந்து நின்ற தர்மராஜன் அளவு கடந்த ஏக்கம் அந்த அழைப்பிலே எதிரொலித்தது

படுத்தபடி ஏதோ நாவல் வாசித்துக்கொண்டிருந்த தங்கம், 'என்ன வேண்டும்?' என்று கொண்டே அவசரமாக எழுந்தாள்.

'மொட்டை மாடிக்கு வாயேன்? என்ன ஆனந்தமாக நிலா வீசுகிறது, பார்! என்று கனிவுடன் கூப்பிட்டார்

'இன்னம் தூங்கவில்லையா நீங்கள்? மணி பன்னிரண்டு ஆகிவிட்டதே?

'தூக்கம் வரவில்லை தங்கம், நீயும்தான் இப்படி வெகு நேரம் படித்துக்கொண்டிருந்தால் உடம்புக்கு ஆகுமா?

'படிக்காவிட்டால்தான் எனக்கு உடம்புக்கு வரும்!'

'இன்றைக்குப் படித்ததுபோதுமே! வாயேன்?'

'எங்கே?'

"மேல் மாடிக்கு!'

"நான் வரவில்லை: பனி கொட்டுகிறதே? உங்களுக்குத் தெரியவில்லையா?

"எங்கே கொட்டுகிறது பனி? வெப்பம் தாங்க முடியவில்லையே?"

"வேண்டுமானால் நீங்கள் மட்டும் போங்கள்; நான் வரவில்லை '

தர்மராஜன் போகவில்லை; அந்த அறைக்குள்ளேதான் நுழைந்தார், நேராக வந்து அவளருகில் படுக்கையின் மீது அமர்ந்துகொண்டார்

தங்கம் எழுந்து நின்றுகொண்டாள். அவள் கரத்தைப்பற்றிய அவர் கையை, மெதுவாக விலக்கி விடுவித்துக்கொண்டாள்

'தங்கம்! என்னை ஏமாற்றுகிறாயே?' என்று ஏங்கியபடியே அவர் சொன்னார்.

'நான் யாரையும் இன்று வரையில் ஏமாற்றியதே இல்லை; இனி ஏமாற்ற



வும் மாட்டேன்' என்று அமைதியுடன் பதிலளித்தாள்.

பின்னே......?'

'என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?'

'தங்கம்!'

'என்ன வேண்டும்? சொல்லுங்களேன்?'

'ஏமாற்றமடையத்தானா நான் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டேன்?' என்றார் கெஞ்சும் குரலிலே

'நீங்கள்தான் இப்போது என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்!' என்றாள் தங்கம்

'என்ன?' என்று திடுக்கிட்டுப்போய் கேட்டார்

'என்னை, இஷ்ட விரோதமாக, எந்த விஷயத்திலும் வற்புறுத்தாமலிருப்பதாக நீங்கள் அன்றே எனக்கு வாக்குக் கொடுத்தது நினைவில்லையா?'

'ஆனால்—மனைவியென்கிற முறையில்—நீ—?.

'அதிலும்தான் இஷ்ட விரோதம் கூடாது!'

தர்மராஜன் பெருமூச்செறிந்தார்

'தங்கம்! நான் மனச்சாட்சிக்குப் பயந்தவன்; சொன்னதை இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், நீதான் என்னை மோசம் பண்ணி விட்டாய்!'

'எந்த விதத்திலே என் கடமை தவறினேன்? சொல்ல முடியுமா? உங்களிடம் அன்புக் குறைவாக நடந்து கொள்கிறேனா?' மூத்தவள் குழந்தைகளை சிரத்தையுடன் கவனிக்கவில்லையா?—ஒரு விஷயத்தில் மட்டும் நீங்கள் விட்டுக் கொடுத்தேயாக வேண்டும்; அதன் காரணம் உங்களுக்கே நன்றாகத் தெரியும்'

'தங்கம்! உன் வெளி அழகில் மயங்கி நான்தான் ஏமாந்து போனேன்; வயது காலத்தில் வீண் வேதனையில் மாட்டிக்கொண்டேன்; என்னை நானே ஏமாற்றிக்கொண்டேன்'

'அது என் குற்றமில்லையே?

'தங்கம்? பெண்ணாகப் பிறந்த உனக்கு இவ்வளவு விறைப்பா?' என்று ஏமாற்றம் கோபமாகக் கொந்தளிக்கக் கூச்சல் போட்டார் தர்மராஜன்

ஆமாம்; உங்களுக்கே வாழ்க்கைச் சபலமும், விறைப்பும் இன்னம்விட வில்லையே? இப்போதுதான் வாழ்வில் அடியெடுத்து வைத்திருக்கிறேன் என்னையும்தான் ஏமாற்றத்தின் நிழலிலே நிற்கப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் எனக்கு இந்த விறைப்புக் கூட இருக்காதென்று நீங்கள் எப்படி எதிர்பார்க்கலாம்?' என்று தங்கமும் பொங்கினாள்.

'தங்கம்! பெயருக்கேற்ற குணம்உன்னிடம் இல்லை.'

'தங்கத்தின் திடமும். உறுதியும் தெரியாமல் பேசுகிறீர்களென்று நினைக்கிறேன்'

என்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் தங்கம்?

'பழுத்த அனுபவத்தின் அடிப்படையில் மனோதத்துவத்தைப்பற்றித் தெளிவாக உணர்ந்துகொண்டவராகவே கருதுகிறேன் மனச் சாட்சிக்குக் கட்டுப்பட்டவராகவே நினைக்கிறேன்

'அத்து மீறி நடந்து கொண்டாலோ?'

'நான் அப்படி நினைக்கவேயில்லை'

தர்மராஜன் ஆழ்ந்த பெருமூச்செறிந்தார்.

வாயே திறவாமல் எழுந்து அவ்வறையை விட்டு வெளியேறிவிட்டார். தங்கம் படுக்கையில் குப்புற விழுந்து, தலையணையில் முகம் புதைத்தவளாய், விம்மி விம்மி வெகு நேரம்அழுதுகொண்டேயிருந்தாள்.

2

உறைந்து பாறையாகிவிட்ட நெஞ்சுடனே—சூன்யப் பார்வையுடனே—தெருத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார் தர்மராஜன்

எதிரே நிழலாடியது கண்டு திடுக்கிட்டார்

வாழ்வை வெறுத்த தோற்றத்துடனே இளைஞன் ஒருவன் எதிரில் நின்று தம்மையே கூர்ந்து கவனிப்பதைக் கண்டார்

'யார்? என்ன வேண்டும்?' என்று வந்தவனை வினவினார்

"தங்கம் இங்கேதானே வாழ்க்கைப்பட்டிருக்கிறாள்?"

"ஆமாம். நீங்கள் யாரோ?"

"அவள் ஊர்க்காரன் தான்; சும்மா— பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.'

"ஓஹோ? வாருங்கள்; உள்ளே வாருங்கள்."

இருவருமாகக் கூடத்துக்குப் போனார்கள்; இளைஞனைக் கூடத்திலேயே விட்டுவிட்டு, தர்மராஜன் மட்டும் சமையலறைப் பக்கம் சென்றார்

காலடி யோசை கேட்ட தங்கம், கைக்காரியத்தை விட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்தாள்

"உன் ஊர்க்காரராம்; யாரோ, உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்" என்று அவளிடம் தர்மராஜன் தெரிவித்தார் 'யாராம் அது?' என்று நிதானமாகவே கேட்டாள்

"தெரியவில்லை; சிறு வயசுப் பிள்ளையாக இருக்கிறார்"

'ஓஹோ? இருக்கட்டும்; வருகிறேன்' என்று சொன்ன தங்கம் மீண்டும் தன் காரியத்திலே கவனம் செலுத்தினாள்

மீண்டும் கூடத்துக்குத் திரும்பினார் தர்மராஜன் அங்கே அந்த இளைஞன் உட்கார்ந்துகொண்டிருந்தான் "இருங்கள் தங்கம் வருவாள்' என்று தெரிவித்துவிட்டு, அவரும் அமர்ந்துகொண்டார். அப்புறம் இருவரிடையேயும் மௌனமே நிலவியது ஐந்து நிமிஷம்—பத்து நிமிஷம்—பதினைந்து—கடைசியில் தங்கம் வந்தாள்

'நாகராஜனா? வா என்று இரண்டே வார்த்தைகள் அவளிடமிருந்து அமைதியாக வெளிப்பட்டன

அதுவரை அமைதியாகக் காணப்பட்ட அந்த இளைஞனிடம் திடீரென்று விவரிக்க முடியாத ஒரு பரபரப்பு-"ஸௌக்யமா, தங்கம்?'

"ஸௌக்யந்தான், இந்தப் பக்கம் திரும்பியது என்ன விசேஷமோ?"

"வெறுமனே தான் வரக்கூடாதா?"

'விசேஷமில்லாமல் வருவாயோ என்று நினைத்தேன்.'

"ஒரு வழக்கு விஷயமாகவந்தேன்."

"ஓஹோ?"

"நியாயமாக எனக்குச் சேரவேண்டிய சொத்து, ஆனால் வேறொருவர் குறுக்கிட்டுப் பறித்துக்கொண்டு போய்விட்டார்" என்று அழுத்தமாகச் சொல்லிக்கொண்டே தர்மராஜனைப் பார்த்தான் நாகராஜன்

'அப்படியா? அக்கிரம வழியிலே வந்த சொத்து அதிகக் காலம் நிலைத்து நிற்காது" என்று ஆமோதித்தார் தர்மராஜனும்

நாகராஜன் மேலும் சொன்னான்: 'ஆமாம்; எதிரிக்கு அதை எடுத்துக் காட்டவே ஆசைப்படுகிறேன் என் சொத்தை உன்னால் அனுபவிக்கமுடியாது என்று சொல்லி எச்சரித்துவிட்டு—" என்று தர்மராஜனையே எச்சரிப்பதுபோல் பேசிவிட்டு, தங்கத்தின் பக்கம் திரும்பினான்

"பழய ஒப்பந்தப்படி—"

"கண்டமற்ற முறையில் வழக்காட முன் வராதே நாகராஜா! வந்த வழியைப் பார்த்துக்கொண்டு திரும்பிப் போ!' என்று 'வெடுக்' கென்று சொல்லிவிட்டு சடேரென்று திரும்பிச் சமையலறைக்குள்மறைந்துவிட்டாள் தங்கம்.

நாகராஜன் உட்கார்ந்த இடத்திலேயே சிலையாகிவிட்டான்; அவன் முகம் பிரமிப்புத் தட்டிப்போய் அப்படியே ஸ்தம்பித்து விட்டது.

தர்மராஜன் எழுந்து உள்பக்கம் போனார்; அடுப்படியில் இருந்த தங்கத்தின் பின்னே நின்று, 'அவர் வழக்கு எப்படியிருந்தால் என்ன தங்கம்? தேடி வந்தவரைத் திரும்பிப் போகச் சொல்லி அவமதிப்பது அழகல்ல" என்று மெதுவான குரலில் சொன்னார். "அவன் இங்கேவெறுமனே வரவில்லை; வழக்குப் பேசும் பாவனையில்தங்கத்தை 'சொக்கத் தங்கமா—அல்லது போலித் தங்கமா, என்று உறைத்துப் பார்க்க வந்தவன் தான்; இப்போது தெரிந்துகொண்டிருப்பான்; போகட்டும்!' என்று ஆணித்தரமாக இரைந்த குரலிலேயே பதில் சொன்னாள் தங்கம்.

வாய் திறவாமல் மீண்டும் கூடத்துக்கு வந்தார். நாகராஜன் அங்கே காணப்படவில்லை அவசரமாகத் தெருப்பக்கம் போய் பார்த்தார் வந்தவன் ஓட்டமும், நடையுமாக மூலை திரும்பிப் போய்க்கொண்டிருந்தான்.

தர்மராஜன் மீண்டும் தங்கத்திடம் வந்து நின்றார் "அந்தப் பையன் போய்விட்டான்" என்று சொன்னார்.

"அவன் போய் விடுவானென்று எனக்கும் தெரியும்" என்றாள் தங்கம்.

"இந்த வாழ்க்கையிலே நீ என்ன சுகத்தைக் காண்கிறாய், தங்கம்?"

"நாம் சுகமென்று நினைப்பதெல்லாம் வாஸ்தவத்திலேயே சுகமாகிவிடுகிறதா அல்லது நாம் துக்கமாகக் கருதுவது உண்மையிலேயே துக்கம்தானா? வெளியிட முடியாத ஏதோ ஒரு தியாக உணர்வின்மூலமே என் உள்ளம் திருப்தியடைய முன் வந்துவிட்டது: அதிலிருந்து கிடைக்கும் அற்ப ஆறுதலே என் ஆயுள் பூராவுக்கும் போதுமானதென்று கருதுகிறேன்—இனி மனோ, வாக்கு, காயம்—மூன்றிலுமே நான் உங்கள் சொத்து—நான் உங்கள் சொத்தேதான்!' என்று தங்கம் தீர்மானமாகச் சொல்லி முடித்ததும் தர்மராஜன் சொல்ல முடியாத திகைப்புடன் அவளையே பார்த்துக்கொண்டு அப்படியே நின்றுவிட்டார்



பயிற்சி 24-अभ्यास 24

விடைகள்-उत्तर

(அ)

1. जो लड़के खूब खेलते हैं, वे तंदुरुस्त होते हैं।

2. जिसकी ज़रूरत है, उसको ले जाओ।

3. जितना चाहते हो, उतना खाओ।

4. जब पानी बरसता है, तब वह बाहर नहीं जाता।

5. यद्यपि वह काली है, तो भी वह बहुत सुंदर है।

6. चूँकि तुम बार-बार पूछते हो, इसलिए मैं अब कहता हूँ।

7. जैसा काम कंदन कर सकता है, वैसा काम और कोई नहीं कर सकता।

8. हम कहते हैं कि काश्मीर हमारा है।

9. वह हिंदी पढ़ता तो है, मगर समझता नहीं।

10. हमको हिंदी तथा संस्कृत, दोनों मालूम हैं।

(ஆ)

1. अगर तुम वहाँ नहीं जाते हो, तो उसको भेजो।

2. आजकल मैं रोटी ही खाता हूँ, क्योंकि यहाँ भात नहीं मिलता।

3. यह कपड़ा सफ़ेद है, मगर साफ़ नहीं।

4. पिताजी कहते हैं कि हमेशा सच बोलो।

5. कोयल मीठा गाती है, इसलिए हम उसको प्यार करते हैं।

6. आप जल्दी जाइए, नहीं तो आपको गाड़ी नहीं मिल सकती।

7. चूँकि वह बड़ा आदमी है, इसलिए सब लोग उसकी बात मानते हैं।

8. स्टेशन यहाँ से बहुत दूर है, तो भी हम वहाँ एक घंटे में पहुँच सकते हैं।

9. जिसको तुम देखना चाहते हो, वह अब दिल्ली में है।

10. जब कभी तुम मद्रास आते हो, तो मुझसे नहीं मिलते।

பாடம் 25-पाठ 25

(அ) இலக்கணம்-व्याकरण

எதிர்காலம் (Future Tense)

'வருகிறான்', 'போகிறாள்', 'பார்க்கிறோம்', 'கேட்கிறீர்கள்', 'சொல்லுகிறார்கள்' என்பவை இப்போது நடக்கும் காரியங்களைப் பற்றிச் சொல்லும் வினைச்சொற்கள் இவற்றை ஸாதாரண நிகழ்கால வினைச்சொற்கள் என்கிறோம்.

'வருவான்', 'போவாள்', 'பார்ப்போம்' 'கேட்பீர்கள்', 'சொல்லுவார்கள்' என்பவைகளும் வினைச் சொற்களே ஆனால் அவைகள் இப்போது நடக்கும் காரியங்களைப் பற்றிச் சொல்லவில்லை. இனிமேல் நடக்கப் போகும் காரியங்களைப் பற்றித்தான் சொல்லுகின்றன. 'வருவான்' என்றால் 'இப்போது வரவில்லை; இனி வருவான், நாளைக்கு வருவான், நாளை மறு தினம் வருவான் அடுத்த வாரம் வருவான் அடுத்த மாதம் வருவான், அடுத்த வருஷம் வருவான். என்றைக்காவது ஒரு நாள் வருவான்' என்ற மாதிரிதான் அர்த்தம் ஏற்படும் எனவே 'வருவான்' என்ற வினைச்சொல் இப்பொழுது நிகழும் காலத்தைப் பற்றியதல்ல; இனி நிகழப் போகும், அதாவது நம்மை எதிர் நோக்கியுள்ள காலத்தைப் பற்றியது. இப்படி எதிர் நோக்கியுள்ள காலத்தை எதிர்காலம் (Future Tense) என்கிறோம் எதிர காலத்தில் நடக்கப்போகும் காரியங்களைப் பற்றிச் சொல்லும் வினைச் சொற்களை எதிர் கால வினைச்சொற்கள் என்கிறோம். 'வருவான்', 'போவாள்', பார்ப்போம்', 'கேட்பீர்கள்', சொல்லுவார்கள்' என்று மேலே குறிப்பிட்ட வினைச் சொற்களெல்லாம் எதிர்கால வினைச் சொற்களே

இதே மாதிரி ஹிந்தியில் आता हूँ, आता है, आते हो, आते हैं முதலியவை ஸாதாரண நிகழ்கால வினைச் சொற்கள் இவை எதிர்காலத்தைக் குறிப்பிடும்போது எப்படி [illegible] கீழே [illegible] பட்டியலில் கவனியுங்கள்.—

எதிர்காலம் (Future Tense)
ஆண்பால் (Masculine Gender)
வினைப்பகுதி: आ—வா

இடம் (Person)	ஒருமை (Singular)	பன்மை (Plural)
தன்மை (I Person)	मैं आऊँगा நான் வருவேன்	हम आएँगे நாம் (நாங்கள்) வருவோம்
முன்னிலை (II Person)	तू आएगा நீ வருவாய்	तुम आओगे நீர் வருவீர் आप आएँगे நீங்கள் (தாங்கள்) வருவீர்கள்
படர்க்கை (III Person)	वह आएगा அவன் வருவான் அது வரும் यह आएगा இவன் வருவான் இது வரும்	वे आएँगे அவர் வருவார் அவர்கள் வருவார்கள் அவைகள் வரும் ये आएँगे இவர் வருவார் இவர்கள் வருவார்கள் இவைகள் வரும்

இந்தப் பட்டியல் விவரம் உங்களுக்குத் தெரிந்ததுதான். எனினும் இதில் ஒரு விசேஷம் உண்டு. பயனிலையில் (Predicate) ஒரே ஒரு வினைச் சொல் தான் இருக்கிறது. ஆண்பால் ஒருமையில் ஸாதாரணமாக வினைப்பகுதியுடன் एगा-வும், ஆண்பால் பன்மையில் ஸாதாரணமாக एँगे-யும் சேர்ப்பதனால் பட்டியலின் ஒவ்வொரு வாக்யத்திலும் பயனிலை அமைகிறது. ஆனால் வாக்யத்தின் எழுவாய் (Subject) मैं யாக இருக்கும்போது வினைப்பகுதியுடன் ऊँगा என்ற விகுதியையும், அந்த எழுவாய் तुम ஆக இருக்கும்போது வினைப்பகுதியுடன் ओगे என்ற விகுதியையும் சேர்த்துப் பயனிலையை அமைக்கிறோம்.

இந்த விதி आ என்ற வினைப் பகுதிக்கு மட்டுமல்ல; பொதுவாக எல்லா வினைப் பகுதிகளுக்குமே பொருந்தும் எனினும் ले, दे, हो முதலிய சில வினைப்பகுதிகளின் எதிர்கால ரூபங்களில் ஒரு விசேஷம் உண்டு. ஆண்பாலில் लूँगा, दूँगा, हूँगा ; लेगा, देगा, होगा ; लोगे दोगे, होगे ; लेंगे, देंगे, होंगे முதலியவை அந்த விசேஷ ரூபங்களாகும்.

(உ—ம்)

मैं लूँगा—நான் எடுப்பேன் (मैं लेऊँगा அல்ல)

वह देगा—அவன் கொடுப்பான் (वह देएगा அல்ல.)

हो-வுக்கு எதிர்காலத்தில் होऊँगा, होएगा, होओगे, होएँगे என்ற ரூபங்களும் உண்டு.

பெண்பாலில் உபயோகப்படும் போது இந்த விகுதிகளிலுள்ள गा, गे என்ற முடிவுகள் गी என்று ஒரேயடியாக மாறிவிடுகின்றன. இதோ இந்தப் பட்டியலைப் பாருங்கள்:—

எனவே गा, गे ஆகிய இரண்டு முடிவுகளும் गी என்று மாறிவிடுவது ஒன்று தான் பெண்பாலுக்கான பட்டியலில் ஏற்படும் விசேஷமாறுதல். இதே விதி ले, दे, हो முதலிய வினைப்பகுதிகளின் பெண்பால் எதிர்கால ரூபங்களுக்கும் பொருந்தும்.

எதிர்காலம் (Future Tense)
பெண்பால் (Feminine Gender)
வினைப்பகுதி: आ—வா

இடம் (Person)	ஒருமை (Singular)	பன்மை (Plural)
தன்மை (I Person)	मैं आऊँगी நான் வருவேன்	वह आएगी நாம் (நாங்கள்) வருவோம்
முன்னிலை (II Person)	तू आएगी நீ வருவாய்	तुम आओगी நீர் வருவீர் आप आएँगी நீங்கள் (தாங்கள்) வருவீர்கள்
படர்க்கை (III Person)	वह आएगी அவள் வருவாள் அது வரும் यह आएगी இவள் வருவாள் இது வரும்	वे आएँगी அவர் வருவார் அவர்கள் வருவார்கள் அவைகள் வரும் ये आएँगी இவர் வருவார் இவர்கள் வருவார்கள் இவைகள் வரும்

लूँगी, दूँगी, हूँगी (होऊँगी), लेगी देगी, होगी (होएगी), लोगी, दोगी, होगी, (होओगी), लेंगी, देंगी होंगी (होएँगी) முதலியவை அத்தகைய ரூபங்களாகும்

வினைப்பகுதிகளுடன் விகுதிகளைச் சேர்க்கும்போது இன்னொரு விஷயத்தையும் கவனிக்கவேண்டும் மெய்யொலியில் முடியும் வினைப்பகுதியுடன் விகுதி சேரும்போது இயற்கையான ஸந்தி விதிகளின்படி வினைப்பகுதியும் விகுதியும் ஒன்றாகக் கலந்துவிடும்.

(உ—ம்)

देख+ऊँगा = देखूँगा
बैठ+एगा = बैठेगा
सुन+ओगे = सुनोगे
खेल+एँगे = खेलेंगे

இப்படிக்கின்றி உயிரொலியில் முடியும் வினைப்பகுதியுடன் விகுதிகள் சேரும்போது, அந்த வினைச்சொல்லின் ரூபங்கள் ஹிந்தியில் பல விதமாக வழங்குகின்றன.

(உ—ம்)

आ+एगा = आएगा, आयेगा, आयगा, आवेगा

जा+एँगे = जाएँगे, जायेंगे, जायँगे, जावेंगे

முதலியன.

மேலே படிக்கப் படிக்க இந்த ரூபங்களெல்லாம் உங்களுக்கு நன்றாகப் பழக்கமாகிவிடும் நீங்கள் எந்த ரூபத்தை வேண்டுமானாலும் கையாளலாம். எல்லாம் சரிதான்.

(ஆ) அலுவல் முறை-कार्यक्रम

माननीय मंत्री का भ्रमण

माननीय मंत्री अगले महीने की आठवीं तारीख़से बारहवीं तारीख़ तक तमिल नाडु में भ्रमण करेंगे। उनका कार्य-क्रम इस प्रकार है:—

सितंबर की आठवीं तारीख़ को माननीय मंत्री मदरास से रवाना होंगे। सबेरे की मेल-गाड़ी से वे चेंगलपट पहुँचेंगे। दोपहर का भोजन वहीं करेंगे। उसी दिन शाम को चेंगलपट के मुदलियार-मैदान में मज़दूरों का सम्मेलन होगा। उसमें मान. मंत्री मज़दूरों की माँगों पर भाषण करेंगे और सरकारी सूचना को स्पष्ट करेंगे। फिर रात को वहीं के मुसाफ़िर-बंगले में ठहरेंगे।

नौवीं तारीख़ के सबेरे वहाँ से चलकर कांचीपुरम पहुँचेंगे। कांची में उस दिन सबेरे आठ बजे कन्या-विद्यालय के नए भवन की नींव डालेंगे। उसी दिन शाम को वहाँ के स्टेशन-मैदान में जुलाहों का सम्मेलन होगा। मान. मंत्री उसमें भी भाग लेंगे और भाषण करेंगे। रात के आठ बजे शहर की अन्न-स्थिति पर अधिकारियों से बातें करेंगे। फिर मोटर से चेंगलपट लौटेंगे और रात की मेल-गाड़ी से मायवरम के लिए रवाना होंगे।

दसवीं तारीख़ के सबेरे दस बजे मायवरम हाई स्कूल में तंजावूर ज़िले के मीरासदारों का सम्मेलन होगा। मान. मंत्री उसमें भाग लेकर वहाँ के मीरासदारों की शिकायतें सुनेंगे। मीरासदारों की कठिनाइयाँ दूर करने के लिए सरकार जो-जो आयोजनाएँ बना रही है, उन सब को मान. मंत्री स्पष्ट करेंगे।

उसी दिन शाम को कांग्रेस कमिटी की तरफ़ से कुंभकोणम में एक आम सभा होगी। मान. मंत्री उसमें बोलेंगे। फिर रात की गाड़ी से ही वे तिरुची के लिए रवाना होंगे।

ग्यारहवीं तारीख़ के सबेरे सात बजे वे श्रीरंगम में एक अस्पताल खोलेंगे। फिर वहाँ से चलकर उसी दिन शाम को वे एट्टयपुरम पहुँचेंगे।

उस दिन एट्टयपुरम में 'भारती-दिन' की सभा होगी। बहुत लड़के भारती के गीत गाएँगे। लड़कियाँ भी गाएँगी। जो लोग बहुत अच्छा गाएँगे, उनको मान. मंत्री इनाम देंगे। इस साल भारती-उत्सव की एक विशेषता यह है कि भारती जी की कुछ अंग्रेज़ी कविताओं का भी वहाँ पाठ होगा। मान. मंत्री भारती के संबंध में अपनी कुछ कविताएँ भी पढ़ सुनाएँगे। बारहवीं तारीख़ को वे मदरास लौटेंगे।

தமிழில் இதே அலுவல்முறை

கனம் மந்த்ரியின் சுற்றுப்ரயாணம்

கனம் மந்த்ரி அடுத்த மாதத்து எட்டாம் தேதியிலிருந்து பன்னிரண்டாம் தேதி வரையில் தமிழ் நாட்டில் சுற்றுப்ரயாணம் செய்வார் அவருடைய அலுவல் முறை (திட்டம்) இப்படியுள்ளது:—

ஸெப்டம்பர் எட்டாம் தேதியன்று கனம் மந்த்ரி மதராஸிலிருந்து புறப்படுவார். காலை மெயில் வண்டி மூலம் அவர் செங்கல்பட்டுக்குப் போய்ச் சேருவார் மத்யான போஜனம் அங்கேயே செய்வார் அன்றைக்கே மாலையில் செங்கல்பட்டு முதலியார்-மைதானத்தில் தொழிலாளர் மகாநாடு நடைபெறும் அதில் கனம் மந்த்ரி தொழிலாளரின் கோரிக்கைகளைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (மேலும்) ஸர்க்கார் அறிக்கையைத் தெளிவு படுத்துவார். பிறகு இரவில் அங்கேயே ப்ரயாணிகள்—பங்களாவில் தங்குவார்.

ஒன்பதாம் தேதி காலையில் அங்கிருந்து சென்று காஞ்சீபுரம் போய்ச் சேருவார் காஞ்சியில் அன்று காலை எட்டு மணிக்குப் பெண்கள் பள்ளிக்கூடத்தின் புதுக் கட்டிடத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டுவார். அன்றைக்கே மாலையில் அவ்விடத்து ஸ்டேஷன்—மைதானத்தில் நெசவாளரின் மகாநாடு நடைபெறும். கனம் மந்த்ரீ அதில் பங்கெடுத்துக் கொள்வார், (மேலும்) ப்ரஸங்கம் செய்வார். இரவு எட்டு மணிக்கு நகரின் உணவு நிலைமைபற்றி அதிகாரிகளுடன் பேசுவார் (விவாதிப்பார்) பிறகு மோட்டார் மூலம் செங்கல்பட்டுக்குத் திரும்புவார், (மேலும்) இரவு மெயில் வண்டி மூலம் மாயவரத்துக்குப் புறப்படுவார்.

பத்தாம் தேதி காலையில் பத்து மணிக்கு மாயவரம் ஹைஸ்கூலில் தஞ்சாவூர் ஜில்லாவின் மிராசுதார்களின் மகாநாடு நடைபெறும். கனம் மந்த்ரீ அதில் பங்கெடுத்து மிராசுதார்களின் குறைகளைக் கேட்பார். மிராசுதார்களின் கஷ்டங்களை நீக்க ஸர்க்கார் என்னென்ன திட்டங்களை அமைத்துக் கொண்டிருக்கிறதோ, அவற்றையெல்லாம் கனம் மந்த்ரீ விளக்குவார்

அன்றைக்கே மாலையில் காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் கும்பகோணத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும் கனம் மந்த்ரீ அதில் பேசுவார். பிறகு இரவு வண்டியிலேயே அவர் திருச்சிக்குப் புறப்படுவார்.

பதினொன்றும் தேதி காலை ஏழு மணிக்கு அவர் ஸ்ரீரங்கத்தில் ஒரு ஆஸ்பத்திரியைத் திறப்பார் பிறகு அங்கிருந்து கிளம்பி அன்றைக்கே ஸாயங்காலம் அவர் எட்டயபுரம் போய்ச் சேருவார்.

அன்று எட்டயபுரத்தில் பாரதி தினக் கூட்டம் நடக்கும் பல பையன்கள் பாரதியின் பாட்டுக்களைப் பாடுவார்கள். பெண்களும் பாடுவார்கள். எவர்கள் வெகு நன்றாகப் பாடுவார்களோ, அவர்களுக்கு கனம் மந்த்ரீ பரிசுகள் அளிப்பார் இந்த வருஷம் பாரதி விழாவில் ஒரு விசேஷம் இது. என்னவென்றால் பாரதியாரின் சில ஆங்கிலக் கவிதைகளின் பாடமும் அங்கே நடக்கும் (ஆங்கிலக் கவிதைகளும் அங்கே படிக்கப்படும்) கனம் மந்த்ரீ பாரதியைப் பற்றித் தம்முடைய சில கவிதைகளையும் படித்துச் சொல்லுவார் (கேட்கச் செய்வார்) பன்னிரண்டாம் தேதி அவர் மதராஸுக்குத் திரும்புவார்.

(இ) குறிப்புக்கள்-नोट

1. எதிர் நோக்கியுள்ள (வரப் போகும்) காலத்தை 'எதிர்காலம்' அல்லது 'வருங்காலம்' என்கிறோம்.

2 ஹிந்தியில் எதிர்கால வினைச் சொற்களை அமைக்கும் முறைகள் பாடத்திலுள்ள பட்டியல்களில் விளக்கப்பட்டிருக்கின்றன.

3 **ले, दे, हो** முதலிய வினைகளுக்கு எதிர் காலத்தில் சில விசேஷமான ரூபங்கள் உண்டு

4 மெய்யொலியில் முடியும் வினைப் பகுதியுடன் விகுதி சேரும்போது இயற்கையான ஸந்தி விதிகளின் படி வினைப்பகுதியும், விகுதியும் ஒன்றாகக் கலந்துவிடும்.

5 அப்படிக்கின்றி உயிரொலியில் முடியும் வினைப் பகுதியுடன் விகுதிகள் சேரும்போது அந்த வினைச் சொல்லின் ரூபங்கள் ஹிந்தியில் பல விதமாக வழங்குகின்றன நீங்கள் எந்த ரூபத்தை வேண்டுமானாலும் உபயோகிக்கலாம் எல்லாம் சரிதான்.

6 **सवेरे की गाड़ी** என்றால் 'காலையின் வண்டி' என்று ஸாதாரணமாக அர்த்தம் ஏற்படும். இங்கே அதற்குக் 'காலையில் புறப்படும் வண்டி' என்று அர்த்தம் கொள்ளலாம். இது ஒரு விசேஷமான அர்த்தம்.

7. **रात को आठ बजे, रात के आठ बजे** என்று இருவித ப்ரயோகங்கள் உண்டு **रात को आठ बजे** என்றால் 'இரவுக்கு (இரவில்) எட்டு மணிக்கு' என்று அர்த்தம். **रात के आठ बजे** என்றால் 'இரவின் எட்டு மணிக்கு' என்று அர்த்தம் இந்த இரு வித ப்ரயோகங்களுக்கும் தமிழில் 'இரவு எட்டு மணிக்கு' என்று அர்த்தம் சொல்வதே நல்லது.

8 **माननीय** என்ற சொல்லை அவஸரத்தில் குறுக்கி எழுதும்போது **मान.** என்றும் எழுதுவதுண்டு குறுக்கி எழுதினாலும் படிக்கும்போது அதை **माननीय** என்று விரித்துத்தான் படிக்கவேண்டும்.

(ஈ) சொற் களஞ்சியம்

शब्द-भंडार

कार्य—(ஆ பா) வேலை அலுவல். காரியம்.

क्रम—(ஆ பா.) முறை, வரிசை, திட்டம்.

कार्य-क्रम—(ஆ பா.) அலுவல் முறை, வேலை திட்டம் (Programme)

मान—(ஆ. பா.) மதிப்பு, மர்யாதை;

माननीय—மதிப்பிற்குரிய, கனம் (Honourable) **मानना**-மதித்தல் ஒப்புக்கொள்ளுதல்.

मंत्री—(ஆ பா.) மந்த்ரீ, காரியதரிசி (Minister, Secretary)

भ्रमण—(ஆ பா.) சுற்றுப்ப்ரயாணம் (Tour)

अगला-அடுத்த, வரப்போகும்(Next)

पिछला—சென்ற, கடந்த (Last)

प्रकार—(ஆ பா.) ப்ரகாரம். விதம்

रवाना होना—புறப்படுதல்.

मेल—(பெ. பா) மெயில் (Mail)

सम्मेलन—(ஆ பா) மஹாநாடு (Conference)

मज़दूर—(ஆ பா.) தொழிலாளி, கூலியாள்.

मज़दूरी—(பெ பா.) கூலிவேலை, கூலி.

माँग—(பெ பா) கோரிக்கை;

माँगना—கேட்டல், கோருதல்.

सूचना—(பெ. பா) அறிவிப்பு

स्पष्ट—விளக்கமான, தெளிவான, ஸ்பஷ்டமான;

स्पष्ट करना—விளக்குதல், தெளிவு-படுத்தல்

मुसाफ़िर—(ஆ. பா.) ப்ரயாணி.

बंगला—(ஆ. பா.) பங்களா.

ठहरना—தங்குதல்.

कन्या—(பெ. பா.) கன்னி; பெண்.

विद्यालय—(ஆ பா.) பள்ளிக்கூடம், வித்யாலயம்.

भवन—(ஆ. பா.) கட்டிடம்; வீடு.

नींव—(பெ. பா.) அஸ்திவாரம்.

डालना—போடுதல்.

जुलाहा—(ஆ பா) நெசவாளன், சேணியன்.

लौटना—திரும்புதல்.

मीरास—(பெ. பா.)மிராசு, பரம்பரை சொத்து.

मीरासदार—(ஆ. பா.) மிராசுதார், பரம்பரை சொத்துக்காரன்.

शिकायत—(பெ பா.) குறை (Complaint)

कठिन—கடினமான, கஷ்டமான;

कठिनाई—(பெ. பா.) கஷ்டம்.

दूर—(பெ. பா.) தூரம். தொலைவு;

दूर करना—அகற்றுதல், நீக்குதல் (To remove).

योजना, आयोजना—(பெ. பா.) திட்டம். ஏற்பாடு (Scheme, plan)

आम—(பெயர் உரிச்சொல்) பொதுவான (Common, public)

सभा—(பெ. பா.) கூட்டம், ஸபை, (Meeting, Association).

अस्पताल—(ஆ. பா.) ஆஸ்பத்திரி.

गीत—(ஆ, பா.) பாட்டு, கீதம்.

विशेष—விசேஷமான; **विशेषता**—(பெ. பா.) விசேஷம் (Speciality.)

कवि—(ஆ. பா.) கவி; **कविता**—(பெ. பா) கவிதை.

सुनना—கேட்டல்; **सुनाना**—கேட்கச் செய்தல் (சொல்லுதல்)

பயிற்சி 25-अभ्यास 25

(அ)

தமிழில் மொழிபெயர்க்கவும்:—

1. अगर आप इसको पढ़ेंगे, तो आपको सब बातें मालूम होंगी।

2. जो देखेगा, वही लेगा।

3. चूँकि तुम वहाँ देर से जाओगे, इसलिए वह तुमको नहीं मिलेगा।

4. यद्यपि वह उसे ख़रीदेगा, तो भी उसका उपयोग नहीं करेगा।

5. जितनी कुरसियाँ आप लाएँगे, उतनी कुरसियाँ मैं भी लाऊँगा।

6. जहाँ सुख होगा, वहाँ दुख भी होगा।

7. जैसा काम करेंगे, वैसा फल भी पाएँगे।

8. जब से वह मेहनत करेगी, तब से उसको रुपया भी मिलेगा।

9. सीता, जिसको तुम अब बुला ओगी, वही आएगा।

10. यहाँ तो न राम आएगा, न गोपाल।

(ஆ)

ஹிந்தியில் மொழிபெயர்க்கவும்:—

1. நீ அங்கே தினந்தோறும் போவாயா?
2. அவர்கள் எத்தனை மணிக்குக் குளிப்பார்கள்?
3. அமெரிக்கா இப்பொழுது என்ன செய்யும்?
4. அடுத்த டிஸம்பரில் அவன் எங்கே இருப்பான்?
5. அப்படியானால் மாலினி என்ன சாப்பிடுவாள்?
6. நீங்கள் அந்தக் கூட்டத்தில் என்ன பேசுவீர்கள்?
7. அவர்களுடன் எத்தனை பெண்கள் வருவார்கள்?
8. இந்தப் பையன்கள் எங்கே விளையாடுவார்கள்?
9. நீங்கள் பரிசு கொடுப்பீர்களா?
10. நாங்கள் அதை எடுத்துக் கொள்வோம்.

(விடைகள் அடுத்த இதழில்)

जय हिंद! जय हिंदी!

அட்டைப்படம்

★

அமெரிக்க தேச பிதா ஜார்ஜ் வாஷிங்டன் பிறந்த தினத்துக்கு முதல் நாள் ஜனித்த ஒட்டகக் குட்டியை அட்டையில் பாருங்கள். ஸான்பிரான்ஸிஸ்கோ மிருகக்காட்சி சாலையிலுள்ள 18-வயதான ஒரு ஒட்டகத்தையும் அது ஈன்ற கன்றையும் சேர்த்து எடுத்த படம்.

வாழ்க்கைச் சுழல்..

'இந்து'

36

ஒருவனுக்கு நல்லகாலம் வர ஆரம்பித்துவிட்டால் பணமோ, பாக்யமோ, அந்தஸ்தோ, இவன் வேண்டாமென்று உதறித் தள்ளினுல்கூட இவனை வலிய வந்து பற்றிக்கொள்ளும் அது ஒரு குறிப்பிட்ட மார்க்கத்தின் மூலமாகத்தான் வரவேண்டுமென்பதில்லை எந்த வழியாக வேண்டுமானுலும் இவனை வந்து பற்றிக்கொள்ளும் அது. அப்படி ஒரு உறவினன் இருக்கிருனென்பதே இவனுக்குத் தெரிந்திருக்காது வயிற்றுக்குக்கூடச் சரியாகச் சாப்பிடாமல் ஒரு தள்ளாத விதவை பரலோக யாத்திரை செய்துவிடுவாள் அனந்தரவார்ஸ் என்ற பாத்யதையில் ஸ்ரீரங்கத்தில் இரண்டடுக்கு மாடிவீடு காவேரிப் பாய்ச்சலில் ஒரு மூன்று வேலி நிலம். கொடுக்கல் வாங்கலில் ஒரு பதினுயிரம் ரூபாய். ஆக ஒரு ஐம்பதினுயிரம் ரூபாய் சொப்பனத்தில் கூட எதிர்பார்க்காமல் இவனைத் தேடிக்கொண்டு வந்து சேர்ந்து விடும். அது மாத்திரமில்லை தொட்டதெல்லாம் பொன் என்று சொல்லுவார்களே அந்த மாதிரி எந்த வியாபாரம் செய்தாலும் ஒன்றுக்குப் பத்து மடங்கு லாபம் வந்து குவிந்துவிடும். சாதாரணமாக ஒரு பற்பொடி வியாபாரம் என்று ஆரம்பிப்பான் அது பிரமாதமாகப் போய் இந்தியாவின் பல பாகங்களில் அதற்குக் கிளைகள் ஏற்பட்டு' எந்தப் பத்திரிகையை எடுத்தாலும் அதில் கால் பக்கத்துக்குக் குறையாமல் இரண்டு கலர்களிலும் மூன்று கலர்களிலும் இந்தப் பற்பொடியைப் பற்றிய விளம்பரம் இராமலிராது பதவி விஷயத்திலும் அப்படித்தான். ஒரு மாகாணத்தின் பிரதம மந்திரி பதவிக்கோ, ஜில்லா போர்டின் தலைவர் பதவிக்கோ இரு கட்சிகளிடையே பிரமாதமான தகராறு ஏற்பட்டு, அந்த இரு கட்சியையும் சேராத மூன்ருவது பேர்வழியான இவன் தலையில் அவ்விரு கட்சியினரும் வலுக்கட்டாயமாகக் கொண்டு கட்டி விடுவார்கள் அந்தப் பதவியை. அந்தப் பதவியைப்பற்றி மனதாற் சிந்தித்துப் பார்க்கக்கூட இவனுக்கு யோக்யதை இருக்காது. அதற்கென்ன செய்வது! அதிர்ஷ்ட தேவதையின் பரிபூர்ண கடாக்ஷம் இவன் பக்கம் திரும்பிவிட்ட பிறகு யோக்யதையைப்பற்றி நீங்களும் நானும்பேசி என்ன உபயோகம்!

உயிர் விஷயத்திலும் அப்படித்தான்...விமான விபத்து இருபத்தி நான்கு பிரயாணிகளில் ஒருவரே உயிர் தப்பினுர்' என்று கொட்டை எழுத்துக்களில் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருக்கும். ஜனங்கள் பரபரப்புடன் செய்தியைப் படிப்பார்கள் உயிர்தப்பிய அந்த ஒரே நபர் இந்த அதிர்ஷ்டக்காரப் பேர்வழியாக இருப்பார். விபத்துக்குப் பலியானவர்களின் ஜாப்தாவில் சில பெரிய மேதாவிகள் அடங்கியிருப்பார்கள். வாசகர்கள் ஏமாற்றத்துடனும் வருத்தத்துடனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்வார்கள். அதற்கென்ன செய்யலாம்! அவனுடைய நல்லகாலம் அப்படி வேலை செய்கிறதே!

தேர்தல் விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் இப்படித்தான் இந்தப் பேர்வழிக்கும் இவருடைய போட்டி அபேட்சகருக்கும் சம வோட்டுகள் கிடைத்திருக்கும். திருவுளச்சீட்டு போடுவார்கள். வெற்றி இவனுடையதாகத்தான் இருக்கும்

அதுதான் சொல்வதாயிற்றே நல்லகாலம் பிறந்துவிட்டால், தெய்வம் காட்டுவதோடுமட்டும் நில்லாமல் ஊட்டவும் ஊட்டும் வீட்டுக் கூரையைப் பிய்த்துப் பணத்தைப் போட்டுவிட்டுப்போகும் என்று.

இதேமாதிரிதான், ஒருவனுக்குக் கெட்டகாலம் வர ஆரம்பித்துவிட்டால், காரியங்கள் எல்லாம் நேர்விரோதமாகமுடியும், தொட்டதெல்லாம் கரியாகப் போய்விடும். அந்தப் பிரதேசத்திலேயே தனித்து எடுத்துக் காட்ட வேண்டுமென்று லக்ஷக்கணக்கில் பணத்தைச் செலவழித்து பிரும்மாண்டமான ஒரு கட்டிடத்தைக் கட்டுவான் சிமிட்டிக் கட்டிடம் ஆறே மாதத்தில் டார் டாராக' வெடித்து பைசாவுக்குக்கூட உபயோகமில்லாமல் போய்விடும்.

வியாபார விஷயமும் அப்படித்தான் மூன்று தலைமுறையாக பிராபல்யத்துடன் நடைபெற்று வந்த ஜவுளி வியாபாரம் திடீரென்று திவாலாகப்போய் 'ஆள் மிகுந்தால் போதும் என்ருகிவிடும்

'ஐம்பது வேலி பூமி லக்ஷம் ரூபாய்க்கு லேவாதேவி ஒரு கொட்டாய்கொள்ளாது மாடுகள் எத்தனை படியாள்! எவ்வளவு ஹோதா? எல்லாம் எங்கேயோ மாயமாய் மறைந்துவிட்டது பார்த்தாயா? இத்தனைக்கும் அதிக நாள் கூட இல்லை. எல்லாம் ஒரு ஏழெட்டு வருஷகாலத்துக்குள் இந்த அலங்கோலம். பாவம்! அவனுக இருக்கவே உயிரை வைத்துக்கொண்டிருக்கிருன் வேறு யாராவதாக இருந்தால் இந்த கஷ்டத்துக்கு என்றைக்கோ தற்கொலை செய்துகொண்டிருப்பார்கள்! என்று சிலரைப்பற்றி நாம் அனுதாபத்துடன் சொல்வதெல்லாம் இந்தக் கெட்ட காலம் படுத்தி வைக்கிற பாடுதான்.

எதற்காகச் சொல்லுகிறேனென்ருல் நாங்கள் டாக்ஸியைவிட்டு இறங்கியவுடனே தந்திச் சேவகன் என் கணவரிடம் ஒரு தந்தியைக் கொடுத்தானல்லவா? இதற்கு முன்னுல் இந்த மாதிரி ஒரு தந்தி வந்தால் என் பாடு கலகலத்துவிடும். இவர் என்ன அசட்டுக் காரியம் செய்துவிட்டு என்ன ஆபத்தில் சிக்கிக்கொண்டுவிட்டாரோ என்று மனது தவிக்கும் அப்பொழுது இவரைப் பற்றி ஒரு தப்பபிப்ராயம் உண்டாகி இவருடைய காரியங்கள் எல்லாவற்றிலுமே ஒரு விதமான சந்தேகம் ஏற்பட்டிருந்ததுதான் அதற்குக் காரணம் இப்பொழுது நிலைமையே மாறிவிட்டதல்லவா? அதாவது நாங்கள் இவரைப் பற்றி

நினைத்ததெல்லாம்தவறுஎன்பதுஏற்பட்டுவிட்டதல்லவா?
அத்துடன் கோபுவின் வழக்கு ஜெயித்ததிலிருந்து எங்
களுக்கு நல்ல காலமும் பிறந்துவிட்டதல்லவா? ஆகவே
இனி ஏதாவது தந்தியோ கபாலோ எது வந்தாலும் நல்ல
தாகத்தான் இருந்தாக வேண்டும். இல்லாவிட்டாலும்
பயப்பட வேண்டிய அம்சம் ஒன்றும் அதில் இராது
என்கிற வரையில் மனதுக்கு நிச்சயம் ஏற்பட்டுவிட்டது
அதற்கு ஏற்ற மாதிரி என் கணவரும் தந்தியைப் படிக்
கும்போது லேசாக அவர் முகத்தில் புன் சிரிப்பு தோன்றி
யதைக் கவனித்தேன் 'என்னடா தந்தி? என்ருர்மாமியார்.
'ஊரிலிருந்து வந்திருக்கிறது' என்ருர் என் கணவர்.
'க்ஷேம ஸமாச்சாரந்தானே?' என்ருர் மாமியார்.
'க்ஷேம ஸமாச்சாரந்தான் ஊரில் கோடி வீட்டுக்
காரன் இருக்கிருனேலியோ?
'இருக்கிருன் ஊரார் வயிற்றெரிச்சலை யெல்லாம்
கொட்டிக்கொண்டு காலும் அரையும் கொடுத்துப் பொய்க்
கணக்கெழுதி ஊரார் நிலத்தையெல்லாம் வாங்கிக்
கொண்டு திண்ணையில் கால்மேல் கால் போட்டுக்கொண்டு
போவார் வருவாரை யெல்லாம் அதிகாரம் பண்ணிக்
கொண்டு உட்கார்ந்திருக்கிருன் ஹும்! இருக்கட்டும்,
இருக்கட்டும்! என் வயிற்றெரிச்சல் ஒரு நாளும் வீண்
போகாது , என்று சொல்லிக்கொண்டே ஒரு பெருமூச்சு
விட்டார் மாமியார்
'அதெப்படிப் போகும் போகவே போகாது' என்று
சொல்லிவிட்டுச் சிரித்தார் என் கணவர்
'ரகு! நீ என்னமோ சிரிக்கிருய்! நீ ஆயிரம் ஆயிரமாகத்
தான் சம்பாதி பங்களாவும், காரும் வைத்துக்கொண்டு
பெரிய அந்தஸ்திலதான் இரு. எது இருந்தாலும் உன்
தகப்பனுர் உயிருக்கு உயிராக மதித்த அந்த நடுக் கழணி
நம் கையை விட்டுப் போய் விட்ட குறை மாத்திரம் என்
மனதில் இருந்து கொண்டேதான் இருக்கும் என்ருர்
மாமியார். 'அது நம் கைக்கே திரும்பி வந்து விட்டால்?'
என்ருர் என் கணவர்
அடே ரகு! அது நம் கைக்கு திரும்பி வராவிட்டாலும்
போகிறது! இப்படிப்பட்ட ஒரு வார்த்தையைக் கேழ்க்
கும்போது என் காதில் அமிர்த வர்ஷம் வர்ஷிக்கிறமாதிரி
இருக்கிறதடா என்ருர் மாமியார்.
இப்பொழுது உன் காதில் அமிர்த வர்ஷமே வர்ஷிக்கப்
போகிறது என்ருர் என் கணவர்
மாமியார் ஒன்றும் புரிந்து கொள்ள முடியாமல் விழித்
தார். 'நடுக்கழணி நம்கைக்கே வந்துவிட்டது' என்ருர் என்
கணவர் சிரித்துக்கொண்டே
'என்னது! என்ன சொல்கிருய்?' என்ருர் மாமியார்.
'நடுக்கழணி நம் கைக்கே வந்து விட்டது என்று சொல்
கிறேன்' என்ருர்

'போடா! விளையாடாதேடா ரகு! என்ன ஸமாசாரம் சொல்லு' என்று பரபரப்புடன் கேட்டார் மாமியார்.

உண்மையாகத்தான் சொல்லுகிறேன் அம்மா! நடுக்கழணி நம் கைக்கே வந்து விட்டது எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லுகிறேன். வாருங்கள் எல்லாரும் உள்ளே போகலாம்' என்ருர்.

எல்லாரும் உள்ளே சென்ருேம். கோபுவும் நளினியும் டாக்ஸியில் போய் விட்டார்கள் மாமியாருக்கு சந்தோஷம் பிடி கொள்ளவில்லை இறந்தவன் உயிர் பெற்று வந்தால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது அவருடைய நிலைமை,

'என்னடா ரகு!என்ன ஸமாசாரம்? ஒளிக்காமல் உள்ளதைச் சொல்' என்ருர் மாமியார்

'அந்தக் கோடி வீட்டுக்காரப் பேர்வழி இருக்கிருனல்லவா? அவன் சொத்தெல்லாம் ஏலத்தில் போய் விட்டது' என்ருர் என் கணவர்.

என்னது? ஏலத்தில் போய் விட்டதா? நிஜமாகவா?' என்று ஆச்சரியம் நிறைந்த குரலில் கேட்டார் மாமியார்.

'நிஜமாகத்தான் அம்மா!'

'எப்படியடா அது? அவன் மகா கெட்டிக்காரனுயிற்றே கொஞ்சம் கொஞ்சமாகப் பிறர் சொத்தைக் கிரகிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த அவன் தன்னுடைய சொத்து ஏலத்தில் போகும்படி எப்படியடா பார்த்துக்கொண்டிருந்து விட்டான்? அதென்னமோப்பா! உன் வார்த்தையில் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை'

'நம்ம கெட்டிக்காரத்தனத்தில் என்ன அம்மா இருக்கிறது! நீதான் சற்று முன்பு சொன்னுயே, உன் வயிற்றெரிச்சல் வீண் போகாதென்று அது தானே என்னமோ? ஒன்று மாத்திரம் நிச்சயம் இந்த ஜனங்களுக்கு வேண்டுமானுல் அது புரியவில்லையே தவிர, நம்மிடம் அக்கிரமமாகச் சேரும் பிறருடைய ஒவ்வொரு காசும் நம்முடைய சொந்த சொத்துக்கு எமன் என்பது மாத்திரம் நிச்சயம். அதில் கொஞ்சம் கூடச் சந்தேகமே வேண்டியதில்லை அதற்கென்ன சிலர் விஷயத்தில் அதன் பலன் உடனே தெரிந்துவிடுகிறது. சிலர் விஷயத்தில் நாள் கழித்துத் தெரிகிறது. அவ்வளவே தவிர ஆபத்து என்னவோ ஆபத்துதான். சில குழந்தைகள் பிறந்தவுடனேயே செத்துவிடுகிறதுகள் சிலது பத்து வயதில் சாகிறது சிலது எண்பது தொண்ணூறு வயதில் சாகிறதுகள் ஆகக்கூடி இன்றைக்கில்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு மரணம் என்னவோ நிச்சயம். அதில் எமன் கையிலிருந்து தப்ப முடியாது அந்த மாதிரி தான் இதுவும். இதோ பாரேன்! பொய்க் கணக்கெழுதி அக்கிரமமாக எல்லோருடைய சொத்தையும் ஸ்வீகரித்துக்கொண்டு தான் உலகையே ஜெயித்துவிட்டதாக மார் தட்டிக்கொண்டிருந்தான் அது எப்படித்தான் அவனுக்குக் கடன் ஆயிற்ருே தெரியவில்லை சிலர் சொல்லுகிருர்கள். அவன் நடத்தை சரியில்லையென்றும். அதில் பணத்தையெல்லாம் அழுது கடன்காரனுகிவிட்டானென்று. வேறு சிலர் சொல்லுகிருர்கள். எவனே இவனுக்கு விரோதி ஒருவன் வீட்டில் புகுந்து அண்டிமாண்டுகளையும், முக்யமான தஸ்தாவேஜிகளையும், மற்றும் ரொக்கத்தையும் களவாடிக்கொண்டுபோய்விட்டதாக எது எவ்வளவு தூரம் நிஜம் என்பது தெரியாது. இவன் வெளியில் வாங்கியிருந்த கடன்களுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டு அதற்கு ஜவாப் சொல்ல முடியாமல் அவர்கள் கோர்ட்டில் போட்டு இவனுடைய சொத்து ஏலத்துக்கு வந்துவிட்டது. நேற்று ஏலம் இந்தத் தகவல் முதலில் எனக்குத் தெரியாது.



நம்ம பக்கத்து வீட்டு சீனு மாமா இருக்கிறரல்லவா?' என்று என் கணவர் சொல்லியதும், 'ஆமாம்! அவர் உன் தகப்பனருக்கு அப்படிப்பட்ட ஆப்தர். உடல் இரண்டே தவிர அவர்கள் உயிர் ஒன்றுபோல் தான் இருந்தார்கள். ஆமாம் என்ன சீனு மாமாவுக்கு? என்றார் மாமியார்.

'அவரிடமிருந்து நேற்று முன் தினம் எனக்கு ஓர் கடிதம் வந்தது அதில் கோடி வீட்டுக்காரனுடைய சொத்தெல்லாம் ஏலத்துக்கு வந்திருக்கிறதென்றும் நேற்றைய தினம் ஏலமென்றும் பணத்துடன் வந்தால் நடுக்கழணியை ஏலத்தில் எடுத்துவிடலாமென்றும் எழுதியிருந்தார் உடனே நான் எனக்கு வேண்டிய ஒருவரிடம் விஷயத்தைச் சொல்லி கொஞ்ச ரூபாய் கடன் வாங்கி என் நண்பர் ஒருவரிடம் கொடுத்து நிலத்தை ஏலத்தில் எடுத்துவிடும்படி ஊருக்கு அனுப்பியிருந்தேன். அவரிடமிருந்துதான் தந்தி வந்திருக்கிறது. நடுக் கழணியை ஏலத்தில் எடுத்து விட்டாராம் மீதி அவனுடைய சொத்தை யார் யாரோ ஏலத்தில் எடுத்துவிட்டார்களாம். கடைசியாக அவனுக்கு மிஞ்சியது வீடும் ஒரு ஏகரா பூமியும்தானும் அதுகூட அவனுடைய மைத்துனன் அவனுக்காக ஏலத்தில் எடுத்திருக்கிறனும்', என்றார் என் கணவர் அப்பொழுது மாமியாரின் முகத்தில் ஏற்பட்டிருந்தஓர் சந்தோஷத்தைப் பாக்க வேண்டுமே!

'நிஜமாகவாடா ரகு?' என்று அப்பொழுதும் நம்பிக்கை ஏற்படாமல் கேட்டார். மாமியார்.

'நிஜமாகத்தான் அம்மா நான் எதற்குப் பொய் சொல்ல போகிறேன் உன்னிடத்தில்? அதிலும் இந்த விஷயத்தில். நிஜந்தான்' என்றார் என் கணவர்.

ஆமாம்! ஏலத்தில் நடுக்கழணியை மாத்திரம்தானே எடுத்திருக்கிறய்?' என்றார் மாமியார்

'எல்லாம் எனக்குத் தெரியும் அம்மா. வயிறெரிந்து வரும் அவனுடைய சொத்து நமக்குக்கூடாதென்று நம் நடுக்கழணியை மாத்திரம்தான் ஏலத்தில் எடுக்கும்படி சொல்லியனுப்பியிருந்தேன். அவரும் நடுக் கழணியை மாத்திரம்தான் ஏலத்தில் எடுத்திருப்பதாகத் தெரியப் படுத்தியிருக்கிறர்' என்றார் என் கணவர்.

'எனக்கு மாத்திரம் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு ஒரு சொப்பனமடா நம்ம நடுக் கழணி நமக்கே வந்து விடுகிறமாதிரி சொப்பனம் கண்டேன் அதே ஞாபகமாக இருக்கிறேமே அதனுல் அது சொப்பனத்திலும் வருகிறது என்று அசிரத்தையாய் இருந்து விட்டேன் அத்துடன் இந்த மாதிரி ஒரு சொப்பனம் கண்டேன் என்று மறுநாள் பொழுது விடிந்ததும் உன்னிடம்சொல்ல வேண்டுமென்ற எண்ணந்தான் 'ஆமாம் உனக்கென்ன வேலை? நடுக்கழணி, நடுக்கழணி என்று சொல்லிக் கொண்டே பிராணனைவிட்டு விடு உலகத்திலே பெரிய பெரிய ராஜ்யங்களெல்லாம் கை மாறிவிடுகிறது விதியின் விளையாட்டு என்று மனதைத் தேற்றிக்கொண்டு போய் விடுகிறர்கள் ஒரு பிசாத்து நடுக் கழணி போய்விட்டதாம். காலையில் எழுந்தால் இரவு படுக்கப் போகிற வரை நடுக்கழணி, நடுக்கழணி, இதே நாமஸ்மரணைதானு! கிருஷ்ணு, ராமா என்று நாலுதரம் பகவந்நாமாக்களைச் சொன்னலும்போகிற இடத்துக்காவது புண்யமுண்டு' என்று சத்தமிடப்போகிறயே என்று பேசாமல் இருந்து விட்டேன். விடியற்காலையில் காணும் சொப்பனம் பலிக்கும் என்று சொல்கிறர்களே சரியாகத்தானிருக்கிறது பொழுதுவிடிய ஐந்தாறு நாழிகை இருக்கும் அப்பொழுதுதான் இந்த சொப்பனத்தைக் கண்டேன்' என்றார் மாமியார்

'அதெல்லாம் எப்படியாவது போகட்டும் இனிமேல் உன் மனதில் ஒரு குறையும் கிடையாதே?' என்றார் என் கணவர் இனிஎனக்கு ஒருகுறையும்கிடையாதுடா அப்பா! நடுக்கழணி குறை ஒன்று இருந்தது அதுதான் தீர்ந்து விட்டது இன்னென்று கனகாவின் அகமுடையானைப் பற்றிய விசாரம் அதுவும் தீர்ந்துவிட்டது இனி எனக்கென்னடா அப்பா. விசாரம்? இந்தமட்டோடு பகவான் என்னைத் திருவுள்ளம் பற்றிவிட்டாரானுல்' போறும் எனக்கு' என்றார் மாமியார்.

அப்பொழுது இது விஷயத்தில் மாமியாரைவிட எனக்குத்தான் அதிக சந்தோஷம் என்று சொல்லவேண்டும். ஏனென்றல் இந்த நடுக்கழணி கைமாறிவிட்டது என் கணவரின் அசிரத்தையினுல்தான் என்பது பொதுவாக என் மாமியாரிடமும் நாத்தனரிடமும் ஏற்பட்டிருந்த அபிப்ராயம் அதனுலேயே அவர்கள் அந்த நடுக்கழணியைப்பற்றி என் முன்னிலையில் சொன்னுல் வேண்டுமென்றே அவர்கள் எனக்காகவே சொல்கிறமாதிரிதான் எனக்குத் தோன்றி என் மனது கஷ்டப்படும் உண்மையில் என் மனதில் உறுத்தவேண்டுமென்றுதான் சொல்வார்களோ அல்லது அவர்கள் மனது தாளாமல் இயற்கையாகத்தான் சொல்வார்களோ அதன் அந்தரங்கம் எனக்குத் தெரியாது. என் மனதில் மாத்திரம் எனக்காகச் சொல்வதாகத்தான் தோன்றும் இதற்கு ஒரு விமோசனம் ஏற்பட்டதல்லவா? அது விஷயத்தில் என்னுடைய சந்தோஷத்தைச் சொல்லியே முடியாது

'எல்லாம் சரிதான் இன்று வெள்ளிக்கிழமையாக இருக்கிறது. உடனே கோவிலுக்குப்போய் ஒரு வெள்ளிக்கிழமை உத்ஸவத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டுவா' என்றார் மாமியார்.

'நானும் அதைத்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். நீங்களே சொல்லிவிட்டீர்கள் என்றேன் நான் மாமியாரைப்பார்த்து

'பார்த்தாயா, எப்படி எப்படிபோய் முடிந்திருக்கிறதென்று?' என்றாள் வீட்டுக்கார மாமி

'எல்லாம் பெருந்தேவித் தாயாரின் கிருபைதான்' என்றேன்.

'இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்கிற மாதிரி இருந்துகொண்டு என்னதான் செய்திருக்கிறர் பார்த்தாயா?' என்றாள் மாமி என் கணவரைப்பற்றி

அப்பொழுது தெருவில் ஓர் மோட்டார் வந்து நின்றது.

டிரைவர் உள்ளே வந்து 'உங்களையும் அம்மாளையும் (என்னை) கோபு உடனே அழைத்துக்கொண்டு வரச் சொன்னர்' என்றான்

'என்ன விசேஷம்?' என்று கேட்டார் என் கணவர்.

'அதெல்லாம் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. போய் உடனே இரண்டு பேரையும் அழைத்துக்கொண்டு வா என்று சொன்னர். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்' என்றான் டிரைவர்

'வீட்டில்தானே இருக்கிறர்?' என்று கேட்டார் என் கணவர்.

'வீட்டில் இல்லை இதோ இந்த இடத்தில் இருக்கிறர்' என்று ஒரு விலாஸத்தைக் கொடுத்துவிட்டு 'இங்குதான் உங்களையும் அழைத்துக்கொண்டு வரச்சொல்லியிருக்கிறர்' என்றான் டிரைவர்.

'சரி! என்ன விசேஷமோ? கிளம்பு போகலாம்' என்றார் என் கணவர் என்னை நோக்கி

உடனே நாங்கள் இருவரும் டாக்ஸியில் ஏறிக்கொண்டோம்.

(தொடரும்)

[சில்லரை விலைகள்]

(விற்பனை வரி தனியாக செலுத்தவேண்டும்)

சென்னை, ஆகஸ்ட் 14—

அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்களின் விலைவாசிப் போக்கைக் குடும்பத்திலுள்ளவர்கள் தெரிந்து கொள்வதற்கு உதவியாகச் சென்னை நகரிலுள்ள நிலவரத்தைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். இவையெல்லாம் அவ்வப்போது மாறுதலுக்குட்படக்கூடியவை. எனவே இதில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போலவே சில பண்டங்கள் கிடைக்கலாம் அல்லது சற்று ஏறத்தாழவும் சில இடங்களில் விற்கப்படலாம். பொதுவாக விலைகளின் ஓட்டத்தை உணர இது பயன்படும்.

			ரு	அ	பை
உப்பு	1-படி	...	0	1	0
துவரம் பருப்பு	1-படி	...	1	1	0
உளுத்தம் பருப்பு	,,	...	1	4	0
பயத்தம் பருப்பு	,,	...	1	4	0
உளுந்து	,,	...	1	1	0
கடலைப் பருப்பு	,,	...	—	—	—
எள்ளு	,,	...	1	8	0
கடலை	1-வீசை	...	0	8	3
கடலை மாவு	,,	...	—	—	—
கடுகு	,,	...	2	0	0
வெந்தியம்	,,	...	1	14	0
மிளகு	,,	...	18	0	0
மிளகாய்-ராமநாதபுரம்	,,	...	4	4	0
தனியா	,,	...	3	6	0
புளி [புதுசு]	,,	...	1	4	0
சீரகம்	,,	...	4	0	0
வெல்லம்	,,	...	1	10	0
நாட்டு சக்கரை	,,	...	1	11	0
அஸ்கா சர்க்கரை	,,	...	1	5	0
மஞ்சள்	,,	...	2	0	0
பூசு-மஞ்சள்	,,	...	1	14	0
குங்குமம்	,,	...	2	0	0
பாதாம்	,,	...	4	4	0
சீயக்காய்	,,	...	1	1	0
சீயக்காய் பொடி	,,	...	1	10	0
வாஷிங் சோடா	,,	...	0	10	0
திராக்ஷை	,,	...	6	0	0
முந்திரிபருப்பு	,,	...	4	8	0
களிப்பாக்கு	,,	...	5	8	0
நெய்	,,	...	8	8	0
நல்லெண்ணெய்	,,	...	3	6	0
ஜவ்வரிசி	,,	...	2	12	0
தேங்காய் எண்ணெய்	,,	...	3	10	0
கடலெண்ணெய்	1-வீசை	...	2	11	0
ரேடியோ எண்ணெய்		...	3	4	0
விளக்கெண்ணெய் பாட்டில் பெரிசு		...	1	12	0
டிை சிறியது		...	0	9	0
வாசனை விளக்கெண்ணெய் 4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு		...	1	5	6
16 ,, ,, பாட்டில் 1-க்கு		...	3	1	6
காப்பிக்கொட்டை பீபரி	1 வீசை	...	5	9	0
,, 'A' ,,	,,	...	5	3	0
பார்லி	1-வீசை	...	2	0	0
கரி 1 மூட்டை	(56 ப.)	...	4	0	0
டால்டா வனஸ்பதி	10 ப	...	12	0	0
டிை	5 ப	...	6	6	0
கற்பூரம்	1-பலம்	...	0	8	0
சாம்பிராணி	1 பலம்	...	0	6	0
பெருங்காயம்	,,	...	0	4	0
லவுங்கம்	,,	...	0	3	0
ஏலக்காய்	,,	...	0	15	0
எல் ஜி பெருங்காயம்	1 சேர்	...	2	2	0
தீப்பெட்டி	1 டஜன்	...	0	8	6
ஓவல்டின்		...	4	8	0
'ரௌண்டிரீஸ் (R.T.) கொக்கோ	½ ப	...	1	7	0
ஸன்லைட் சோப்	பெரியது	...	0	5	3
,,	சிறியது	...	0	3	0
ஹமாம் சோப்		...	0	6	0
லைப்பாய்		...	0	5	6
டாம்கோ 501 பார்		...	1	3	0
லக்ஸ்		...	0	6	0
ரெக்ஸோனு		...	0	7	0
மார்கோ சோப்பு		...	0	8	9
777 பார் 1-க்கு		...	1	4	0
காந்தி டாய்லட் சோப் 1-க்கு		...	0	6	0
மைசூர் 'ஸாண்டல் சோப		...	0	10	0
கேரளா ஸாண்டல் சோப்பு		...	0	7	6
மெடிகோ டாயிலட சோப்		...	0	8	6
காட்ரீஜ் சோப்	நெ 1	...	0	11	0
மேட்டூர் சந்தன ஸோப் 1 கட்டி		...	0	9	0
ரூப் டாய்லெட் ஸோப்—ஸ்டாண்டர்டு		...	0	6	0
,, கெஸ்ட் ஸைஸ்		...	0	2	0
காவேரி ஸுபர் கார்பாலிக் (பெரிது)		...	0	4	6
,, (சிறியது)		...	0	2	9
காவேரி வாஷிங் கேக்		...	0	4	0
காவேரி வாஷிங் க்யூப்		...	0	3	6
காவேரி பார் ஸோப்		...	1	3	0
டாம்கோ ஹேர் ஆயில் (சிறிய பாட்டில்)			1	2	0
டிை (பெரிய பாட்டில்)		...	2	15	0
குங்குமப் பூ [1 பாட்டில்]		...	1	4	0
பச்சை கற்பூரம் 1 விராகனிடை		...	0	6	0
"பினைல்' பாட்டல்		...	0	13	6
குடிகூரா பவுடர்	1 டின்	...	—	—	—
நீம் டூத் பேஸ்ட்		...	1	1	0
மாக்லீன் பேஸ்ட்		...	1	2	0
பார்ஹான்ஸ் பேஸ்ட் (பெரியது)		...	2	12	0
7 ஓ க்ளாக் க்ஷவர ப்ளேட் (10 கொண்ட பாக்கட்)		...	1	0	0
டிை (5 கொண்ட பாக்கட்)		...	0	8	0
கோரா டீ (டஸ்ட்)	1-பவுண்ட்	...	2	5	6
கோரா டீ ½ பவுண்ட்		...	0	9	6
கோரா டீ ¼ பவுண்ட்		...	0	4	9

அலமேலுவின் கனவு!

..ஸ்ரீமதி செல்லம் டி. திருநாராயணன்.....

சிவஸ்வாமி அய்யர் மகள் அலமேலு கூறிய சம்பவங்கள் சிலவற்றை நினைத்தால் "அரேபியன் நைட்ஸ்" முதலிய கதைகள்கூட ரஸமாக இருக்காதுபோலத் தோன்றுகிறது. இது நடந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. ஆயினும் எங்கள் மனதை விட்டு அவைகள் நீங்கவேயில்லை. அப்பொழுது அலமேலு உடம்பு சரியில்லாமல் கணவன் வீட்டிலிருந்து தாய் வீட்டிற்கு வந்திருந்தாள் எங்களுடைய பங்களாவும் அவளுடைய தந்தை வக்கீல் சிவஸ்வாமி அய்யர் பங்களாவும் அடுத்து அடுத்து உள்ளன. சிறு வயதில் அலமேலுவிற்குப் படிப்பே ஏறுது வெகு சிரமத்துடன் சில வகுப்புகள்தான் படித்தாள் ஆனால், அதிர்ஷ்ட வசமாகக் கணவன் சர்வகலாசாலைப் பட்டாதாரியாக வாய்த்தான்.

அவளுக்கு அப்பொழுது ஒரு சிறு ஆபரேஷன் நடக்கவேண்டியிருந்தது வீட்டிலேயே செய்துகொள்ளப் போதிய வசதியில்லாததால், அவள் தந்தை அவளை டாக்டர் சுந்தரேச அய்யர் நர்ஸிங் ஹோமில் சேர்த்தார் அவர் மிகுந்த அனுபவமுள்ள வயதான டாக்டர் தம்முடைய வைத்திய திறமையினுல் மிகவும் புகழ் பெற்றிருந்தார்.

அப்பொழுதுதான் எங்களுடைய சிந்தனைகளை வியப்பில் ஆழ்த்தும்படியாக அலமேலு கூறிய சம்பவங்கள் இருந்தன. முதலில் நாங்கள் இதைக் கேட்டபொழுது எங்களுக்கு மயிர்க்கூச்சலாக இருந்தது

ஒரு நாள் நாங்கள் அவளைப் பார்க்க வைத்தியசாலைக்குச் சென்றிருந்தபொழுது அவள் முகமே பீதியடைந்திருந்தது அவளுடைய பீதியின் காரணத்தை நாங்கள் கேட்டபொழுது, அவள் 'எனக்கு விழிப்பும் தூக்கமும் இல்லாத நிலை ஒன்று திடீரென்று வருகிறது என்னென்னமோ காட்சிகள் என் கண்களில் தெளிவாகப் படுகின்றன சீக்கிரம் வீட்டிற்கு வந்துவிட வேண்டும்போல் இருக்கிறது' என்றாள்

நாங்கள் "அவள் கனுக்கண்டிருப்பாள் தனியாகப் படுத்துக்கொண்டிருப்பதால், அவளுக்கு பகல் கனவுகள் பயமாக இருக்கிறது" என்று அவளுடைய அறியாமையை எண்ணிச் சிரித்தோம். அவள் வீட்டிற்கு வந்த பிறகு இரண்டு மாதம் வரை எங்கள் கண்களிலேயே படவில்லை. நாங்களும் அவளைப்பற்றி அக்கரைப்படவில்லை ஒரு வேளை அவளுக்கு மறுபடியும் உடம்பு சரியில்லைபோலிருக்கிறது அதனுல்தான் கண்ணில் படவில்லை என்று நானும் அம்மாவும் பேசிக்கொண்டோம்

ஒரு நாள் மாலை 7-மணி இருக்கும் விளக்கு வைத்தாய்விட்டது, அப்பொழுது வைகாசி மாதம் வீட்டைச் சுற்றியுள்ள முல்லைக்கொடிகளில் பூக்கள் பூத்துக் குலுங்கிக்கொண்டிருந்தன அவற்றின் மணம் காற்றுடன் கலந்து வந்து எங்களுடைய மனதை ரம்மியப்படுத்தியது. சுவாமியின் படத்திற்குப் போடுவதற்காக நான் பூத்தொடுத்துக்கொண்டு வாசலில் உட்கார்ந்திருந்தேன் என் தம்பி உலாவிக்கொண்டிருந்தான்.

எதிர்பாராத விதமாக அலமேலு திடீரென்று வந்து என்னருகில் உட்கார்ந்துகொண்டாள்.

"என்ன அலமேலு, உன்னை வர வரப் பார்ப்பதே அதிசயமாக இருக்கிறதே! உடம்பு தேவலையா? எப்பொழுது ஊர்ப்பயணம்?" என்று சரமாரியாகக் கேள்விகளைப் போட்டேன்.

நான் கேட்ட கேள்விகள் ஒன்றுக்கேனும் சரியாகப் பதில் சொல்லாமல் என் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு அவள், "நான் இரண்டு மாதங்களாக அனுபவித்த விசித்திரமான நிலைமையை ஒருவருமே இதுவரையில் அனுபவித்திருக்கமாட்டார்கள். நான் சொல்லுவதை நீ நம்புவாயா? நம்புவதும் கஷடம்தான். இருந்தாலும் நமக்கு வெகுநாளைய பழக்கமானதால், உன்னிடம் சொல்லாமல் நான் யாரிடம் சொல்லுவேன்? கட்டுக்கதை என்று நீ சிரித்தாலும் நான் சொல்லத்தான் போகிறேன்" என்று உருக்கமாகக் கூறினுள் இதிலுள்ள ஆச்சரியம் என்னவென்றுல். அவளுக்கு இவ்விதம் தெளிவாக முன்பெல்லாம் பேசக்கூடத் தெரியாது.

"என்னடி அலமேலு, உடம்பு தேவலையா?' என்று கேட்டுக்கொண்டே அம்மாவும் வந்து உட்கார்ந்தாள் உலாவிக்கொண்டிருந்த என் தம்பி மஹாதேவனும் அவள் பெரிய பீடிகையுடன் ஏதோ விஷயத்தை ஆரம்பித்ததால். அவளுடன் கேட்க ஈஸி சேரில் உட்கார்ந்தான்.

அலமேலு சொன்னுள்:—ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு வந்த ஒரு வாரம் வரையில் எனக்கு முன்பு வந்த பகல் கனவுகள் வராமல் நிம்மதியாக இருந்தது அதற்குப்பிறகு ஒருநாள் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்தேன். முன்பு வந்த தூக்கமா? விழிப்பா என்ற இரண்டுங்கெட்டான் நிலை வந்துவிட்டது வீட்டைப்பற்றியோ என்னைப்பற்றியோ மறந்துவிட்டது. சில மாதங்களுக்குமுன் அப்பாவிற்கு வேதாந்தங்களைப்பற்றி போதித்தாரே ஒரு பெரியவர், அவர் வந்து என்னைப் பெயர் சொல்லி அழைத்ததுபோல் இருந்தது என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது நடுவில் 'அந்த சுவாமி இப்பொழுது எங்கிருக்கிருர்?' என்று அம்மா கேட்டாள்,

"அவர் எங்களிடம் 'வடக்கே பதரி காசிரமம் போய் வருகிறேன்' என்று புறப்பட்டுப் போனதுதான் தெரியும். பிறகு அவரைப்பற்றின தகவலே எங்களுக்குத் தெரியாது' என்று அலமேலு சொன்னுள்.

'அந்தப் பெரியவர் காவி உடை உடுத்திய சந்நியாசி அல்ல அவர் வேதாந்தங்களில் விற்பன்னர் முகத்தில் அறிவுச் சுடர் விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் அவருக்குத் தெரியாத 'சத்' விஷயமே கிடையாதாம் அப்பொழுது இந்த ஊரில் அனேகர் தங்களுக்கு உள்ள பெரிய விஷயங்களைப்பற்றிய சந்தேகங்களையெல்லாம் அவரிடம்தான் தீர்த்துக்கொள்வார்கள். அவர் தினமும் சிறிது மோரும் ஊறவைத்த கடலையும்தான் சாப்பிடுவாரென்று கேள்வி. அவர் எவ்வளவோ விஷயங்களில் தேர்ச்சிபெற்றவராயிருந்தாலும் ஜனங்களால் அருமையாக அவருக்குச் சூட்டப்பட்ட பெயர் 'கடலை ஸ்வாமி'. அலமேலு, சுவாமி பெயரைச்



சொன்னதும், அம்மாகூட ஊக்கத்துடன் கேட்க ஆரம்பித்தாள்

அலமேலு மேலும் சொன்னாள்:— சுவாமி என்னை இதற்குமுன் கேட்டும் கண்டுமிராத ஊருக்கு அழைத்துச் செல்வதுபோல் இருந்தது பெரிய மாடிவீடு தென்பட்டது. ஒன்று மாத்திரம் நிச்சயம். அது நம்முடைய தேசமும் அல்ல. என் உள் நினைவில் நான்தான் என்று எனக்கு நன்ருகத் தெரிந்தது; அப்பொழுது என்னுடைய உடையும் உருவமும் வேறு விதமாக இருந்தது ஸ்வாமி சொன்னர் 'இது உன் முன் பிறவியின் வீடு அதோ விளையாடுகிருர்களே அவர்கள் உன் குழந்தைகள். கட்டிலில் படுத்திருப்பவர்தான் உன் கணவர், என்று ஒருவரைச் சுட்டிக் காண்பித்தார் இதில் எனக்கு என்ன ஆச்சரியமென்ருல் கட்டிலில் படுத்திருக்கும் இளைஞர்தான் இப்பொழுது வயோதிகராயிருக்கும் டாக்டர் சுந்தரேச அய்யர். என்று சொல்லிவிட்டு, திடீரென்று அலமேலு எழுந்திருந்து நாளைக்கு வந்து மேலே சொல்லுகிறேன் என்று எங்கள் பதிலையே எதிர்பாராமல் போய்விட்டாள். இவள் டாக்டர் பெயரை எடுத்தவுடன் எங்களுக்கு ஒரே திகைப்பாகவிருந்தது

'இதைப்பற்றி அவசியம் நாளைக்குக் கேட்கத்தான் வேண்டும்' என்று உற்சாகத்துடன் கூறிக்கொண்டே மஹாதேவனும் எழுந்திருந்தான்.

மறுநாள் அதே வேளை அலமேலுவும் வந்தாள். நாங்களும் அவள் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். அலமேலு இந்த விஷயத்தை ஒரு வாரம் தொடர்ந்து சொன்னாள். பாதி சொல்லிக்கொண்டிருக்கும்போது திடீரென்று எழுந்து போய்விடுவாள் அவள் சொன்ன முழு விவரமும் இதுதான்:—

தினமும் இந்த மாதிரி நிலைமை எனக்கு வந்துவிடும். இந்த நிலைமை வரக்கூடாதென்று இரவெல்லாம் விழித்திருந்தாலும் அதே சம்பவங்கள் தொடர்ந்து திரைப் படம்போல் காட்சியளிக்கும் ஸ்வாமிதான் தினமும் அழைத்துப்போவதுபோலிருக்கும். அந்த வீட்டிலிருக்கும் இரண்டு ஆண் குழந்தைகளும் என் குழந்தைகளாம். பெரியவன் பள்ளிக்கூடத்தில் உயர் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான்போல் பட்டது சிறியவன் வெகு பிடிவாதக்காரன் போல் பட்டது அந்த வீட்டில் ஒரு வேலைக்காரனும் வேலைக்காரியும் இருந்தார்கள். சிறியவனை அடக்க அந்த வேலைக்காரனால்தான் முடியும் வேலைக்காரி எளியவளாகத் தோன்றவில்லை. அவளுடைய சிங்காரக் கொண்டையும் விதவிதமான வர்ணப் பூக்கள் போட்ட ஆடையும் அவளுக்கு மிகவும் கவர்ச்சியை யளித்தன அவள் என்னை சிறிதும் சட்டைசெய்வதில்லை என் கணவரை வீட்டிலேயே அதிகமாக காணமுடியாது அப்படித் தங்கியிருக்கும்பொழுது எனக்கும் அவருக்கும் எப்பொழுதும் மனஸ்தாபம். குழந்தைகளுக்கு உடுப்புப் போடுவதற்கு முதற்கொண்டு வீட்டில் தகராறு தோன்றும் வீட்டு வேலைக்காரிக்கும் என் கணவருக்கும் தகாத நட்பு இருந்தது என்பது எனக்கு நன்ருகப்பட்டது அடிக்கடி என் கணவர் தகராறு வரும்பொழுதெல்லாம் உன் வீட்டிற்குப்போய்த்தொலை' என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளுவார். அப்பொழுதெல்லாம் நான் கடல் கடந்து இருக்கும் என் விதவைச் சகோதரியையும் வயோதிகத் தந்தையையும் நினைத்து அழுவேன். என்னுடைய வாழ்க்கையே மிகவும் பயங்கரமான பாதையில் சென்றுகொண்டிருந்தது. வீட்டில் கடன் உபத்திரவம் வேறு. ஆடம்பரச் செலவுகள் உள்ள என் கணவரால் சிக்கனமாகச் செலவு செய்ய இயலாததால் குடும்பம் பணக் கஷ்டத்தில் தத்தளித்துக்கொண்டிருந்தது என் மனதிற்குச் சிறிதேனும் சாந்தியளிக்கக்கூடிய இடம் அங்கு ஒன்றுதான் இருந்தது.

அது ஒரு கோவில்தான் அதில் சந்தேகமில்லை ஆனல் அதனமைப்பு, வழிபாடு எல்லாம் வேறுவிதமாக இருக்கும். கோயிலில் அடிக்கும் மணியின் நாதம் காற்ருேடு கலந்து வந்து என் செவியில் புகுந்து, என் நொந்த மனதிற்கு நம்பிக்கையை ஊட்டும். ஆலய வழிபாட்டிற்கு வரும் ஜனங்களின் சிங்கார உடைகளும் கையிலுள்ள வர்ணப் பூக்குடைகளும் என் மனத்திற்கு ரம்மியமாக இருக்கும். குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு ஜன்னலருகில் உட்கார்ந்து மணிக் கணக்காக இக்காட்சியைக் கண்டு களிப்பேன் எப்பொழுதாயினும் சில சமயங்களில் யானைகள் கட்டிய வண்டிகள் தெருவில் போகும். வேலைக்காரனையும் வேலைக்காரியையும் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை.

ஒரு நாள் வீட்டில் எவருமில்லாத சமயத்தில் வேலைக்காரன் தகாதவிதமாக என்னிடம் நடந்துகொண்டான். சமயத்தில் எனக்குத் தெரிந்தவர்கள் யாரோ வந்ததால் தப்பினேன் இதை என் கணவரிடம் சொன்னபோது தவறு உன்மேல்தான் இருக்கும் என்று என்னையே கண்டித்தார் என் வீட்டருகில் நம் பக்கத்து ஜனங்கள் சிலர் எனக்கு சிநேகிதமாக இருந்தனர். அதில் ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் என்னிடம் மிகப் பிரியமாக இருப்பார்கள் என் கண்வரிடமும் வினயமாக இருப்பார்கள்

அப்பொழுது நான் பூரணகர்ப்பிணி. பிரசவத்தின் நாளும் நெருங்கிக்கொண்டிருந்தது வெகு தூரத்திலுள்ள சகோதரியால் உதவிக்கு வர முடியவில்லை பக்காத்துக் குடும்பத்தினர்தான் ஏதேனும் உதவி செய்ய முடிந்தால் செய்யவேண்டும் வைத்தியரான என் கணவர் மருத்துவத்திற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்து வைத்திருந்தார். ஒரு நாள் நான் குடிக்க வைத்திருந்த பாலில் பாஷாணம் கலந்திருந்ததுபோல் நீலமாக இருந்தது இந்த விஷயம் வேலைக்காரியால்தான் நடந்திருக்க வேண்டும் என்று ஊகித்து அறிந்தேன். அது முதற்கொண்டு அவளைக் கண்டாலே குலை நடுக்கம்தான். நான் இறப்பதில் இவளுக்கு என்ன லாபம்?

புரட்டாசி மாதம். நவராத்திரி சமயம் அது என் கணவரும் குழந்தைகளும் நண்பர்களைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தனர். அன்று காலையிலிருந்தே மப்பும்மந்தாரமுமாக இருந்தது. மாலையில் நல்ல

மழை பிடித்துக்கொண்டுவிட்டது காற்றும் மழையும் சூருவளியாக அடித்தது வேலைக்காரன் விடுமுறையில் இருந்தான் வேலைக்காரி சற்று முன்தான் ஏதோ அலுவலின் நிமித்தம் வெளியே போனாள். நாங்கள் குடியிருந்த இடம் அவ்வளவு கலகலப்புப் போதாது எனக்குப்பிரசவ வேதனை எடுத்துவிட்டது வெளியே சென்றவர்கள் யாரும் வரவில்லை இரவு மணி ஒன்பது ஆய்விட்டது கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே போன சற்று நேரத்திற்கெல்லாம் எனக்குக் குழந்தை பிறந்துவிட்டது அந்த சமயத்தில் நான் அடைந்த பீதியைச் சொல்லத்தரமல்ல நான் செயலற்றுப் படுத்துக்கொண்டிருந்தேன் குழந்தை 'குவா. 'குவா' என்று என் பக்கத்தில் வீறிட்டுக்கொண்டிருந்தது

அந்த சமயத்தில் வெளியே சென்றிருந்த எல்லோரும் வந்து கதவு உடையுமளவிற்கு இடித்தனர் கடந்த சில தினங்களாகவே மனதும் உடலும் சரியில்லாத எனக்கு, இந்த நிலைமை ஒரு அதிர்ச்சியைத் தந்துவிட்டது கடைசியில் எப்படியோ கதவை உடைத்துக்கொண்டு வேலைக்காரியும், குழந்தைகளும், கணவரும் அறையில் நுழைந்தனர். மழைச் சாரல் பட்டு அவர்கள் நனைந்திருந்தார்கள் வெளியே இன்னும் மழை நின்றபாடில்லை இடியும் மின்னலும் வானைப் பிளந்தன.

என் நிலைமையைக் கண்டவுடன் என் கணவர் மனம் எவ்வாறு மாறியது என்பது எனக்குத் தெரியாது என்னைப் பெயர் சொல்லி அழைத்து ஏதோ மருந்தை வாயில் ஊற்றினார் எனக்கு அந்திய காலம் என்பதை அவர் அறிந்துகொண்டார் என்பதை நான் புரிந்துகொண்டேன் ஆனல், எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்ருத நிலையில் சங்கடப்பட்டேன் என் கணவர் கண்களில் நீர் பெருக, 'உனக்கு ஏதேனும் சொல்ல வேண்டுமென்ருல் சொல்லேன்' என்று திடீரெனக் கேட்டார்.

பிறந்த குழந்தையை அணைத்துக்கொண்டு பெரிய குழந்தைகளையும் அச்சிறுசிசுவையும் பார்த்துக்கொள்ளுமாறு கடைசியாக வேண்டிக்கொண்டேன்

என் உயிர்ப் பறவை உடலாகிய கூட்டிலிருந்து விடுபட்டுவிட்டது என் சடலத்தையும் அங்கு நிகழும் நிகழ்ச்சிகளையும் சுதந்திரமாகத் தனித்து நின்று பார்த்தேன் பிறந்த குழந்தை இரவு முழுவதும் அழுதுகொண்டிருந்தது அதை வேலைக்காரி வைத்துக்கொண்டிருந்தாள் இவ்வளவு காலம் சண்டை போட்டுக்கொண்டிருந்த என் கணவரும் மனம் உருக அழுதார். சிறியவன் எதற்காக அழுகிருேம் என்று தெரியாமலேயே அழுது விட்டு சிறிதுநேரம் கழித்துத் தூங்கிவிட்டான். பெரியவனுக்கு அப்பொழுது நன்ருக வயது வந்திருந்ததால், வீட்டின் நிலைமையை அறிந்துகொண்டு உள்ளம் உருகக் கதறி அழுதான் நான் உயிரோடு இருக்கும்வரையில் இந்த உயிர் எதற்காக இருக்கிறது என்று என்னையே பல சமயங்களில் நொந்துகொண்டிருந்தபோதிலும், நான் வேண்டியபடியே என் உயிர் விடுதலை பெற்றுவிட்டபொழுது என்னுடைய குழந்தைகளை விட்டுவிட்டு ஏன் பிரிந்தோம் என்று உருவமில்லாத என் ஆத்மா தவித்து அழுதது. அந்த வீட்டை விட்டு வெளியே செல்லவே விரும்பாத என் ஆத்மா, அந்த வீட்டைச் சுற்றியே அலைந்துகொண்டிருந்தது.

மறுநாள் காலையில் மழை விட்டுவிட்டது பக்கத்துக் குடும்பத்தினர் வந்து என் கணவருக்கு ஆறுதல் கூறினர் வாசலில் வண்டி ஒன்று வந்து நின்றது என் சடலத்தைத் தூக்கி வேலைக்காரன் அந்த வண்டியில் போட்டான் எந்த விதமான சவச் சடங்குகளும் நடைபெறவேயில்லை. பக்கத்து வீட்டுக்காரரும் வேலைக்காரனும் வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டார்கள் என் கணவர் குழந்தைகளோடு வீட்டில் தங்கிவிட்டார் இதில் என்ன பரிதாபமென்ருல், என் சடலத்தையேனும் கௌரவிப்பதற்கு என் கணவருக்கு மனம் வரவில்லையோ என்னவோ!

என் சடலத்திற்கு தீ வைத்துவிட்டு வந்தவர்கள் போய்விட்டார்கள் என்னுடைய சதைப்பற்று அழிந்து எலும்புக் கூடாகிவிட்டது ஸ்வாமி என் பெயரைச் சொல்லி அழைத்தார் அந்த சமயத்தில், 'அம்மா பார்த்தாயா உன் முன் ஜன்மத்தின் வாழ்வின் முடிவை! என்று சொல்லி மறைந்துவிட்டார் பிறகு என்னுடைய ஆத்மா மேலேமேலே பறந்துபோய், அங்கேயும் இங்கேயும் தத்தளித்துக்கொண்டு இருந்தது; சில நாட்களுக்குப் பிறகு வக்கீல் சிவஸ்வாமி அய்யரின் பூஜை அறைக்குப் பக்கத்தில் ஒண்டிக்கொண்டது பிறகு என் அம்மாவின் வயிற்றில் நான் ஜனித்தேன் இத்துடன் என்னுடைய பயங்கரக் கனவுகளின் அத்தியாயமும் முடிந்துவிட்டது' என்று கூறி முடித்தாள்.

அவள் அக்கதையைச் சொல்லி முடிக்கும் வரையில் நடுவில் நடுவில் பல வடமொழி ஸ்லோகங்களையும் வேதாந்தத் தத்துவங்களையும் கலந்து வெகு கம்பீரமான நடையில் பேசினது எங்களுக்கு அடங்காத ஆச்சரியத்தைத் தந்தது அலமேலுவிற்கு இதற்கு முன் வடமொழி சிறிதும் தெரியாது. அப்பாகூட இந்த விஷயங்களை வெகு ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்தார்

ஒரு நாள் அலமேலு எங்களைக் கேட்டாள்:— 'நான் எப்படி இவ்வளவு முன் ஜன்மத்து விஷயங்களையும் தெரிந்துகொண்டு உயிர்வாழ்வேன்? இது விஷயங்களைக் கேட்ட என் தாயாரும் என்னுடன் சேர்ந்து வருத்தபபடுகிறாள் என் அப்பாவோ 'என்னடி, பித்துப்பிடித்து அலைகிறாயா? இனிமேல் இந்தமாதிரி 'சொப்பனம்'' "கிப்பனம்' என்று பேசிக்கொண்டிருந்தாயானால் கீழ்ப்பாக்கம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் உன்னைத்தள்ளிவிடுவேன் என்று கோபித்துக்கொள்கிறார் எனக்கென்னமோ மாமி அவ்வளவும் உண்மை என்று நன்றாகப் படுகிறது. முன் ஜன்மத்துக் குழந்தைகளைப் பார்ப்பதற்கு என் மனம் தவிக்கிறது என் பிள்ளைகள் என்று நான் இப்பொழுது சொல்லிக் கொள்பவர்கள் 'தாத்தா'வாகக்கூட ஆகியிருப்பார்கள் ஏன்? இந்த விஷயங்களை டாக்டரிடமே கேட்டால் என்ன என்று ஒவ்வொரு சமயம் மனம் துடிக்கிறது தவிர, இப்பொழுது என் அகத்துக்காரரிடம் போகக்கூட எனக்கு விருப்பமேயில்லை, ஒரு பெண்ணிற்கு இரண்டு கணவனிடமும் எப்படி பாசம் இருக்கும் மாமி?'' என்று சொல்லி அழுதாள்.

'போடி அசடே, இப்படி எத்தனையோ ப்பருக்கு இந்தமாதிரி கனவுகள் வந்திருக்கும் வெளியிலே சொல்லாமல் மனதிற்குள்ளேயே வைத்துக்கொண்டிருந்திருப்பார்கள் நீ ரொம்பவும் அரண்டுபோய்விட்டாய் இப்பொழுது போய் நீ டாக்டரிடம் இந்த விஷயங்களைச் சொன்னால், அவர் நம்பவே மாட்டார் உனக்கு ஏதோ சித்தப்பிரமையோ அல்லது மூளைக் கலக்கமோ என்று சொல்லிவிடுவார், எதற்கும் டாக்டருடைய வரலாறு பூராவும் அறிந்துகொண்டுதான் செய்ய வேண்டும். யாரிடமும் இவ் விஷயங்களைச் சொல்லாதே பரிகாசம் செய்து, உனக்குப் பைத்தியக்காரப் பட்டத்தைச் சூட்டுவார்கள் என்று நாங்கள் சொல்லி, அவளை சமாதானப் படுத்தி அனுப்பிவிட்டோம்

அலமேலுவின் கதையை எங்கள் குடும்பத்தினர் யாவரும் நர்பினோம் வெகு வியப்புடனும் ஆவத்துடனும் தினமும் கேட்டோம் அப்பா டாக்டரைப்பற்றி விசாரித்ததில் டாக்டர் இளம் வயதில் சிங்கப்பூரில் வைத்தியசாலை வைத்து நடத்தினாரென்றும், இவ்வூருக்கு வரும்பொழுது இரண்டு ஆண்குழந்தைகளுடனும் ஒரு சிங்கள வேலைக்காரியுடனும் வந்து தொழில் நடத்தி, அமோகமாகச் சம்பாதித்துப் பேரும் புகழும் அடைந்தாரென்றும் அவருக்கு மனைவி இறந்துவிட்டாளென்றும் பிறகு ம்மணமே செய்து கொள்ளவில்லையென்றும் தெரிந்து கொண்டோம். ஒருவேளை இவ்வூருக்கு வருவதற்கு முன்பே சிறு குழந்தை இறந்திருக்கலாம் அவர் மனைவியை எப்படி நடத்தினாரென்பது எங்களுக்குத் தெரியாது இப்பொழுது அவர் தம் புதல்வர்களுக்காகவே தான் உயிர் வைத்திருக்கிறார் போலத் தெரிகிறது பையன்கள் இருவரையும் வெகு உயர் நிலைக்குக் கொண்டுவர ஏராளமான பணம் செலவழித்திருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்.

யுத்தகாரணமாகச் சில நாட்களுக்குப் பிறகு சிங்கப்பூரிலிருந்து பல குடும்பங்கள் வந்தன அக் குடும்பங்களில்எங்களுக்கு அறிமுகமான ஒருவரிடம் டாக்டரைப்பற்றி விசாரித்ததில், அலமேலு கனவாகச் சொன்னதில் முக்காலும் உண்மையாக இருந்தது இதில் உண்மை இருக்கும் பொழுது எவ்வாறு நம்பாமலிருக்க முடியும்?

என் கணவருக்கு வட இந்தியாவில் வேலை மாற்றலாகிவிட்டபடியால், நானும் ஊரைவிட்டுப் போய்விட்டேன் அடிக்கடி ஊருக்கு வர முடியவில்லை. அலமேலு என்ன ஆனாள் என்பதும் எனக்கு தெரியாது மூன்று வருடங்களுக்குப் பிறகு தம்பியின் கல்யாணத்திற்காக ஊருக்குவந்தேன்

அலமேலுவைப்பற்றி அம்மாவை விசாரித்தேன் அம்மா சொன்னாள்:— "அலமேலுவை பழைய அலமேலு என்று எண்ணிவிடாதே. அவ்வளவு சாமர்த்தியமும் சமர்த்தும் எங்கிருந்து தான் அவளுக்கு வந்ததோ! எனக்கு ரொம்பவும் அவள் மாறினது ஆச்சரியமாக இருக்கிறது, நான்கு மாதத்திற்கு முன் அவள் கணவன் வீட்டிலிருந்து வந்திருந்தபோது. நான் அலமேலுவைக் கேட்டேன் 'முன்பு இருந்த பயமெல்லாம் தெளிந்து இப்போது நன்றாக இருக்கிறாயா?'' என்று கேட்டேன் அலவேலு சொன்னாள்: "அதெல்லாம் என்ன மாமி பைத்தியக்காரத்தனம். நினைத்தால் எனக்கே சிரிப்புவருகிறது' என்றுகூறி மழுப்பிவிட்டாள் நம்மிடம் அவள் அப்போது எவ்வளவு உருக்கமாக சொன்னாள்? என்றாள் அம்மா.

சில தினங்களுக்கு முன்புதான் என் தம்பி மஹாதேவன் மனோதத்துவ ஆராய்ச்சி விஷயமாய் அமெரிக்காவில் படித்து பட்டம் பெற்று திரும்பி வந்திருந்தான் அவனிடம் அலமேலுவின் கனவுகளைப் பற்றியும் இப்பொழுது அவள் நிலைமையைப்பற்றியும் நான் கேட்டபொழுது அவன்'',

'அலமேலு சொல்வது அவ்வளவும் பொய்யல்ல அக்கா! அவள் அந்த மாதிரி கனவுகள்தான் கண்டிருக்கிறாள் அவளுடைய அறியாப் பருவத்தில் இதுமாதிரி விஷயங்களைப் பற்றி யாரோ அவள் வீட்டாரிடம் பேசிக்கொண்டிருக்கையில், இந்தச் சிறு குழந்தை அவ்விஷயங்களை வெகு கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்திருக்கவேண்டும் அதனுடைய சிறு மூளையில் அவ்விஷயங்கள் ஒரு நிரந்தரமான இடத்தைப் பெற்றுவிட்டன. அந்தக் குழந்தை அறியாமலேயே அவ்விஷயங்கள் அதன் மனதில் வேலை செய்து ஓய்ந்துவிட்டன அதனுடைய பகுத்தறிவு பெருகி பூரண வயதில் ஸ்வாமியிடம் கேட்ட வேதாந்த விஷயங்களில் சில பகுதிகளும் இவ்விஷயங்களும் அவளையறியாமலேயே அழகாகக் கோக்கப்பட்டு கனவாகவெளிப்பட்டுவிட்டன. அதன் உண்மை இவ்விதந்தான் இருக்கவேண்டும்'' என்று அனுமானித்து முடிவு கூறினான்.



கைவாசியா-கால்வாசியா?

★

சில நாட்களுக்கு முன் மங்களூருக்குப் போய் வந்தேன் புறப்பட வேண்டிய தினத்தன்று காலையில்— அன்றைய சாயங்காலமே புறப்பட்டாக வேண்டுமென்ற தடுக்கமுடியாத சந்தர்ப்பமேற்பட்டது ஈசவரா! என்று விதியை நொந்து கொண்டு ரெயில்வேஸ்டேஷனுக்குப் போய் டிக்கட் வாங்கி இடத்தையும் ரிஸர்வ் பண்ண முடிந்த அதிர்ஷ்டத்தை விவரிப்பது ஒரு பாரதமாகும் பிறகு சாயங்காலம் ஸ்டேஷனுக்குப் போய் என் பெயர் எழுதியுள்ள அட்டை எந்த வண்டியில் தொங்குகிறதோ என்று தேடித் திரிந்து கொண்டிருந்தபோது அந்த ஈச்வரனே ஒரு ஏகாம்பரனாய் [மேலே துணியில்லாமல் அரைத் துணியோடு மட்டும்] ஒரு கூலி ரூபத்தில் எனக்குப் பிரத்யக்ஷமாகி ஒரு அப்பர் பர்த் இருக்குதுங்க' என்று சொல்லி கஞ்ஜிவரதப்பா என்ற சொல்லைக் கேட்டவன் கதையாக பின்னாலேயே ஓடிய என்னை ஒரு வண்டியிலேற்றி அந்த 'அப்பரை' ரிஸர்வ் செய்த முறையில் அதன்மேல் அவன் விரித்திருந்த தனது துண்டை எடுத்துக்கொண்டு அந்த 'அப்பரை' என் வசமாக்கிய பாக்கியத்தையும், அதை யொட்டி நிகழ்ந்த கைம்மாறுதலையும் விவரிக்கப் புகுந்தால் ஒரு ராமாயணமாகும்.

நல்ல காலமோ கெட்ட காலமோ, அதே வண்டியில் விடுமுறைக்காக-தம்மூர்களுக்குச் செல்லும் வித்யார்த்திகளில் சிலர் எப்படியோ என்னைக் கண்டு பிடித்துவிட்டு வண்டி நிற்குமிடங்களிலெல்லாம் வந்து நான் தூங்குகிறேனா, விழித்திருக்கிறேனா, காலையில் காபி டல் துலக்கினேனா, காப்பி சாப்பிட்டேனா பகல் சாப்பாட்டிற்கென்ன ஏற்பாடு என்பன போன்றவற்றைக் கவனிக்கும் முறையில் இதுதானோ ஸ்வர்க்கம்! என்றுங்கூட எனக்குத் தோன்றும் படிச் செய்த வைபவத்தை என்னவென்றுதான் சொல்லுவது!

மங்களூரில் இறங்கிய உடனே என்னுடனே வழி நெடுக உபத்திரவஞ் செய்துவந்த மாணவர்களும் இறங்கினர். "இந்த ஹோட்டலில் போய் இறங்குங்கள் என்று ஒருவன் வேண்டாம் அந்த ஹோட்டலில் இறங்குங்களென்று மற்றொருவன் இப்படியாகத் தமது ஆலோசனைகளால் என்னையும் வண்டிக்காரனையுந் திணரவடித்தனர் கடைசியாக எந்த ஹோட்டலுக்குத்தான் போவது என்று கேட்ட வண்டிக்காரனிடம் உனக்கிஷ்டமான விடத்திற்குப் போவென்று சொல்லி, அப்போதைக்கு இம்மாணவர்களினின்றும் தப்பினதற்காகச் சந்தோஷித்து ஒரு பெருமூச்சுவிட்டேன் அளவுகடந்த ஆதரவினாலும், அன்பினாலும் உபசாரத்தினாலுங்கூட சில ஸமயம் நம்மைச்சிலர் கஷ்டத்திற்குள்ளாக்கி விடுகின்றனர் இந்த கஷ்டத்தின் உண்மையை நான் இந்தத்தடவை அனுபவித்தேன் என்பதல்ல அனேகதரமனுபவித்துள்ளேன் ஆயினும் இந்ததரம் அதை எப்பொழுதையும் விட அதிகமாக வனுபவித்தேன்.

'டைரக்டர் எனக்குக் கொடுக்கிறேன்னு சொன்ன நாரதர் பார்ட்டை ராமுடுக்கு கொடுத்துட்டாருடா. என்னைவிட அவன் எந்த விதத்தில் ஓசத்தி?''

"அந்தப்பய உன்னைப் பத்தி ஏதாவது சாமர்த்தியமா கலகம் பண்ணியிருப்பான்!''

ஆஹா! ஒரு உபாத்தியாயருக்குத்தான் என்ன பெருமை என்று எண்ணி பொறுமைப்படாமல் என்னால் இருக்க முடியவில்லை மங்களூரிலும் எனக்கு அனேக நண்பர்கள் இருக்கின்றனர். ஒரு நொடிப் பொழுதில் மேற்சொன்ன நண்பர்கள் நான் விஜயஞ்செய்துள்ள விசேஷத்தை மங்களூரிலுள்ள அத்தனை நண்பர்களுக்குந் தெரிவித்துவிட்டனர் எவ்விதமாகத்தான் விளம்பரப்படுத்தினரோ மறுநாட்காலை விழித்தெழும் முன்பே எனது நண்பர்கள் வந்து நான் தங்கி இருந்த ஹோட்டலில் கூடிவிட்டனர். ஒவ்வொருவருந் தத்தம் வீட்டிற்கு வரவேண்டுமென்றழைத்தனர் இஷ்டம்போல் உபயோகித்துக்கொள்ளும்படி இரண்டு, மூன்று நண்பர்கள் தமது மோட்டார்கார்களை அனுப்பி இருந்தனர் எனக்கோ அன்றைய ஒருபொழுதுதான் அங்கு தங்கி இருக்க ஏற்பாடு மறுநாள் காலையில் திரும்பிப் பிரயாணம் ஒவ்வொருபிண்பரும் அவரவருடைய ஸௌகர்யங்கள், வீடு, ஆஸ்தி மக்கள் மற்றுமுள்ள ஸௌகர்யங்களை எல்லாங் காண்பித்து 'எல்லா நிம்ம ஆசிர்வாததிந்த எல்லாம் உங்கள் ஆசீர்வாதத்தால் என்று நிறைந்த மனதுடன் உண்மைதளும்பி—கண்களில் பாஷ்பஸஹிதமாகச் சொல்லியபோது—பூரித்த மனத்தினனாய் ஈச்வரா! இவ்வளவு புகழ்ச்சிக்கும் கீர்த்திக்கும். மக்களின் ஆதரவிற்கும் என்னை யுயர்த்தினையா! இக்கடனை எப்படித்தீர்ப்பேன் என்றெண்ணியபோது—இதே உணர்ச்சியில்தான் ஸ்ரீத்யாகப்ரஹ்மமும் "தாசரதே!" என்ற கீர்த்தனத்தைப்பாடி இருக்க வேண்டுமென்று தோன்றிற்று அதிலும் அநுபல்லவியின் பொருளைச் சிந்தித்தபோது எனக்காகவேதான் பாடப்பட்ட கீர்த்தனமோவென்றுகூடத் தோன்றிவிட்டது.

அன்று சாயங்காலம் ஒரு நண்பரின் வைத்தியசாலைக்குப் போயிருந்தேன். அங்கு அநேகர் வைத்தியத்திற்காகவந்து காத்திருந்தனர். நண்பரும் ஒவ்வொருவரையாய்க் கவனித்து அவரவருக்கும் தாமே சுலபமாகச் செய்துகொள்ளக்கூடிய சிகிச்சைகளைத் தெரிவித்துக் கொண்டே வந்தார். யாரோ ஒரு சிலருக்குத்தான் ஏதோ மருந்து மடித்துக் கொடுத்தார். அடராமா! இந்த மனுஷ்யன் இப்படி வைத்தியத்திற்கு வருபவருக்கெல்லாம் அவரவரே செய்துகொள்ளும்படி ஒரு சிறிய கஷாயத்தையோ சூரணத்தையோ சொல்லிக் கொடுத்தனுப்பிஞரானல் இவருக்கு என்ன வருமானம் வருமென்று எண்ணி ஆச்சரியப்பட்டுக்கொண்டே இருந்தேன் அப்போது ஒரு பிரமிக்கத்தக்க சம்பவம் நிகழ்ந்தது

ஒருவருக்கு ஒற்றைத் தலைவலி வலதுபக்கம் நெற்றி—சங்கப்ர தேசத்தில் சிறு வீக்கமும் நரம்புகள் புடைத்துக்கொண்டும் கண் இடுங்கியும் சற்று சிவந்துமிருந்தது நான்கு நாட்களாக இரவு பகல் நிற்காத தலைவலி நோயாளி தலைவலிக்காக வரிந்து வரிந்து கட்டிய முண்டாசுடன் அந்தப் பக்கத்தை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்துக்கொண்டும்—'உம்-உம்' என்று முனகிக்கொண்டும் அதற்கு அபினயம் பிடித்தாற்போல் தலையை ஒரு புறமும் மறு புறமுமாக ஆட்டித் திருப்பிக் கொண்டுமிருந்தார். அவருடைய அவஸ்தையைப் பற்றி கூட வந்த ஒருவர் சொல்லிக்கொண்டே இருந்தார். நண்பர் (வைத்தியர்) உம்-உம் என்று கேட்டுக்கொண்டே நோயாளியின் அருகே சென்றார். உடனே 'ஹ! என்று அலறிக்கொண்டு நோயாளி (இதுவரையில் உட்கார்ந்துகொண்டிருந்தவர்) துள்ளி எழுந்து துடித்தார். பாவம் டாக்டர் அந்த நோயாளியின் காலை மிதித்துவிட்டார் நோயாளியின் முகத்தையே பார்த்துக்கொண்டு அவரை நெருங்கிச் சென்றுகொண்டிருந்தவர் அவர் காலை மிதித்துவிட்டது வருந்தத்தக்கதுதான். நல்லகாலம் டாக்டர் காலில் பூட்ஸோ செருப்போ இருக்கவில்லை. இது ஸந்தோஷப்பட வேண்டியதுதான் ஆனால் அலறிக்கொண்டு துள்ளி எழுந்த நோயாளியை டாக்டர் தன்னிரு கைகளாலும் பிடித்துக்கொண்டு ஆசுவாசப்படுத்தி உட்கார வைத்தாரேயன்றி காலை மிதித்தவர் தன் மிதியை அகற்றவேயில்லை.

இதென்னடா இது அகஸ்மாத்தாக் காலை மிதித்திருக்கலாம் மிதிதாளாமல் அலறிக்கொண்டு துள்ளி எழுந்தவருக்குத் தன் வருத்தத்தைத் தெரியாமலும் மிதித்துக் கொண்டிருந்த தன் காலையகற்றுமலும் நோயாளியை ஆசுவாசப்படுத்தி உட்காரவைக்கிறரே என்று எனக்கு ஆச்சரியமும் அனுதாபமுமேற்பட்டது.

நோயாளி உட்கார்ந்தவுடன் டாக்டர் சற்று விலகிநின்று—இருகைகளையுந் தன் இடுப்பில் குத்திட்டுக் கொண்டு ஒரு புன் சிரிப்புடன் இப்போது எப்படி தலைவலி' என்ருர்.

ஒரு கையால் மிதிபட்ட காலைத் தடவிக்கொண்டிருந்த நோயாளி நிமிர்ந்து உட்கார்ந்து இப்படியும் அப்படியுந்திரும்பிப்பார்த்தார். அந்த ஒரு க்ஷண நேரம் அவருக்குத் தன் தலைவலியைப்பற்றிய நினைவே இல்லை போலிருந்தது டாக்டர் கேட்ட பிறகுதான் அவருக்குத் தன் நிலையேதெரிய வந்ததுபோல் மிரள மிரளச்சுற்றுமுற்றும் பார்த்தார். பிறகு அவரும் ஒரு புன்சிரிப்புடன் 'இப்போது—இப்போது—''என்று சொல்லிக் கொண்டே தலைகட்டுகளைத் தானே அவிழ்த்துவிட்டெறிந்தார் மற்றும் காலை மிதித்துவிட்டபோது ஏற்பட்ட வேதனையால் கூவிவிட்டாரல்லவா. கண்ணில் பெருகிய நீரைத் துடைத்துக்கொண்டும் மூக்கைச் சிந்திக் கொண்டேயும்....''இப்போ என்னமோ ஸார். ஒரு மின்னல் மாதிரி தோன்றிற்று டப்பென்றுதலைவலியும் நின்றுவிட்டதே! ஹி...ஹி...ஹீ...'' என்று கெஞ்சுங்குரலில் சொன்னர்.

டாக்டர் மற்றும் அவரை ஆசுவாசப்படுத்தி உட்காரச் சொல்லி கூடவந்த நண்பரை அனுப்பிக்கொஞ்சம்காபிவரவழைத்துக் கொடுப்பித்து நோயாளிக்கு மற்றும் உற்சாக மூட்டும் வகையில் என்னப்பா ஓரே கூச்சல் போட்டாயே என்று தானுங் குலுங்கக் குலுங்கச் சிரிக்கலானர்.

காலை நன்ருக அழுத்தி மிதித்துவிட்டீர்கள் ஸார். பாவம் பார்க்கவில்லைபோலிருக்கிறது. பரவாயில்லை. என்று நோயாளியும் ஒரு அசட்டுச் சிரிப்புடன் இதற்குள் வரவழிக்கப்பட்ட காபியையுங் குடித்தார்

டாக்டர்:—'பரவாயில்லையா? பரவாயிருக்கட்டுமப்பா. நான் பார்க்காமல் உன்காலை மிதித்துவிடவில்லை பார்த்துதான் மிதித்தேன், எந்தக் காலை மிதிக்கிறேன், எங்கு மிதிக்கிறேன், எப்படி மிதிக்கிறேன் எவ்வளவு அழுத்தி மிதிக்கிறேன் என்று இவ்வளவையும் பார்த்துத்தான் மிதித்தேன் ஒரு மின்னலுடன் உன் தலைவலி போயிற்று' என்று சொல்லி—என்னைப் பார்த்து. 'அடடா' நின்றுகொண்டே இருக்கிறீர்களே! உட்காருங்கள் என்று எனக்கு உபசாரஞ் சொல்லி அங்கிருந்த சிலருக்கு என்னை......என்று அறிமுகஞ் செய்து வைத்தார்.

எனக்கு இந்த நண்பரின் செயல் யாதென்றே புரியவில்லை ஒரு அசட்டுச் சிரிப்புடன் உட்கார்ந்தேன் பிறகு மற்றுமுள்ள நோயாளிகளையும் அவசர அவசரமாகக் கவனித்துவிட்டு நண்பர் வந்து என்னருகில் உட்கார்ந்தார் தலைவலிக்காரரும் 'ஒருவாறு காப்பி குடித்து ஆசுவாசமாகி ஒரு தூக்கம் போட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார் ஆவலுடன் தன்னை நோக்கிய அவரைப் பார்த்து டாக்டர் சொன்னர்.

உங்களுக்கு இனி ஒன்றும் வேண்டாம் தலைவலி வராது எப்படியானாலும் நாளைக் காலையில் கொஞ்சம் எண்ணெயில் 4—5 தும்பைப் பூவைப் போட்டுக் காய்ச்சி எடுத்து தலைக்குத் தேய்த்து ஸ்நானஞ் செய்யுங்கள் வேறொன்றும் வேண்டாம் இனி இந்தமாதிரி தலைவலி யாருக்காவது வந்தால் நீங்களே அவர் காலை மிதித்துத் தலைவலியை நிறுத்திவிடுங்கள். வலது பக்கம் தலைவலியானல் இடது காலையும், இடது பக்கந் தலைவலியானல் வலது காலையும் இருபுறமுமானல் இரண்டுகாலையுமே ஏககாலத்தில் மிதியுங்கள் காலின் கட்டைவிரலுக்கும் முதல் விரலுக்குமிடையில் உள்ள இடுக்கின் நேர்மேலே அரையங்குலத்தில் உமது கால் கட்டைவிரலை வைத்துப் பலம் முழுவதும்போட்டு ஒரே மிதியாக அழுத்துங்கள் விட்டுவிட்டு மிதிக்கவேண்டாம் என்று சொல்லி அவருக்குத் தான் மிதித்தவிடம் எதுவென்று காண்பிக்கச் சொல்லி அதேவிடத்தை மற்றை காலிலுந் தொட்டுக் காண்பிக்கச்சொல்லி, சரிதான் என்று ஒத்துக்கொண்டு பிறகு தன் காலை அது போல் ஒருதரம் மெதுவாக மிதித்துக் காண்பிக்கச் சொல்லி ஆமோதித்தார்.

ஸ்ரீ சக்தி ஜோஸியம்

ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ 2

குழந்தை ஜாதகம் சுருக்க பலனுடன் கணிக்க ரூ 2

ஜாதகம் ஒரு வருஷ பலன் மாதவாரியாக எழுத ரூ 6

விவாகப் பொருத்தங்கள் பார்க்க 2 ஜாதகங்களுக்கு ரூ 2

1 தசாவிற்குபுக்திவாரி-பலன்கள் எழுத ரூ 12

ஜாதகம் OR எழுதும் நேரம், பெயர், தொழில், சுமார் வயது அனுப்புக

N B. வெளிநாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜு. வி பி பி. தனி.

S. ராமச்சந்திரய்யர்,

ஸ்ரீ சக்தி ஜோஸியம், எரவாஞ்சேரி.

திருவிளையாட்டம் P-O.

South India.

நோயாளியும் தன் ஸந்தோஷத்தையும் ஆச்சரியத்தையுந் தெரிவித்துவிட்டு, அந்த தலை வலிக்கும் காலை மிதிப்பதற்கும் என்ன ஸம்பந்தமென்றும் தலைக்கும் காலுக்கும் ஏதாவது நரம்பு ஸம்பந்தமிருக்கிறதா? என்றுங் கேட்டார்.

அது நரம்போ நாடியோ அது ஒரு மர்மம் அதை மிதித்தால் அல்லது அவ்விடத்தில் நன்ருக அழுத்திஞல் தலைவலிபோகும். ஆனல் அவ்விடத்தில் அடிக்கடியும் அழுத்தி வேதனையையுண்டாக்கி ஒரு தழும்பேற்படும்படியாகவுஞ் செய்தால் ஆண்மை கெட்டுவிடும் அதனல் ஒருதரம் ஒரேயழுத்தாக பலங்கொண்ட மட்டும் அழுத்திஞல்...

நோயாளி குறுக்கிட்டுஒரு மின்னல் மின்னுவதுபோல் தோன்றுகிறது உடனே பளிச்சென்று உலகத்தில் வெளிச்சமே அதிகமாய் விட்டது போல் தோன்றுகிறது உடம்பெல்லாம் குபீலென்றுவியர்த்துவிடுகிறது முதலில் காலில் வலிதான் நமக்குத் தோனுகிறது பிறகு கவனித்தால் தான் அந்த என்னலோடு தலைவலி போய்விட்டதென்பது தெரிகிறது என்ருன்.

நான்:—அவ்விடத்தில் விட்டுவிட்டு அழுத்துதலால் விட்டு விட்டு வேதனையை யுண்டாக்குவதால் ஒரு தழும்பும் ஏற்படும்படிச் செய்வதால் ஆண்மை குறைந்துவிடுமென்றீர்களே அதற்காகத்தான் ஸந்நியாசிகள் பாதக்கொரடையுபயோகிக்கின்றனரோ? என்றேன்

டாக்டர்:—ஒருக்கால் அப்படியுமிருக்கலாமென்பதுதான் எனதபிப்பிராயம் ஆனல் பாதக் கொரடையுபயோகிப்பவருள் எத்தனை பேருக்கு இவ்வுண்மை தெரியுமோ எனக்குத் தெரியாது என்ருர்.

நான்:—சரி. நாளைக்காலையில் நான் திரும்பப் பிரயாணம் புறப்படுகிறேன். இங்கு உங்களைப் பார்த்ததற்கு ரொம்ப ஸந்தோஷம், புது விஷயங்களையுந் தெரிந்துகொண்டேன், ஏதோ வைத்தியனுக்கு நல்ல கைராசியிருக்கிறதென்று பலருஞ் சொல்லக் கேட்டிருக்கிறேன் ஆனல் கால்ராசியுள்ளவரை இன்று பார்த்தேன்! என்றேன்

டாக்டர்:—நாளைக்கே போகவேண்டுமா? அடடா சரி. 8 மணிக்குத்தானே வண்டி? நீங்கள் 7 மணி 7-30 மணிக்கு இங்கு வாருங்கள் வேறொரு நல்ல கேஸ் வைத்து வைக்கிறேன். நீங்கள் இப்போது வருவீர்கள் என்று தெரிந்திருந்தால் இப்போதே அவரை வரவழித்திருப்பேன். நாளை காலையில் நான் வரும்போதே அவரைக் கூட்டிக்கொண்டு வந்துவிடுகிறேன். நீங்கள் வந்தால் அதைப் பார்த்துவிட்டு, இங்கிருந்தே ரயிலுக்குப் போகலாம். என்ருர்.

நான்:—எப்படியய்யா முடியும்? காலையில் இவ்வளவும் 8-மணிக்குள் முடியுமா?

டாக்டர்:—ஏன் முடியாது? வண்டி 8-மணிக்கல்ல 8-30 மணிக்குத்தான் நீங்கள் எப்படி இருந்தாலும்—6, 6-30 மணிக்குள் எழுந்துவிடுகிறீர்கள் ஸ்நானம், காபி எல்லாம் 7 மணிக்குள் முடிந்துவிடும். 7-15-க்கு இங்குவந்துவிடலாமே 7—30-க்கு வந்தாலும் 7–45-க்கு வந்தாலும் என்ன மோசம் போய்விடும், வண்டி புறப்பட அரை மணி நேரம் முன்னதாகவே உங்களை ஸ்டேஷனிற் சேர்ப்பிப்பது என் பொறுப்பு நீங்கள் ஸ்டேஷனுக்குப் போகும் முன்பே பையனை யனுப்பி டிக்கட்டெல்லாம் வாங்கி உங்களுக்கு வசதியான இடத்தை எல்லாம்பிடித்து வைக்க ஏற்பாடு செய்கிறேன். போதுமா? என்ருர்.

நான்:—சரி. இப்படியுந்தான் யார் செய்யப் போகிருர்கள் நீங்கள் இவ்வளவு நிர்ப்பந்தமாய்க் கரும்பைத் தின்னச் சொல்கிறீர்கள். நான் அதற்குக் கூலி கேட்கலாமா? என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டேன்.

மறுநாட் காலையில் 7-மணிக்கே அவர் வைத்தியசாலையில் இருந்தேன். அவரும் என்னை 8-மணிக்கெல்லாம் ஸ்டேஷனில் சேர்ப்பித்தார் கலியாண காலமானதாலும் முகூர்த்த தேதி மறு நாளானதாலும் வண்டியில் சொல்ல முடியாத கும்பல். ஆனல் எனக்குத்தான் முன்னடியே பையன் போய் இடத்தைப் பிடித்து வைத்துக் கொண்டிருந்தானே மற்றும் எதிரில் வரவேண்டிய வண்டியொன்று நேரந் தவறி வர நேரிட்டதால் 8–30க்குப் புறப்படவேண்டிய வண்டி 8–45க்குத் தான் புறப்பட்டது எல்லாம் சௌகர்யமாய் முடிந்தது அன்று காலையில் எனக்கு டாக்டர் காண்பித்த கேஸின் விரத்தை அடுத்த கட்டுரையில் எழுதுகிறேன்



'ஓடுமீன் ஓடி உருமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு!'

1

ஆழமான மண்ணகத்தே
அன்பு பெய்கின்றான்
தோழ னுண்டோ? என்ன? வித்தே!
சொல்க செய்கின்றாய்?
தோழனில்லை தூங்குகிறேன்
தூயன் அன்புண்டு
கொழையில்லை இருளில் நின்றேன்
குழந்தை இன்புண்டு.

2

தூங்கி நன்று விழிப்ப தென்றோ?
சொல்க நல்வித்தே!
ஏங்கி அன்பன் நிற்றல் நன்றோ?
எழுக நல்வித்தே!
தூங்கி விட்டு மேலே வந்து
தோன்று வேனீண்டு
ஏங்க மாட்டார் குழந்தை சிந்தை
ஏற்பன் யானீண்டு.

3

பூமி போர்த்துத் தூங்குகின்றேன்.
பொழுது புலருமேல்
சாமி! பொல்லா இருளை வென்றேன்
தானே வருவன் மேல்
நாமிரண்டு பேரும் ஆடும்
நாளும் நம் முன்பு
பூமி மீதென் வரவு கூடும்
பூணும் நும்மன்பு.

4

வித்துன் என்ன மெத்தை யுண்டோ?
வித்துச் செல்வனே
மெத்தத் தூங்கிவிட்டாய் கண்டோம்
விழிக்க நல்வனே
முத்துக் கண்டோம் சிப்பிக் குள்ளே
வித்துப் பள்ளியாய்
முத்தம் ஈய ஆசை கொண்டோம்
முளைத்துத் துள்ளிவா.

5

உலகு கொஞ்சும் இன்ப முண்டாம்
உவகை கொண்டு வா
விலகி நின்றால் கோப முண்டாம்
விரைந்து விண்டுவா
உலகு நாதன் உள்ளே வந்தான்!
உன்னைக் கண்டானோ?
இலகுவாய் நீ வெளியே வந்தான்
என்று சொன்னானோ?

6

கமல நாதன் கையால் தொட்டான்
கண்ணால் பாரென்றான்
கமலக் கண்மேல் கார்நீர் தூவிக்
கலக்கம் தீரென்றான்
அமலன் அழகைக் காண வந்தேன்
அதனைக் கண்டேன் நின்
நிமல முகத்தில் நிமலன் அன்பும்
நிரம்பக் கண்டேனே.

இந்தக் கதை உண்மையிலேயே நடந்த கதை [illegible] காலத்திற்குமுன் [illegible] சூரிய காந்தி பூ எப்படி உண்டாயிற்று என்பதுதான் கதை. கதை சிறியதுதான் ஆனால் [illegible] தெரியும் உண்மை பெரிது.

வெகு காலத்திற்கு முன்பு, சேர நாட்டை [illegible] சேரன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் வெகு காலம் நன்றாக அரசு செலுத்தி வந்தான். அதனால் அவனுக்கு வயதானவுடன் தன் பிள்ளைகளில் ஒருவனுக்குக் ராஜ்யத்தைக் கொடுத்துவிட எண்ணினான். ஆனால் ஜனங்களுக்கு அவன் அரசாளப் போவதில் மனமே இல்லை. [illegible] மாதிரி நல்லவனாக அவன் பிள்ளைகள் அரசாளுவார்களோ [illegible] களோ என்ற சந்தேகம் தான் அவர்கள் [illegible] னர் [illegible] அவர் [illegible] தில் உண்மை இருப்[illegible] தான் பிள்ளைகளிடம் [illegible]யத்தைக் கொடுத்து [illegible]சுவராக்க அவனுக்கு இஷ்டமில்லை. அவர்களில் நல்லவன் எவன் என்று கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தது.

ரூபசேகரன் முதல் பிள்ளை. அவன் மிகவும் கெட்டிக்காரன். அவனுக்குத் தெரியாத வேலையே கிடையாது. அவன் மிகவும் பேராசை உள்ளவன். உலகத்[illegible] நான் [illegible] வேண்டுமென்று [illegible] எனக்கு [illegible] அதை அப[illegible]ரித்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் உள்ளவன்.

குணசேகரன் இரண்டாவது [illegible] அவன் நல்லவன். ஆனால் [illegible] கெட்டிக்காரனல்ல. அவனுக்குப் பேராசையே கிடையாது. எல்லோருக்கும் தன்னிடம் [illegible]முள்ளதைக் கொடுத்து எல்லோரும் [illegible] வேண்டும் என்பது [illegible] விருப்பம்.

சூரனுக்கு ராஜ்ய[illegible] யாருக்குக் கொடுப்பது என்[illegible] புரியவில்லை. [illegible] நாள் [illegible] யோசனை செய்தபிறகு பிள்ளைகள் இருவரையும் கூப்பிட்டுச் சொன்னான்.

“குழந்தைகளே! இங்கிருந்து ஆயிரம் மைல் தூரத்தில் சூரிய மலை என்று ஒரு அழகிய மலை இருக்கிறது. அதில் வெள்ளிமயமான குகை இருக்கிறது. அந்த வெள்ளிக் குகையில் தங்கம் ஏராளமாகக் கொட்டிக்கிடக்கிறது. அதிலிருந்து தங்கம் கொஞ்சம் எடுத்து வந்தால் நம் ராஜ்யத்திற்கு மிகவும் உதவியாயிருக்கும். அப்படி தங்கத்தைக் கொண்டு வருகிறவன்தான் அரசனாக முடியும்,” என்று சொல்லி விட்டான்.

இதைக் கேட்டதும் ரூபசேகரனுக்கு ஆசை அதிகமாயிற்று. எப்படியாவது ராஜ்யத்தையும், தங்கத்தையும் தானே அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் முதலில் சூரிய மலைக்குப் புறப்பட்டான். வெகு நாள் கழிந்து மலையை அடைந்து வெள்ளிக் குகையைக் கண்டதும் ஆசை அவனை [illegible]விட்டது. [illegible] கையிலிருந்த [illegible]யுடன் குகையி[illegible] [illegible]ான் மறுகணம் அவன் [illegible] முழுதும் ஆசை [illegible]. அப்படியே [illegible]ரமாக மாறி [illegible] ஒரு கிளையிலே அவன் கொண்டுவந்த கோணி தொங்கிக்கொண்டிருந்தது.

பல நாட்களாகியும் ரூபன் [illegible]கவே குணசேகரன் [illegible] கேட்க கிளம்பினான். [illegible] வழிகளிலெல்லாம் [illegible] ஜனங்களுக்கெல்லாம் தன் கையிலிருந்ததை தானம் செய்துகொண்டே போய்க் கொண்டிருந்தான். கடைசியில் அவன் சூரிய மலையை அடைந்தான். வெள்ளிக் குகையைக் கண்டதும் ஆச்சரியமடைந்தான். அக்குகையின் வாயிலில் ஒரு சூரியகாந்திப்பூ இருப்பதைக் கண்டான். அதன் அழகிலே மயங்கினான். மெதுவாக அந்தப் பூவைப்

நீங்கள் காப்பியடித்தோ, இரவு, பகலாக கடம்போட்டோ பரீக்ஷை பாஸ் செய்துவிடுவது என்று ஒரே நோக்கம் கொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட படிப்பு பிறகு பிரயோஜனமே இல்லாமல் போய்விடும். படிக்கும்போதே பாடங்களில் என்னென்ன உண்மைகள், நீதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொண்டு அதன்படி நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி இருந்தால்தான் நாம் வாழ்க்கையிலே முன்னுக்கு வரலாம். நாம் எதை எதைத் தெரிந்துகொள்ள வேண்டும் தெரியுமா? அப்பா, அம்மா பேச்சுக்களைக்கூட [illegible]மாகக் கீழ்ப் படியலாம். ஆனால் உங்களை யாராவது 'நீ கெட்டிக்கார பையனல்லவா? உன் [illegible] அழகுள்ளவனே [illegible] என்று சொன்னால் [illegible]

தாத்தா என்ன சொன்னார்

ஊராண்ணம்

★

மாமா, நான் கெட்டிக்[illegible] தான், என்னைக் காட்டிலும் [illegible] டிக்காரன் ஒருவனும் [illegible] யாது' என்று சொல்லக்கூட[illegible] சிறிது வெட்கத்துடன், [illegible] மாதிரி [illegible] குண[illegible] ஒன்றும் [illegible]யாதே' [illegible] சொல்ல வேண்[illegible]

யாராவது உங்க[illegible] லால் பொறுத்[illegible] வேண்டும். [illegible] என்பது [illegible]

களா என்று எதிர் பார்த்து அவர்களுக்கு உதவி செய்வது பிசகு. நம் ஒருவருடைய உதவியையும் எதிர் பாராது மழையைக் கொடுக்கும் மேகம் மாதிரி நீங்கள் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். இம் மூன்றையும் ஒரு பாட்டாக பாடிவிட்டார் [illegible]ரிகடுகம்' என்று நூலில்

[illegible] பேணுங்கால்
[illegible]ணர்
[illegible]ான்றையும்—
[illegible] மூன்[illegible]
[illegible]ரும்[illegible]ருக்கு.'

[illegible]க்குத் [illegible]ருக்கே [illegible]

பறித்துக்கொண்டே குகையினுள் சென்றான். கையில் பூ இருந்தபடியால் குகை அவனை ஒன்றும் செய்யமுடியவில்லை. தங்கக்கட்டிகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

அப்படிப் புறப்படும்போது அப் பூ அங்கிருந்த மரங்களின் மேல் படவே மரங்கள் மனிதர்களாக மாறின அவன் அங்கு அப்பொழுது ரூபனையும் கண்டான். அவர்கள் அவனிடம் தங்கம் இருப்பதைக் கண்டவுடன் பேராசையினால் அதைப் பிடுங்க எத்தனித்தனர். ஆனால் அவர்கள் அத் தங்கத்தை தொட்டவுடன் சூரிய காந்திச் செடியாக மாறிவிட்டனர். குணசேகரன் ஒன்றும் தோன்றாதவனாய் தங்கத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

ஊருக்கு வந்தவுடன் தங்கத்தை எல்லோருக்கும் காண்பித்தான். ஒவ்வொருவரும் தங்கத்தை எடுத்துக்கொள்ள ஆசைப்பட்டனர். ஆனால் யார் யார் அம்மாதிரி ஆசைப்பட்டார்களோ அவர்கள் அத்தனை பேரும் சூர்ய காந்திகளாக மாறி விட்டனர். தங்கத்தின் மேல் ஆசை கொள்ளாதவர்களுக்கு அதிகப் பணம் கிடைத்தது. கடைசியில் குணசேகரனே முடிசூடினான். அதிலிருந்து ஜனங்கள் அதிகமாகப் பணத்தில் ஆசை வைப்பதே இல்லை. மிகவும் நல்லவர்களாகி விட்டார்களே.

தம்பிகளே! மேலே கூறிய தனால்தான் சூரியகாந்தி இன்று கூட சூரியனை வெள்ளிக்கட்டி என்றே நினைத்து அதை எப்பொழுதும் உற்று பார்த்த வண்ணம் இருக்கின்றது.

—

வீரப் பெண்கள்

பத்மினி

★

டில்லி பாதுஷா அலாவுதீனைக் கண்டால் எல்லோருக்கும் நடுக்கம். பாதுஷா பவனி வருகிறார் என்றால் ஊரிலுள்ள ஜனங்கள் உள்ளே ஒளிந்து கொள்ளுவார்கள். அவ்வளவு கீர்த்திபெற்ற பாதுஷா ஒரு பெண்ணிடம் ஏமாந்துபோய் விட்டான்.

ராஜபுதனத்திலுள்ள சித்தூர் ராணா பீமசிம்மனுக்கு பத்மினி என்ற மனைவி இருந்தாள். அவள் அழகு டில்லி பாதுஷாவை ஆட்டங்கொடுத்துவிட்டது. எப்படியாவது அந்த அழகியை அபகரிக்கவேண்டுமென்ற ஆசையுடன் சித்தூரை முற்றுகையிட்டான் பாதுஷா. எதிர்பாராதவிதமாக பாதுஷா முற்றுகை யிட்டதை அறிந்த பீமசிம்மன் சமாதானமாக முற்றுகையை விலக்க பாதுஷாவை கேட்டான்.

[illegible] கைகூடி வருவதைக் கண்ட பாதுஷா ஒரு கட்டளையைச் சொன்னான். 'பீம்சிங்! உன் [illegible] நான் ஒரு தரம் பார்க்கவேண்டும். அதற்குச் சம்மதித்தால் [illegible] திரும்பிவிடுகிறேன் என்றான்.

பீமசிம்மன் ராஜபுத்ரனல்லவா. அவ்வார்த்தைகளைக் கேட்டதும் அவன் உள்ளங் கொதித்தது. உடல் பதைத்து [illegible] குமே தங்களை அடிமைப்படுத்திக் கொள்ளாத ராஜபுத்ர வீரர்கள் அன்று கோபத்திற்கு அடிமையானார்கள். பாதுஷா இதை நன்றாகத் தெரிந்துகொண்டான். கோபத்தினால் [illegible]க்கே

இது என்ன

[illegible]து சீனாவில் உள்ள பெரிய [illegible]ங்களில் ஒன்றாகிய ஸூசௌ [illegible]ற பட்டணத்தில் இருக்

கிறது. [illegible] புத்தர் பிரானின் கோயில் [illegible]ய கட்டடம் [illegible]களின் பெருமைக்கும், புகழுக்கும் சின்னமாக விளங்குகி[illegible] இது 850 வரு[illegible] [illegible]றது. [illegible] கட்டடத்[illegible] அழியாத ஐசுவ[illegible]குகிறார்கள்.

மோசம் வந்துவிடப் போகிறதே என்று எண்ணி கட்டளையை சிறிது தளர்த்தி மறுபடி பீமசிம்மனிடம் சொன்னான்.

'தாங்கள் எனக்கு அவள் உருவத்தை நேரில் காண அனுமதிக்காவிட்டாலும், நிலைக் கண்ணாடியிலாவது பார்க்க அனுமதியுங்கள்' என்று கேட்டான். ஒருவாறு [illegible]ானம் அடைந்த ராஜபுத்[illegible] அதற்கு சம்மதித்தார்கள். [illegible]ா ஒருவனாகவே பீமசிம்[illegible] அரண்மனைக்கு வந்தான். [illegible]யின் அழகை நிலைக் கண்ணாடியில் கண்டு மயங்கி, [illegible] போவதற்கே மன[illegible]ாதவனாய் திரும்பினான். [illegible] பாதுஷாவின் எண்ணத்தை அறியாத பீமசிம்மன். அவனை வழியனுப்பகோட்டைக்கு வெளியே சென்றான். கோட்டைக்கு வெளியே வந்தவுடன் அவன் கால்களுக்கு விலங்கிட்டு டில்லிக்கு கொண்டுசென்று சிறையிட்டான் எவரும் கண்டு நடுங்கும் மொகலாய பாதுஷா. மறுநாள் சித்தூருக்கு ஒரு சேதி அனுப்பினான். 'ராணாவை விடுவதாயிருந்தால் பத்மினி என் மனைவியாக வேண்டும்' என்று சொல்லப்பட்டிருந்தது அதில்.

ராணாவுக்கு நேரிட்ட கதியைக் கண்டு சித்தூரே கதறியது. ஆனால் பத்மினி மாத்திரம் சிறிது கூடப் பயப்படவில்லை. அவள் வீரனின் மனைவியல்லவா. எப்படியாவது தன் கணவனைக் காப்பாற்றவேண்டும் என்ற எண்ணம் உண்டாகி தீவிரமாக

யோசித்தாள். கடைசியில் தான் போய்விடுவதே நலம் என்று தீர்மானித்து ஐநூறு ராஜபுத்திர வீரர்களுக்கு தாதிகள் மாதிரி வேஷம்போட்டு பல்லக்கில் ஏறி டில்லியை அடைந்தாள்.

பத்மினியை நினைத்து ஏங்கிக் கொண்டிருந்த பாதுஷாவுக்கு அவள் வந்துவிட்டாள் என்று கேட்டதும் சந்தோஷம் தாங்க முடியாமல் தாடியை ஒருதரம் நன்ருகத் தட்டி தடவிக்கொடுத்தான். பாதுஷாவைக் காணு முன் தன் கணவனைப் பார்க்க வேண்டுமென்று பத்மினி வேண்டினுள். பெண்ணசை கொண்ட பாதுஷா மெய்மறந்து அவள் வேண்டுகோளுக்கு இணங்கி சிறையிலிருந்த ராணுவை வர வழைத்தான். ராணு அவர்கள் எதிரில் வந்ததும் பெண் உடையிலே இருந்த ராஜபுத்ரர்கள் வேஷத்தை திடீரென மாற்றிக் கொண்டு ராணுவையும் பதமினியையும் சூழ்ந்து கொண்டனர். அப்பொழுது பாதுஷாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ராணுவையும், பத்மினியையும் விட்டு விட்டான் சந்தோஷமாக இருவரும் ஊர் திரும்பினர்.

கைக்கெட்டியும், வாய்க்கு எட்டாது ஏமாந்துபோன பாதுஷா எப்படியும் பத்மினியை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சித்தூரை மறுபடி முற்றுகை யிட்டான். பாதுஷாவின் படை பெரிது. ராணுவின் படையோ மிகவும் சிறியது. கடைசியில் தோல்வி நிச்சயம் என்று ராணுவுக்குத் தெரிந்துவிட்டது. பாதுஷாவின் கைகளில் சிக்கி அவமானப் படுவதைவிட உயிர் விடுவதே மேல்என்று தீர்மானித்து பெரிய தீ மூட்டினுன். அதில் ராஜபுத்ர பெண்கள் ஒவ்வொருவராக விழுந்தனர். அப்படி விழுந்தவர்களில் பத்மினிதான் முதலாவதாக இருந்தாள். கடைசியில் வீரர்கள் அத்தனைபேரும் இறந்தார்கள். வெற்றி அடைந்த பாதுஷா பத்மினியைத் தேடினுன். அப்பொழுது அங்கிருந்த ஒரு வயதான வேலைக்காரி ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டி 'பத்மினியா, அதோ அங்கு இருக்கிருள்' என்ருள். பாதுஷா அவள் காட்டிய பக்கம் திரும்பினுன். ஓரே சாம்பல் குவியலைக் கண்டான். அவன் மனம் உடைந்தான். சண்டையில் வெற்றியடைந்தான். சித்தூர் கோட்டையை தகர்த்தெறிந்

தான்: ஆனாலும் அவன் மனம் தோல்வியடைந்தது. மனக் கோட்டையும் இடிந்து விழுந்தது.

குழந்தைகளே! பத்மினியின் வீரதைப் பார்த்தீர்களா. அவள் பாதுஷாவுக்கு அடிமையாகி இருந்தால் நாம் ராஜ புத்ரர்களேயே மறந்திருப்போம். ஆனால் ராஜபுதனத்தைப்பற்றி எண்ணும்போதெல்லாம் பத்மினியின் வீரம்தான் முதலில் வந்து நிற்கும்.

ஊர் வம்பு

★

ஹாங்காங்

இந்நகரம் சீன தேசத்துக்கு தென் கிழக்கே காண்டன் நதி கடலில் கலக்குமிடத்தில் இருக்கின்றது இது ஒரு தீவு. இது 32 சதுர மைல் விஸ்தீர்ணமுள்ளது. சீனவிற்கும், இத் தீவிற்கும் நடுவில் கற்பாறைகளால் ஆக்கப்பட்ட பெரிய சுவர்கள் இருக்கின்றன. அச் சுவர்களில் மிகவும் பெரியது விக்டோரிய என்ற சுவர். இச் சுவர் மிகவும் விஸ்தீர்ணமுள்ளபடியால் அதில் 'விக்டோரியா' என்ற நகரமே நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. ஹாங்காங்கில் அழகிய தோட்டங்கள் இருக்கின்றன. 1841-ம் வருஷம் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு உள்பட்டது. இங்கு சர்க்கரை சுத்தம் செய்தல், கப்பல் கட்டுதல், ஆழமுள்ள இடங்களில் மீன் பிடித்தல், புகையிலை பயிரிடுதல் முதலிய வேலைகள் நடக்கின்றன. இத் துறைமுகம் உலகில் வியாபாரம் பிரமாதமாக நடக்கும் துறைமுகங்களில் ஒன்று. பட்டு. தேயிலை, மூங்கில் இஞ்சி முதலியவைகள் இத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஒரு பெரிய டிராம்வேயும்' இருக்கிறது. இது யுத்த கேந்திரம். ஒவ்வொரு நாடும் அதை ஆக்ரமித்துக் கொள்ள சமயம் பார்த்துக் கொண்டிருப்பதில் ஆச்சரியமில்லை.

கல்வியும் மரமும்

உங்கள் வீட்டில் ஒரு பெரிய மாமரம் இருக்கிறது. அதற்கு பல கிளைகள் இருக்கின்றன பச்சைப் பசேலென்ற இலைகள், துளிர்கள் எல்லாம் கண்ணைப் பறிக்கின்றன. அதிலே பெரிய பெரிய மாம்பழங்கள் ஊஞ்சலாடுகின்றன. உங்களுக்கு நாக்கிலே ஜலம் சொட்டுகிறது. எப்படியாவது பழத்தைப் பறித்துத் தின்ன வேண்டுமென்று ஆசை உண்டாகிறதே தவிர அந்த அழகிய மரத்தைப் பார்த்து, "மரமே! நீதான் ரொம்ப அழகாய் இருக்கிருயே. ரெண்டு பேரும் சேர்ந்து பீச்சுக்குப் போய் கிரிக்கெட் விளையாடிவிட்டு வரலாமா?" என்று கேட்பீர்களா? மாட்டீர்கள். உங்களுக்குத்தான் மரம் பேசாது என்று தெரியுமே. அந்த மரம் மாதிரிதான் படிக்காத முட்டாள் களும் பள்ளிக்கூடத்துக்குக் கன ஜோராக வருவார்கள். ஆனால், வாத்தியார் ஏதாவது கேள்வி கேட்டால் போதும். அப்படியே அசையாமல் மரம்மாதிரி நிற்பார்கள். உடனே வாத்தியாருக்குக் கோபம் வந்து, "என்னடா, மரம் மாதிரி நிற்கிருய்?" என்று கேட்கிருர் அல்லவா? ஆனல், மரங்களாவது நமக்கு உபயோகப்படுகின்றன இந்த முட்டாள்களால் ஒன்றும் பயனில்லை அதனுலே தான் காடுகளிலே நன்ருக அடர்ந்து, நிமிர்ந்து, வளர்ந்திருக்கும் மரங்களை எல்லாம் மரங்கள் என்று சொல்ல முடியாது. மிகவும் படித்தவர்கள் இருக்குமிடத்திலே கல்வியில்லாத முட்டாள் பேசத் தெரியாமல் நிற்கிருனே அவன்தான் நல்ல சரியான மரம்' என்று தாத்தா சொல்லியிருக்கிருர். ஆகவே, நாமும் மேலே சொன்ன மரங்களாக இல்லாமல் நன்ருகப் படித்து மனிதனுகவே இருக்க முயற்சிப்போம்.

சின்ன சின்ன கதை

நல்லவன் யார்?

அராபிய நாட்டைச் சேர்ந்த சுல்தான் ஒருவன் தனக்கு ஒருவனை மந்திரியாகச் செய்து கொள்ள விரும்பினுன். உண்மையே பேசுகிறவனையும், பணத்தில் துளிக்கூட ஆசையில்லாதவனையும் மந்திரியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பது அவன் நோக்கம். ஒருவன் உண்மை பேசுகிருனு இல்லையா என்பதையும், பணத்தில் ஆசை இருக்கிறதா, இல்லையா என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது என்று திகைத்துக் கொண்டிருந்தான் கடைசியில் ஒரு யோசனை தோன்றியது. ஒரு நாள் தன் அரண்மனையில் தன் ஊரிலுள்ள எல்லா ஆண் மக்களுக்கும் விருந்து வைத்தான். விருந்து நடக்கும் கூடத்தை அடைவதற்கு சிறிது முன்னுடி உள்ள ஓர் அறையை இருட்டு மயமாக்கி அதில் பல சாக்குகள் நிறைய பணத்தை ரொப்பி வைத்து, விருந்துக்கு வருபவர்களை அந்த இருட்டறை வழியாக விடச் சொன்னுன். வந்தவர்கள் சிறிது உற்றுப் பார்த்து காசு இருப்பதைக் கண்டு அப்படியே முடிந்த அளவு எடுத்து மடியில் சுற்றிக் கொண்டார்கள். விருந்து நடந்த பிறகு சுல்தான் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் எல்லோரும் வந்ததினுல் எனக்குச் சந்தோஷம் அதிகமாக ஏற்பட்டிருக்கபடியால் அல்லாவை துதித்து ஆனந்தமாக கூத்தாடுவோம்' என்ருன். கூத்தாடுவோம் என்றதைக் கேட்டதும் எல்லோரும் திகிலடைந்தனர். ஏனெனில் கூத்தாடினுல் மடியிலுள்ள பணம் கீழே கொட்டிவிடும், இல்லாவிட்டால் பணம் குலுங்கும்போது சத்தங் கேட்கும். ஆகவே சுல்தான் குதிக்க ஆரம்பித்தாலும் அவர்கள் குதிக்கவே

இல்லை. ஆனல் அவர்களின் ஒருவன் மாத்திரம் அரசனுடன் சேர்ந்து கூத்தாட ஆரம்பித்தான். அவனைக் கண்டதும் அரசன் கூத்தாடுவதை நிறுத்தி, 'நீதான் எனக்கு மந்திரியாக வேண்டும்' என்று சொன்னுன். அவனுக்கே அது ஆச்சரியமாக இருந்தது. சுல்தான் மற்றவர்களைப் பார்த்து 'காசு ஆசைப் பிடித்தவர்கள் யார் என்று பார்க்கத்தான் இந்தப் பரீக்ஷை' என்று சொல்லி விரட்டிவிட்டான்.

காலஞ்சென்ற ஸ்ரீமான் ஸி விஜயராகவாச்சாரியாரின் ஞாபகார்த்தமாக சேலத்தில் அமைக்கப்படும் லைப்ரரி கட்டிடத்தின் அஸ்திவாரக்கல்லை 5-ந்தேதி ஸ்ரீமான் பிரகாசம் சேலத்தில் நாட்டியபோது எடுத்த படம்.



சேலத்தில் பத்தாவது அகில இந்திய கதர் சுதேசி கைத்தொழில் பொருட்காட்சித் திறப்புவிழாவை 5-ந்தேதி ஸ்ரீமன் நடத்தி வைத்தபோது எடுத்த படம்.

(அநுபந்தம்)

சுய நாட்டை விட்டு வெளிநாடுகளில் இந்தப் பழம் மேன்மையடைந்தது.

இந்தப் டழத்தின் பூர்வோத்தரம் அதிக விசித்திரமானது அமெரிக்க காடுகள் இதன் ஜனன பூமியாக இருந்தும், ஐரோப்பியப் பிரதேசங்களில் சாதாரணமான உணவு பொருளாக உபயோகப்படுத்தப்பட்ட வெகு காலத்திற்குப் பிறகுதான் தாயகத்தில் பயன் படலாயிற்று.

நூறு வருஷங்களுக்கு முன்புகூட அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இப்பழமும் காயும்விஷப் பொருள்களாகமதிக்கப்பட்டன அப் பிரதேசங்களிஓ மனித உணவு பொருளாகப் பயன் பட லாயக்கானது என்று தெரிவதற்கு வெகு காலத்திற்கு முன்பு ஒரு அழகான தோட்டச் செடியென் றும் பழம் 'காதல் இலந்தை' (லவ் ஆப்பிள்) என்னும் பெயருடன் கருதப்பட்டது.

நச்சுச் செடி இனத்தைச் சேர்ந்ததாலும் அவ்வினச் செடிகளில் சில உண்மையில் விஷப் பொருள்களாகையாலும் இந்தச் செடியும் நச்சுள்ளதென்ற தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருக்கலாம் காரமான கெட்ட வாசனை இதன் இலைகள் கிளைகளில் இருப்பதும் பழங்கள் உணவு பதார்த்தமாகாது என்ற எண்ணத்தை உறுதிபடுத்தியிருக்கக் கூடும்

மெக்ஸிகோ நாட்டு வாசிகளான இந்தியர்கள் கல்பாந்த காலமாக உணவு பொருளாக வழங்கி வந்த இந்தப் பழத்தை ''டொமாடி' என்று அழைத்து வந்தார்கள் அந்தப் பதத்தின் சிறு சிதைவுதான் இன்று வழங்கப்படுகிற ''டொமாடோ''

ஐரோப்பிய கடற் பிரயாணிகள் இதை ''டொமாடில்,' ''டுமாடில்,'' ''டுமாடாஸ்'' என்ற பலவித மாறுதல்களான பெயரிட்டழைத்தனர்.

டொமாடோ சீமைத்தக்காளி

★

ஆண்டீஸ் மலைப் பிரதேசத்தில் வனசரமாகத் தாந்தோன்றிகளாகவே உண்டாகின்றன

பெரு ஈகுவேடார். பொலீவியா நாடுகளில் ஆண்டீஸ் மலைப்பிரதேசங்களில் காடாந்தமாக முளைத்து வளர்ந்து விருத்தியானவற்றிலிருந்துதான் தற்காலம் விளையாகிய 'டொமாடோ உற்பத்தி செய்யப்பட்டதாக எண்ணப்படுகிறது. மகோன்னதமான அம்மலை நாட்டில் சுமாரான உயரப் பிராந்தியங்களில் இன்றைக்கும் பல ரகங்களான இவ்வினச் செடிகள் தானாகவும், பயிரிடப்பட்டும் வருபவை காணப்படலாம்.

பயிரிடப்படுகிற டொமாடோ அதிகக் குளிரைத் தாங்கமுடியாது அது போலவே கடுங்கோடையும் உஷ்ணமும் அதற்கு ஆகா. எனவே சமசீதோஷ்ண நிலைமையுள்ள பகுதிகளே இச் செடிக்கு உகந்தவை என்பது தெளிவாகிறது.

ஆண்டீஸ் மலைச் சரிவு பாகங்களிலிருந்து வடக்கே மத்திய அமெரிக்க நாடுகள் மெக்ஸிகோவுக்கு, வெகு காலத்திற்கு முன்பு குடி பெயர்ந்து சென்ற இந்தியர்கள் 'மெய்ஸ்' என்ற மக்காச்சோளத்தை எடுத்துச் சென்றதைப் போலவே விளையவைத்த டொமாடோச் செடியினங்களையும் கொண்டுபோய் விருத்தி செய்திருக்க வேண்டுமென்பதற்குத்தக்க ஹேஷ்யங்கள் இருக்கின்றன

மத்திய அமெரிக்க நாடுகள், மெக்ஸிகோ முதலியவற்றில், பயிராக்கப் படாத வனசரங்களான தினுசுகள் இல்லவே இல்லை தாயகமாகிற தென் அமெரிக்க மலைப் பிரதேசங்களில் அமோகமான தினுசுகள் கிடந்த போதிலும் புதுப்புகு நாடுகளில் இல்லாமை. இவை சென்ற 2,000 வருஷங்களுக்கு முன்னேயே இடம் பெயர்ந்து விளைவிக்கப்பட்டு வருகின்றன என்று ஊகிக்க இடம் உண்டு.

இப்பழம் விரைவில் கெட்டழிந்து போகக்கூடியதாகையாலும், அமோகமான தேவை ஏற்படவில்லையாதலாலும் புராதன இந்தியக்குடிகள் இச்செடி விருத்தி விஷயமாக அவ்வளவாக சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. ஐரோப்பிய வெள்ளையர்கள்

''வருகிற வழியில் நம்ப சங்கீத வித்வான் ரமணியைப் பார்த்தேன். அரைமணி என்னை விடமாட்டேன் னுட்டான்'' உங்கிட்டேயும் பஞ்ச பாட்டு பாடினுனு ?!''

பிரவேசித்த பிறகே இப்பழச்செடியின் மேம்பாடு ஆயிற்று வட அமெரிக்க இந்தியர்கள் இதை வழங்கினதாக ருசீ கிடைக்காததால் தென் அமெரிக்கப் பிரதேசங்களிலிருந்து வடக்கேயும் பிறநாடுகளுக்கும் சமீப காலத்திலேயே இச்செடி சென்றிருக்க வேண்டுமென்பதையே சூசிப்பிக்கிறது.

முதன் முதலாக இதைப்பற்றின விருத்தாந்தம் எழுதப்பெற்ற 1554-ம் வருஷத்திற்குப்பின் 200 ஆண்டுகளாக இப்புவியின் பல பாகங்களுக்கும் சிறுகச் சிறுக பிரயாணஞ்செய்து வந்தது ஐரோப்பிய சஞ்சாரிகள் வெகு தொலைநாடுகளில் இச் செடியைக் கண்டதாக எழுதிவைத்தார்களென்றாலும் இன்று அமெரிக்க ஐக்கிய நாடுகளென்று அழைக்கப்படுகிற பிரதேசத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் இல்லை

1550-ல் முதன் முதலாக இத்தாலியர்கள் டொமாடோவை வளர்த்தார்கள் அதைத்தின்ற முதல் ஐரோப்பியரும் இவர்களே இதற்கு 25 வருஷங்களுக்கப்பால் ஆங்கிலேயர், ஸ்பானியர்கள் மத்திய ஐரோப்பிய நாட்டினர் தோட்டங்களை அலங்கரிக்கத்தக்க செடியாக மாத்திர மதித்து வளர்த்தார்களேயன்றி அப்பொழுது உணவு பொருளாகக்கருதி யாதொரு சிரத்தையும் எடுக்கவில்லை. பிரெஞ்சு நாட்டார் இப்பழத்தை 'போம்ட்' ஆமோர்' என்றழைத்தார்கள் இதிலிருந்தே ஆங்கிலேயரும் அமெரிக்கரும் இதை 'லவ் ஆப்பிள்' என்றார்கள்

முற்கால இத்தாலிய எழுத்தாளர் ஒருவர் இதை போமா பெருவியாணு' என்று கூறினதால் பெரு நாட்டிலிருந்து பெறப்பட்டதென்று ஊகிக்கப்படுகிறது.

மற்றொருவர் 'பேமா டோ' ஓரோ' அல்லது 'தங்க ஆப்பிள்' என்று அழைத்திருக்கிறார் முதல் முதல் வந்த பழச் செடி இனம் மஞ்சள் பழங்களுள்ளதாக இருந்திருக்க வேண்டும். 18-ம் நூற்றாண்டின் மத்தியில் இத்தாலியில் இச் செடி உணவு பொருள் தர அமோகமாகப் பயிராக்கப்பட்டது பிற ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் கொஞ்சங் கொஞ்சமாகவும் விளைவிக்கப்பட்டது

தாமஸ் ஜெப்பர்சன்
இதை விளைவித்தார்

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுதந்திரப் பிரகடனமாவகற்க முன்ப அந்நாடுகளில் வெள்ளையர்கள் இச்செடியைப் பயிரிட்டதாக யாதொரு குறிப்பும் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை.

அதிக மேம்பாடடைந்த வர்ஜீனியா குடியானப் பிரமுகரான தாமஸ் ஜெப்பர்ஸன், அரசாங்க நிபுணர். இந்தப் பயிரை 1781-ல் விளைவித்தார்.

1789 ல் சாண்டோ டொமிங்கோவிலிருந்து தப்பியோடிவந்த பிரெஞ்சுக்காரரொருவர் பிலடெல்பியாவில் இதை அங்குரார்ப்பணம் செய்ததாகச் செய்தி.

1802-ல் இத்தாலிய சித்திரக்காரன் ஒருவன் மசாசுசெட்ஸில் சேலம் பட்டணத்தருகில் உண்டாக்கினதாகவும் சொல்லப்படுகிறது.

பிரெஞ்சுக்காரருடைய முயற்சியால் 1812-ல் நியூ ஆர்லியன்ஸில் டொமாடோ உணவாக உட்கொள்ளப்பட்டது அந்நாட்டு வட பாகங்களில் இப்பழம் உணவு பொருளாக வழங்கப்பட பின்னும் 20-25 வருஷங்களாயின டொமாடோ விஷப் பொருள் என்று கருதப்பட்ட கால் அதைக்கேட்ட பலர் இப்பொழுதும் ஜீவந்தர்களாக இருக்கிறார்கள் பலவித உருவங்கள் வர்ணங்களுடன் இன்று அமெரிக்காவில் காணப்படுகிற டொமாடோ பழங்கள். முதலில அமெரிக்கப் பிராந்திய சுற்றுப் பிரயாணிகள் அப்பொழுதே கண்டதாக எழுதி வைத்தவையே செடியின மேன்மையாளர்கள் பழத்தைப் பெரிதாக்கியும் தோலை மென்மையாக்கியும் அமோக மகசூல் கொடுக்கச் செய்தும் விருத்தி செய்திருக்கிறார்களாலும் உருவத்திலும் நிறத்திலும் பெருவாரியான மாறுதல் எதுவும் செய்துவிடவில்லை

உலகப் பிராமுக்கியமடைந்த உணவுப் பொருள்களில். நூதன விமர்சை அடைந்தது டொமாடோ. ஐரோப்பாவில் விளைத்து வம்ச விருத்தி செய்வதில் அதிக சிரத்தை சிரமம், செலவு முதலியவற்றால் உயர்தர மேம்பாடடைந்த ரகங்கள் தற்காலம் அமெரிக்க தினுசுகள் மேம்படடையக் காரணகாரிகளாக இருக்கின்றன உணவு வகையில் பெருவாரியான மேம்பாட்டைச் செய்தது இத்தாலியே பிற நாட்டு உணவு நிலைமையை மேன்மையாக்கின டொமாடோ இப்பொழுது சுயநாடாகிய மேற்கு கோளார்த்த யுனைடெட் ஸ்டேட்ஸ்களில் மாத்திரம் லக்ஷக்கணக்கான ஏகர் நிலத்தில் பயிர் செய்யப்பட்டு கோடிக்கணக்கான டன் தக்காளிப்பழங்கள் உற்பத்தியாக்கப்படுகின்றன

கணேஷ்
உயர் ரக காப்பி

சில்லறை விற்பனை கிளைகள்:
285, சைனபஜார் ரோட்.
71, பாண்டி பஜார். தி-நகர்

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)
Phone: 84254.
குழந்தைகளின் ஈரல், குலை ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்று தான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.
Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.
கும்பகோணம் கிளை:— 7 சாரங்கபாணி கோவில் கீழ வீதி.
திருச்சி கிளை:— 15. புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

குழந்தைகள் பெருமை

ஜோதி சுப்ரமணியம்

குழந்தைகள்பற்றி எழுதவேண்டுமென்பது வெகு நாளைய என்னுடைய ஆவல் நிறைவேறாமலிருப்பதற்கு காரணம் எனது குழந்தைகளே எழுதலாமென்று உட்காரும் நேரத்தில் ஏதாவதொரு குழந்தை குறுக்கிட்டு எழுத்தைத் தடைசெய்து கொண்டேயிருக்கும் அப்படித் தடைசெய்யும்குழந்தைகள்மீது வெறுப்போ கோபமோ கொள்வதில் பிரயோஜனமேயில்லை அவர்கள் ஏற்படுத்தும் தடைதான் எழுதுவதற்கு ஆர்வத்தை யூட்டி மேலும் மேலும் உற்சாகமளிக்கிறது

குழந்தைகள் வேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி எத்தனையோ விதமான தர்க்கங்கள் நடந்துகொண்டுதானிருக்கின்றன குழந்தைகள் விஷயம் வேண்டுமென்றோ, வேண்டாமென்றோ எளிதில் முடிவுக்குவந்துவிடுகிற காரியமல்ல

குழந்தைகள் அதிக ஹிம்சைப்படுத்தும்போது. ஐயோ இந்தக் குழந்தைகள் இல்லாவிட்டால் எத்தனையோ சுகமாக இருக்கலாமே என்றுதோன்றலாம்.

கடைகளிலோ, அல்லது மற்ற வீடுகளிலோ குழந்தைகளுக்காக விளையாட்டுச் சாமான்கள். நகை நட்டுகளைப் பார்க்கும்போதும், சின்னஞ்சிறு சொக்காய்களைக் காணும்போதும் நமக்கும் ஒரு குழந்தையிருந்தால் இவைகளையெல்லாம் பூட்டி அனுபவித்துப் பார்க்கலாமே என்ற ஆசை அவர்களை அறியாமலே ஏற்படத்தான் செய்யும்.

இப்படியே. அதிகக் குழந்தைகளை வைத்துக்கொண்டு ஹிம்சைப்படுகிறவர்கள் இல்லாதவர்களைப் பார்த்து, பெருமூச்சுவிடுவதும், குழந்தை இல்லாதவர்கள் அந்தப் பாக்கியம் பெற்றவர்களைப்பார்த்து ஏங்குவதும் உலக இயல்பு.

குழந்தை இல்லாதவர்கள் நினைத்த நேரத்தில் எங்கு வேண்டுமானாலும் கிளம்பலாம் எந்த தேசத்திற்கு வேண்டுமானாலும் புறப்பட்டு விடலாம் ஆனால் குழந்தைக்காரர்களோ அப்படி முடியாது

மாலை நேரத்தில் எங்காவது போக வேண்டுமென்று தீர்மானித்துவைத்திருப்போம். அன்றைக்கென குழந்தைக்கு ஏதாவது உடம்புக்கு வந்துவிடும். பகல் முழுவதும் நன்றாக விளையாடிக்கொண்டிருந்த குழந்தைக்கு திடீரென்று புறப்படுகிற நேரத்தில் ஜுரமோ அல்லது வேறு ஏதாவதோ வந்துவிடுகிறது. ஒன்றுமில்லாவிட்டாலும் இரண்டு தடவை வயிற்றுப் போக்காவது போய்விடுகிறது அப்படியிருக்கிற குழந்தையை எடுத்துக்கொண்டு எங்கே போவதென்று நமது பிளானை மாற்றிக் கொள்கிறோம் உடம்புக்கே ஒன்றுமில்லாவிட்டாலும், குழந்தை புறப்படுகிற நேரம் பார்த்து தூங்க ஆரம்பித்துவிடுகிறது அசந்து தூங்குகிற குழந்தையை தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு போவது எங்கேயென்று அன்றைய பிளான் நின்றுவிடுகிறது. இதற்கே இப்படியென்றால் வெளியூர் பிரயாணத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம் அடுத்த ஊருக்குப் புறப்படு முன் குழந்தைக்கு உடம்புக் கோளாறு ஒன்றுமில்லையா என்பதைக் கவனித்துக்கொள்ள வேண்டும். அப்பால் போகுமிடம் குழந்தையின் உடலுக்கு ஒத்துக் கொள்கிற இடம்தானா என்பதை ஆராயவேண்டும். செல்லும் இடத்தில் குழந்தைகளுக்கு வேண்டிய ஆகார வசதியோ, தூங்க, விளையாட எல்லாவற்றிற்கும் சௌகரியம் கிடைக்குமா என்பதைக் கவனிக்க வேண்டும் இத்தனை வசதிகளையும் கவனித்துக்கொண்டு புறப்பட்டாலும் பிரயாணம் போய்விட்டு ஊர் திரும்பும்வரை குழந்தைக்கு ஒன்றும் செய்யாமலிருக்க வேண்டுமே என்கிற கவலையுடன்தான் பொழுதைப்போக்க வேண்டும் இப்படி விசாரப்படுகிறவர்கள் பணத்தைச் செலவிட்டு வெளியூர் சென்றாலும், அங்கங்கே பார்த்துக் கவனிக்க வேண்டிய இடங்களையோ உறவினர்களையோ, எப்படிப் பார்க்க முடியும்? ஒரே இடத்திற்குப் போய்விட்டு நேராக வீடு வந்து சேரவேண்டியதுதான்

ஒன்று இரண்டு குழந்தை வைத்திருக்கிறவர்கள்பாடு இப்படி என்றால் நாலைந்து வைத்திருப்பவர்களின் நிலைமையைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை

குழந்தையுள்ளவர்கள் இப்படிக் கூறுகிறார்கள் என்றால் குழந்தை இல்லாதவர்கள் என்ன சொல்லுகிறார்கள் பார்ப்போம்

பெரிய உத்யோகம் ஒன்றிலுள்ளவரின் குடும்பம், குடும்பமும் சற்று பணக்காரக்குடும்பம் லீவில் வருஷத்திற்கு ஒரு தடவை சொந்த ஊரில் போய்த் தங்கி வருவார்கள். வழக்கம் போல் அந்த வருஷம் ஒரு மாத லீவும் அதற்கு வேண்டிய பணம் பாங்கியிலிருந்தும் எடுத்துவந்துவிந்துவிட்டார் கணவன் மனைவியோ பிரயாணத்திற்கு வேண்டிய எவ்வித ஏற்பாடும் செய்யாமல் மனம் சோர்ந்தவளாய் காணப்படுகிறாள் சொந்த ஊருக்குப் போகப் போகிறோம் என்பதை நினைத்து நினைத்தே சந்தோஷப்படும் தன் மனைவி, இப்பொழுது புறப்பட்டுச் செல்லும் நாள் நெருங்குவதும் உற்சாகமில்லாதிருப்பதைக் கண்டு அதிசயித்தவராய் அவளிடமே கேட்கிறார்.

'ஏன் வருஷா வருஷம் பிரயாணம் செய்து பிரயாணத்தில் அலுப்புத் தட்டி விட்டதா? என்று கேட்கிறார்.

"ஆமா வருஷா வருஷம் போனப்பிலேதானே இந்த வருஷமும் போகப் போகிறோம் வருஷம் தவறாமே இப்படி தடிக்கட்டை போல போய் நிற்பதிலே என்ன உற்சாகம் வேண்டியிருக்கு......"

இந்த ஒரே வார்த்தையில் அவன் மனதில் கொந்தளிக்கும் வேதனை வெள்ளம் பெருக்கெடுத்தோடி வந்து விடுகிறது தனக்குக் குழந்தையில்லை என்கிற ஏக்கம் கண்ணீராக மாறி கண்களை மறைக்கிறது

குழந்தையில்லாதவர்கள் இல்லையே என்று ஏங்குகிறார்கள் குழந்தை வேண்டுமென்பதற்காக அந்தக் காலத்திலுள்ளவர்கள் கடவுளுக்குக் கூட லஞ்சம் அளிக்க முன் வந்திருக்கிறார்கள் போயும் போயும் மனிதர்களிடம் தானா லஞ்சம் வாங்க வேண்டுமென்ற அலட்சியத்தில் தானோ என்னவோ கடவுளும் அவர்களைக் கண் பார்க்கவில்லை. பகவான் மனது வைத்து அவர்களுக்கு மட்டும் ஒரு 'பெண் குழந்தையாவது கொடுத்திருந்தால் அதற்குக் கைம்மாறாக வெள்ளிக் குத்து விளக்கோ அல்லது தங்கத் தொட்டிலோ இன்னும் எத்தனையோ சாமான்கள். இத்யாதி வகையறாக்கள் தன் சந்நிதியில் கடாட்சிப்பதைப் பார்த்துக்

கொண்டேயிருக்கலாமல்லவா? கடவுள் கிருபை செய்திருந்தாலல்லவா மனிதர்களும் கிருபை செய்திருப்பார்கள்

கடவுளிடம் வரம் கேட்பதிலேயே தாழ்மையான விண்ணப்பத்துடன்தான் வரம் கேட்டுக்கொள்கிறார்கள் அநேகர்

பணத்தை செலவிட்டு வெகுதூரம் பிரயாசைப்பட்டு வரப் பிரசாதியான பகவான் சந்நிதிக்கோ தேவி சந்நிதிக்கோ வந்து சேருகிறார்கள்

பக்தி சிரத்தையுடன், பட்டப்பட்டினியோ கிடந்து வயிறு காய, இடுப்பில் ஈரத் துணியைச் சுற்றிக்கொண்டு பகவான் சந்நிதியில் வந்து கரம்கூப்பி நிற்கின்றனர்

தாயே பரமேச்வரி கிருபை கூர்ந்து ஒரு பெண் குழந்தையாவது பிச்சையிடம்மா அடுத்த வருஷம் குழந்தையும் கையுமாக உன் சன்னிதிக்கு வரும்படி கிருபை செய்யம்மா என்று வேண்டிக் கொள்கிறாள்.

'பெண் குழந்தையாவது என்று அலட்சியமாக வேண்டிக்கொள்ளும் அந்தத் தாய்க்கு பெண் குழந்தை என்றால் மட்டும் சுலபமாய்க் கிடைத்து விடுமா என்ன?

ஒரு வீட்டில் குழந்தை பிறந்திருக்கிறது என்று வைத்துக்கொள்வோம் வெளியூரிலிருந்து விசாரிக்க வருகிறார்கள், என்ன குழந்தை பிறந்திருக்கிறது? என்று கேட்கிறார் வந்தவர்.

'ஆண் குழந்தை' என்று சொல்லுகிறார் வீட்டிலுள்ளவர். அதைச் சொல்லும்போது. அத்தனை பற்களும் வெளியே தெரிய மலர்ந்த முகத்துடன் பதிலளிக்கிறார். ஆனால் அதே இடத்தில் பிறந்தது பெண்ணாய் இருந்தால்...

'பெண்தான் பிறந்திருக்கிறது என்று முகத்தைத்தொங்கப் போட்டுக்கொண்டு சொல்கிறார்கள் கேட்க வந்தவர்களும் அதே பாவத்துடன் பதிலளிக்கிறார்கள்

ஏதோ இந்தமட்டுமாவது தாய் வேறு, சேய் வேறாக ஆனாகளே அதுவே போதும்' என்று அலட்சியமாகப் பதிலளிக்கிறார்கள்.

'பெண் குழந்தை என்று அலட்சியமாகச் சொல்லுகிறாயே. பெண் என்றால் அப்படி என்ன தாழ்வாகப்போய் விட்டது?' என்று கேட்டால் மற்றவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள் ஆனால் அவரே அத்தனை அலட்சிய மன பாவத்துடனிருக்கும்போது மற்றவரை எப்படிக் கேட்பார்?

இவர்களுக்கு ஏன் பெண் குழந்தை என்றால் அத்தனை அலட்சியம் என்னைக் கேட்டால் யாவருக்குமே முதல் குழந்தை பெண்ணாகத்தான் பிறக்கவேண்டுமென்பேன்.

பெண்ணைப் பெற்றவர்கள்தான் சீக்கிரத்தில் 'சம்பந்தி' ஆக முடியும் நமக்கு முப்பது முப்பத்திரண்டு வயதிற்குள் சம்பந்தியாகிவிடலாம் இன்னும் இரண்டொரு வருஷத்தில் பேரன் பேத்திகளெடுத்துச் சீக்கிரத்தில் பாட்டியாகிவிடலாம் ஆண் பிள்ளை பெற்றவர்கள் அத்தனை எளிதில் பாட்டியாகிவிட முடியுமா? பின்னும் ஐந்தாறு வருஷங்களாவது காத்திருக்கவேண்டும் அதோடு மட்டுமல்ல. பெண் குழந்தைகளைத்தான் வித விதமாய் அலங்கரித்துப் பார்க்கமுடிகிறது. நமது நேரத்தையும் பணத்தையும் பெண் குழந்தைகளால் தான் வீணாக்க முடிகிறது! ஆண் குழந்தைகள் வயது வந்தபின் பணத்தை வீணாக்க இருக்கிறார்கள் அது வேறு விஷயம்.

கண்ணைப் பறிக்கும் அழகழகு துணிகள் நம் வீட்டில் பெண் குழந்தை இருந்தால்தான் போட்டுப் பார்க்க முடிகிறது ஆண் பிள்ளைக்கு அழகான துணிகளில் டிரஸ் பண்ணிவிட்டால் என்னடி பொம்மனாட்டி மாதிரி சிங்காரிச்சு வச்சிருக்கே உன் மகனை என்று நமது தோழிகள் பரிசகிக்கிறார்கள்

இன்னும், பொற்கொள்ளர், நகைக் கடைக்காரன் முதலியவர்கள் பிழைத்துப்போவதும் பெண் குழந்தைகளால் தான் என்பதை மறைக்க முடியுமா?

ஒரு விருந்துக்கு புறப்படுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். ஆண் குழந்தைக்கு ஒரு டிரவுஸரும் சட்டையும் போட்டு கிராப்பை லேசாக வாரிவிட்டால் அத்துடன் முடிந்தது காரியம் வேண்டுமானால் தற்கால நாகரிகப்படி ஸூட்டும் ஹாட்டும் போட்டுக்கொண்டால் அதோடு தீர்ந்துவிட்டது காரியம். ஆனால் பெண் குழந்தைக்கு அப்படியல்லவே

அழகான வாயில் கௌனைப் போட்டு ஜெட்டியும் போடலாமென்று தாய் எண்ணுவாள்

'இதை எதற்காகப் போடுகிறாய் கர்நாடகம் மாதிரி ஸில்க் பைஜாமாவும் சட்டையும் போடு' என்கிறார் தகப்பனார்.

'இதெல்லாம் எதற்கு வெறும் நிஜாரும் பின்னால் பாடியும் போட்டால் போதுமே குழந்தைக்கு ஹிம்ஸை இல்லாதிருக்குமே என்கிறார்கள் பிறர்.

'மற்ற வேளைகளில் போடாவிட்டாலும் விசேஷ வீடுகளுக்குப் போகிற போதாவது பெட்டிக்குள்ளிருக்கும் பட்டுப் பாவாடையும் சட்டையையும் போட்டுக்கொண்டு போகக் கூடாதா?' என்று ஆண்டு நிறைவுக்குத் தைத்ததை நினைவு படுத்துகிறாள் வீட்டில் ஒரு பெரிய மனுஷி இருந்தால்.

டிரஸ் வகையில் தீர்மானம் முடிந்தால்லவா பின்னல் வகையில் தீர்மானம் கொண்டுவரலாம். ரெட்டைப் பின்னலா, அல்லது குஞ்சம் வைத்து ஒற்றைப் பின்னலா அல்லது முன் பக்கம் மட்டும் பின்னி பின்னால் அப்படியே தொங்கவிடவா என்றும் பிரச்னை கிளம்பும். முன் பக்கம் ஒரு பின்னலா இரண்டுபின்னலா... தலையைச் சுருட்டிக்கட்டவா வளைத்துக்கட்டவா...இன்னும் இதுபோன்ற சந்தேகங்கள் எத்தனை எத்தனையோ அது முடிந்தால் அடுத்தது பூ வைக்கும் பிரச்னை அதைத் தொடர்ந்து கிளிப் ஸ்லைட் மாட்டும் பிரச்னை. அதற்கும் அப்பால் பெரிய பிரச்னை நகையணி படலம்.

ஒன்றும் போடாமல் 'ஸிம்பிளாக' அழைத்துச் செல்ல வேண்டுமென்பார் தகப்பனார்.

அப்பொழுதுதான் தோன்றியிருக்கும் புது மாடலில் சொல்லப்போனால் தோன்றியும் தோன்றாமலுமிருக்கும் பொழுதே அந்த மாடலைக் கண்டு பிடித்துப் போட்டுக் கொண்ட பெருமை தன்னைச் சாரவேண்டுமென்று ஆசைப் படுகிறாள் தாய்.

மூலையில் தூங்கிக்கிடக்கும், வங்கி, பாட்லா, கண்ட சரம் இவைகளை சந்தர்ப்பம் கிடைத்த இப்பொழுதாவது போட்டுப் பார்க்கக்கூடாதா என்கிறாள் பாட்டி.

இப்படி எத்தனை பிரச்னைகளைக் கடந்து பெண் குழந்தைகளை அழைத்துக்கொண்டு வெளியே புறப்படவேண்டியிருக்கிறது

பெற்றவர்கள், வயதான பின்னர் ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகளிடம் தான் அதிக இரக்கத்தை எதிர்பார்க்கமுடியும்.

இதை எல்லாத் தாய்மார்களும் அனுபவ மூலமாக அறிந்த உண்மைதான் பெரியவர்களான பின் பெற்றோர்கள்தான் ஆண் குழந்தையை வெறுக்கிறார்களோ அல்லது ஆண் குழந்தைதான் பெற்றோர்களை வெறுக்கிறதோ? மொத்தத்தில் ஒருவரை ஒருவர் வெறுத்துக் கொள்கிறார்கள். ஆனால் பெண் பிள்ளைகள் விஷயத்தில் அப்படியில்லை

நடுத்தரக் குடும்பத்தில் சொத்தெல்லாம் ஆண் பிள்ளைக்கு என்றுதான் பெயரளவில் சொல்லிக் கொள்வார்கள் ஆனால் வைப்பதெல்லாம் கடன்தான் ஆண் பிள்ளைக்கு. பற்றிக்கொண்டு போவதெல்லாம் பெண்கள் தான்.

சக்திமீறி தகப்பனர் செய்வது போதாதென்று தாயார் ரகஸியமாக வைத்திருக்கும் கைப் பணத்தையும் பெண்ணுக்குத்தான் செய்வாளென்றால் அவள் தன் பெண்மீது கொண்டுள்ள அன்புக்கு எது ஈடாகும்?

இப்படியெல்லாம் நடந்தாலும் குழந்தை பிறந்தவுடனே மட்டும் பெண் குழந்தைதான்-என்று சலிப்பாகச் சொல்லிக்கொள்ளும் வழக்கம் மட்டும் இன்னும் நம்மவர்களை விட்டு அகலவில்லை

ஒன்றிரண்டு பிரிவினர்கள்மட்டும் பெண் பிறந்தால் சந்தோஷப்படுகிறவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் ஜாதிக்கட்டில் பிள்ளைவீட்டில் பரிசம் போட்டுக் கல்யாணம் பண்ணிக்கொண்டு போகவேண்டியதாக இருக்கும். ஆகையால் எத்தனை பெண் பிறந்தாலும்கல்யாணத்தைப் பற்றி நமக்குக் கவலையில்லை என்று பெண் பிறப்பதில் அலுத்துக் கொள்வதில்லை

பெண்ணுக்குத்தான் கல்யாணச் செலவு என்றால் ஆண் பிள்ளைக்கும் கல்யாணச் செலவு இல்லையா? பெண்களுக்கு நகையாகச் செய்து போட வேண்டும் ஆண் பிள்ளை கல்யாணத்திற்கு சாமானுகை வாங்கிச் செலவு செய்யவேண்டும். ஆகவே இருவர் வகைக்கும்தான் செலவு செய்ய வேண்டியிருக்கிறது கல்யாணம் மட்டுமல்ல. மற்றெந்த விசேஷத்திலும் அப்படியே.

மகனுக்குக் குழந்தை பிறந்தாலும் சரி, மகளுக்குக் குழந்தை பிறந்தாலும் இரண்டுக்கும் ஏதாவது நகை செய்து போடவேண்டிய முறைதான் உண்டு அதேபோல் இரண்டுவகை பேரன் பேத்திகளுக்கும் ஆண்டு நிறைவு வந்தாலோ, அக்ஷராப்பியாசம் வந்தாலோ மற்றும் எந்த விசேஷம் வந்தாலும் சரி, எந்தக் குழந்தைக்கும் ஒன்று போல்தான் சீர் செய்ய வேண்டியிருக்கிறது அப்படியிருக்க பெண் குழந்தைக்கு மட்டும் அதிகச் செலவு என்கிறார்களே அது ஏன்?

சொல்லப் போனால் ஆண் பிள்ளைகளுக்குத்தான் படிப்பதற்காகச் செலவு செய்வது அதிகம் ஆனால் இந்தக் காலத்தில் பெண்கள் படிப்பிற்கும் அதிகப் பணம் செலவாகிறதாகையால் அதைப்பற்றிப் பேச முடியாது அந்தக் காலத்தில் அப்படியில்லையல்லவா? அதோடு மட்டுமல்ல பெண்களுக்கு ஏதோ நகை போட்டு சீர் வரிசை செய்கிறதோடு சரி பாக்கி இருக்கிற சொத்து சுகமெல்லாம் ஆண் பிள்ளைக்குத்தான்.

பெண்களுக்கும் சொத்துரிமை வந்துவிட்ட இந்த நாளில் இதைப்பற்றி எழுதுவது வீண்தான். இதெல்லாம் எதற்காக வந்ததென்றால் பெண்ணால் இத்தனை சௌகரியங்களிருந்தும் 'பெண் தான்' பிறந்திருக்கிறதென்று ஏன் சலிப்பாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. முன் காலத்திலாவது ஆண் குழந்தை வீட்டிலிருப்பவன். என்றும் பெண் குழந்தை, என்றைக்கிருந்தாலும் அடுத்த வீட்டுக்குப் போகிறவள்தானே என்றும் சலிப்பாக இருந்தார்கள் ஆனால் இந்தக் காலத்திலோ ஆண் குழந்தையும் சரி பெண் குழந்தையும் சரி, இரண்டும் அவர்கள் பக்கத்தில் இருக்கப் போவதில்லை. ஆண் குழந்தையானால் உத்யோகத்திற்காக அயலூர் சென்று விடுகிறார்கள். பெண் பிள்ளையானால் உத்யோகம் பார்க்கும் கணவனுக்காக அயலூர் சென்று விடுகிறார்கள். ஆகவே இரண்டும் ஒன்றுதானே? ஒரே நிலையிலுள்ள இருவர்களில் பெண் பிறந்தால் மட்டும் சலிப்பு, ஏன்?

இப்படிச் சொல்லிக்கொண்டே போனால் பக்கம் பெருகிக்கொண்டே போகும். இவள் ஒரு பெண், அதனால் தான் பெண் குழந்தைகளைப்பற்றிக் கதைக்கிறாள் என்று யாராவது என்னுடன் எதிர்க்கட்சிக்கு வாதாட வந்து விடப் போகிறார்கள் ஆகையால் இத்துடன் நிறுத்திக் கொள்வதுதான் உத்தமம்.

ஒன்று மட்டும் சொல்லுகிறேன் யாருக்காவது பெண் குழந்தை பிறந்தால் உங்களிடம் என்ன குழந்தை என்று கேட்கிறவர்களுக்கு பெண் குழந்தை என்பதைப் பெருமிதத்துடன் தெரிவியுங்கள் அந்த விஷயத்திலாவது பெண்களின் சிறுமை மங்கி பெண் குலத்தின் பெருமை ஓங்கி வளரட்டும்!

23

வீரருள் ஒரு வீரன்!

★

மன உறுதியிலிருந்து பிறப்பதே வீரம் நிலைபெற்ற உற்சாகமே வீரத்தை வளர்க்கும் செவிலித் தாய். தொல்காப்பியர் ஆதிகாலத்திலேயே வீரரஸத்தைப்பற்றி நன்றாக விளக்கியிருக்கிறார் கல்வி, இசை, தறுகண், கொடை என்ற நான்கின் காரணமாக வீரம் பிறக்கும் என்று அவர் சொல்கிறார்,

கல்வி வீரம்:—சிறந்த வித்தைகளில் மேன்மையை அடைந்து தவச் செல்வத்தால் பிரகாசித்தல்

இசை வீரம்:—எல்லையில்லாத பொருளும். அளவில்லாத இன்பமும் தருவதாயிருந்தாலும், பழியோடு வரும் காரியங்களைச் செய்யாமல் புகழைப் பின்பற்றிய செயல்களையே செய்தல்

தறுகண் வீரம்:—அஞ்சாத ஆண்மையுடன் வாழ்வை நடத்திப் பகைவர்க்குப் பணியாது எதிர்த்து வென்று புகழ்பெறுதல்

கொடை வீரம்:—உயிர், உடம்பு, உறுப்பு பொருள் எல்லாவற்றையும் மற்றவர்க்கு அளிக்கத் தயங்காத உறுதியைப் பெறுதல்

இவ்வாறு தொல்காப்பியர் கூறியுள்ள இந்த நால்வகை வீரமும் எளிதிற் பெறக்கூடியவையல்ல என்பது தெளிவு அதனால்தான் மகத்தான சக்தியை வீரம் தன்னிலே கொண்டு பிரகாசிக்கிறது

இக்கட்டுரை கொடை வீரத்தையே சித்தரிக்க எழுதப்படுகிறது கொடை வீரர்கள் பலர் நம் தமிழ் நாட்டில் இருந்திருக்கிறார்கள் கடையெழுவள்ளல்கள் என்று வண்மை வளர்த்தவர்களை ஒரு வரையறைப்படுத்தியும் இருக்கிறார்கள் அறிஞர்கள் இவர்களுள் சேர்க்கப்படாதவனும், இவர்களைப்போலவே தலைசிறந்த வள்ளலாக இருந்தவனும் ஆன ஒருவனையே இக் கட்டுரை விளக்க வருகிறது

முதிர மலை என்பது தமிழ் நாட்டின் பழம் பெரு மலைகளுள் ஒன்று. அதைக் 'குதிரை மலை' என்றும் வழங்குவதுண்டு அப்பகுதியை முன்காலத்தில் குமணன் என்ற பெயருடைய மன்னன் ஆண்டு வந்தான். அவன் தன்னை நாடி வந்தவர் அனைவருக்கும் பொன்னையும் பொருளையும் அள்ளியளித்து வருவதையே தன் தொழிலாகக்கொண்டிருந்தான்,

அவனுடைய அரண்மனையை அடைந்து அவனது புகழை வளர்க்காத புலவர்களோ, பாணர்களோ. விறலியர்களோ இல்லை யென்றே சொல்லலாம், 'இல்லை' என்ற குரலே இல்லாதிருக்க வேண்டுமென்ற பெரு நோக்கத்துடன்தான் மன்னன் அந் நாட்டை ஆண்டுகொண்டிருந்தான்.

'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்பார்கள் அதேபோல் குமணனுக்கு உடன் பிறந்த ஒருவன், அவனுடைய வண்மைக் குணத்தின் பரம வைரியாக விளங்கினன் மூத்த குமணன் என்றும் இளங்குமணன் என்றும் அவர்கள் அழைக்கப்படுவார்கள் மூத்தவனுக்கு இளையவன் எல்லாத் துறைகளிலுமே விரோதிதான் அப்படியிருந்தும் குமணன் தன் தம்பியைத் திருத்திவிடலாம் என்றுதான் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தான் ஆனால், அது இடித்து தூள் தூள்களாகப் போய்விடும் என்று அவன் கனவிலும் கருதவில்லை

குமணனின் கொடையால் அரண்மனையின் பொக்கிஷம் அழிந்துவிடுகிறதே என்ற ஆத்திரம் தம்பியின் மனதில் வேர் விட்டுச் செடியாகி, மரமாகவும் வளர்ந்திருந்தது அது பூத்துக் காய்த்துக் கனி குலுங்கவும் தவறவில்லை. ஆத்திரம் என்ற விதையின் நச்சுக் கனிகளாகையால் அவைகள் குமணனைக் கொன்றுவிடத் தருணம் பார்த்துக்கொண்டிருந்தன

அண்ணனைப் பல சூழ்ச்சிகளால் வென்றுவிடப் பார்த்தான் அத் தம்பி ஆனால் அவை கொஞ்சமும் பலிக்கவில்லை எப்படியேனும் குமணனை நாட்டிலிருந்தே துரத்தி விட வேண்டும் என்ற விஷ நினைப்பு நாளுக்குநாள் பூதவடிவாய் அவன் முன்பு வளர்ந்து வந்தது.

இப்படியிருக்கையில் ஒரு நாள் அண்ணனுடன் அவன் உட்கார்ந்து கொண்டிருந்தான் அப்பொழுது ஒரு புலவர் அங்கே தளர்ந்த நடையுடன் வந்து நின்றார் குமணன் அப்புலவரைக் கண்டு, அவர் நிலையை உணர்ந்து வருந்தினன் தக்க ஆசனம் தந்து அவரை அமர்த்தி பின் அவர் நிலையை அறிய ஆவல் கொண்டான் புலவரோ தன் நிலையை ஆவலுடன் கேட்க முற்பட்ட மன்னனைக் கண்டு ஆர்வத்துடன் கூறத்தொடங்கினர். குமணன் அவர் பேச்சைக் கேட்க ஆர்வம் காட்டியபோது இளங்குமணனுக்கு மனம் எரிந்தது. அதே சமயத்தில் அந்த அண்ணனையும், புலவரையும் கொன்றுவிடலாமா என்றுகூட அவன் நினைத்துக்கொண்டிருந்தான்.

புலவர் குமணனிடம் கூறினர்: "மன்னா! பாடிப் பரிசு பெறும் பாவலர் கூட்டத்தில் நானும் ஒருவன்! பறம்பு மலை நாட்டை ஆண்ட பாரியும் கொல்லி மலையின் தலைவனை ஓரியும், காரி என்னும் குதிரையைச் செலுத்தும் மலையனும் குதிரை மலை மன்னன் அதிகமானும், பேகனும், ஆய் அண்டிரனும், நள்ளியும் ஆகிய கடையெழு வள்ளல்களும் காலமாகிவிட்டபடியால், பாவலர்களுக்கே பஞ்சமேற்பட்டுவிட்டது நான் ஒருவன் மாத்திரம் நீயொருவன் இருக்கிறாய் என்று எண்ணி உன்னை

அடைந்தேன்'' என்று புலவர் கூறவே, குமணன் அதைக் கூர்ந்து கேட்டான். இளங்குமணனோ, "அந்தக் கடையெழு வள்ளல்கள் சாதாரண பைத்தியக்காரர்கள் என் தமயனோ பழுத்த பைத்தியக்காரன்" என்று தனக்குள் கூறிக்கொண்டு புலவரின் பேச்சுக்களில் அசிரத்தையைக் காட்டினான். அப்பொழுது புலவர் பேச்சைத் தொடர்ந்தார்: "குமணா! என்னுடைய வீடு உணவின்றி வற்றியிருக்கிறது. என் புதல்வன் அடுக்களையினுள் புகுந்து பாத்திரம் ஒவ்வொன்றையும் திறந்து பார்த்து ஏமாற்றம் உறுவதை என் கண்கொண்டு பார்க்க முடியவில்லை என் மனைவியோ புதல்வனைத் தூக்கியெடுத்துக்கொண்டு, அவன் அழுகையைச் சமாதானப் படுத்துவதற்காகப் புலியைக் காட்டிப் பயமுறுத்திப் பார்க்கிறாள். சந்திரனைக் காட்டித் தேற்றுகிறாள். இவ்வாறான துன்பங்கள் நீங்கிச் செல்வத்தால் பொலிவுபெறும் நாள் இன்றிலிருந்து பிறந்துவிட்டது என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது! குமணனை அடைந்தபின் குறையும் இராது அல்லவா?'' என்றார்.

புலவரின் முகபாவங்களையும் அவரது பேச்சுமுறையையும் உணர்ந்த குமணன், மிகவும் பரிதாபம் கொண்டான் நாவேந்தராகிய அவருக்கு இத்தகைய நிலை ஏற்பட்டதே என்ற கவலை அவனைப் பெரிதும் உருக்கியது முதலில் அவருக்கு உணவளித்துப் பின்பு பொன்னும், மணியும், உடையும், பொருளும் ஏராளமாக அளித்தான் அவர் ஏறிச் செல்வதற்காக யானை ஒன்றையும் அவன் அளிக்கத் தவறவில்லை இளங்குமணன் தன் உள்ளங் குமுறினானாயினும், செய்கையில் ஒன்றையும் காட்ட முடியாதவனாய் தவித்தான். புலவரோ ஆனந்த வெள்ளத்தில் நீந்தியவராய்த் தம் ஊரை அடைந்தார்.

இல்லத்தை அவர் அடைந்தவுடனே மனைவியும் மகனும் அவர் நிலையுயர்ந்ததைக் கண்ணாரக்கண்டு மகிழ்ந்தார்கள் வறுமை வாஸஞ்செய்த மனையில் அன்றுமுதல் செல்வம் பொலியத் தொடங்கியது இங்கே ஒரு சுவாரஸ்யமான சம்பவமும் நடந்தது அதுவே புலவரின் பெருமைக்குஅளவுகோலாகவும் அமையக் கூடியதாகும்.

புலவர் தம் மனைவியிடம் பொருள்கள் எல்லாவற்றையும் கொடுத்து, 'நீ இப்பொருள்களை உன் இஷ்டம் போல் செலவிடலாம் உன்னை விரும்பும் மகளிருக்கும், நீ விரும்பும் மகளிருக்கும், உன் சுற்றத்தார்க்கும் ஏராளமாய்க் கொடு; இன்னும் எவர் கேட்டாலும் பொருளைக் கொடுக்கப் பின் வாங்காதே! 'நாமே இப்பொருளை வைத்துக்கொண்டு வாழலாமே' என்று நினைக்காமல் தானம் செய் என்னைக் கேட்டுத்தான் கொடுக்கவேண்டும் என்றும் வைத்துக்கொள்ளாதே குமணன் எனக்குக் கொடுத்த பொருளை நான் உனக்குக் கொடுத்தேன். நீ அதை அனைவர்க்கும் கொடு! என்று புலவர் வண்மைப் பயிரை வளர்த்த விதம் சாமானியமான புகழுடையதாகுமா! அவர் வாங்கியதோ பரிசு! ஆனால் அவர் வழங்குவதும் பரிசு! எத்தகைய மனவுறுதியும், பெருங்குணமும் அவரிடம் நிலவின என்பதை நம்மால் அளவிட்டுக் கூறத்தான் முடியுமா? இன்று இந்தப் பொருள் செலவாகிவிட்டால், நாளை என்ன செய்வது என்ற யோசனை அவருக்குச் சிறிதுமே இல்லாமல் போய்விட்டது! நாளைக்குத் திரும்பவும் வள்ளல்களைத் தேடிச் செல்ல அவர் தயங்கினால்தானே, இன்று பொருள் செலவாகி விடுவதைப்பற்றி அவர் சிந்திக்கவேண்டும்! ஆகையால், இதுவே அவருடைய அருங்குணங்களின் சிகரமாகத் திகழ்கிறது அவர்தான் பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் ஆவார்.

* * *

மேலே மூன்று வகைப்பட்ட மனிதர்களைப்பற்றித் தெரிந்துகொண்டோம். ஒருவன் வரையாது பொருள் ஈயும் வள்ளல். அவனே குமணன். மற்றவன் கொடையின் சத்துரு; அவனே இளங்குமணன், இன்னொருவரோ புலவர் பரிசு பெற்றதையே பரிசாக அளித்துவிடக்கூடிய மனப்பக்குவம் பெற்றவர்; உறுதியுடையவர் இனி குமணனின் வண்மைக்குச் சிகரமான வரலாறு ஒன்றையும் நாம் அறியவேண்டும் குமணனின் கொடைவீரம் அவ்வரலாற்றிலேயே வெளியாகவும் செய்கிறது.

இளங்குமணன் நாளடைவில் தன் தீய எண்ணங்களில் பழுத்தான். குமணனுக்குப் பல வகையிலும் தீமைகளைச் செய்தான். கடைசியில் குமணன் காட்டுக்குச் சென்று மறைந்து வாழும்படியாகவும், இளங்குமணனே நாட்டையாளும்படியாகவும் நேர்ந்து விட்டது அறத்தைப் பிடர் பிடித்துத் தள்ளிவிட்டு மறமே ஆண்டாற்போல் இருந்தது.

எப்பொழுதுமே பாவத்திற்கு பலம் அதிகம் அந்தப் பாவ சக்தி புண்ணிய சக்தியை விரட்டிவிடுவதிலும் வியப்பில்லை. ஆனால். கடைசியில் புண்ணிய சக்தியே வெற்றிபெறும் என்பதிலும் ஐயமில்லை இதில்தான் விதியின் இரகசிய ஆட்சி விநோதமாக நடைபெற்று வருகிறது!

காட்டிலே குமணன் மிகவும் துயரமான நிலையிலே சங்கடப்பட்டுக்கொண்டிருந்தான். காய், கனி, கிழங்குகளே அவனுக்கு அங்கு ஆகாரப் பொருள்களாகஅமைந்தன. அவன் சிங்காதனத்தில் வீற்றிருந்து செங்கோல் செலுத்தவேண்டியவன்! ஆனால் விதி யாரைவிட்டது!

அப்பொழுது குமணன் செவியில் ஒரு செய்தி எட்டியது அவனுடைய தம்பி ஒரு கோரமான செய்தியைப் பறையறைந்திருந்தான் அதாவது, குமணனின் தலையைக் கொண்டுவருபவருக்கு ஏராளமாகப் பொன்னும் பொருளும் அவன் தர நினைக்கிறான் என்பதே. அச்செய்தி முதலில் குமணனைக் கலக்கியபோதிலும்பின்பு விரைவில் மனந்தேறியவனாய், அக்காட்டிலேயே மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கலானான்.

அக்காலத்தில் பெருந்தலைச் சாத்தனார் என்ற பெயருடைய புலவர் ஒருவர் இருந்தார். அவர் ஆவூர் மூலங்கிழார் என்பவருடைய மகன் ஆவார். தந்தையே இவருக்குக் குரு ஸ்தானம் வகித்தபடியால். அளவில்லாத கல்வி கேள்விகளால் பொலிவுபெற்றார் இவர், தொழில் ஒன்றுமே செய்யாது. கல்வி கற்பதிலேயே காலத்தைக் கடத்தியபடியால், இவருடைய பூர்விகச் சொத்துக்கள் எல்லாம் அழிந்தன வறுமை வளையவந்தது அதனை ஒழிக்க நினைத்த சாத்தனாரின் மனக்கண்ணிலே குமணன் தோன்றினான். உடனே அவர் குமணனின் நாட்டை அடைந்தார் அங்கே தலைவிரித்தாடிய இளங்குமணனின் அதிகார வெறியும் அக்கிரமச் செயலும் சாத்தனாரின் உள்ளத்தை மிகவும் கலங்கச் செய்தன பிறகு அங்கே குமணன் இல்லையென்பதையும், அவன் காட்டுக்குச் சென்றுவிட்டான் என்பதையும் கேள்வி மூலமாய்த் தெரிந்துகொண்டார், உடனே அந்த வனப்பிரதேசத்திற்குச் சென்றும் விட்டார். வண்மை வழங்கும் வீரர்கள் வனத்தில் இருந்தாலும் அல்லது வேறு எங்கேயிருந்தாலும் பாவலர்கள் அவரையே அடைவார்கள் என்பது இப்புலவர் செய்கையால் ஊர்ஜிதமாகிவிட்டது!

குமணனைக் கண்டதும் சாத்தனார் தம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார் 'மன்னா! வனத்திலே கரந்துறையும் உன்னை வருத்துகிறேன் நான் என்னை மன்னித்துவிடு பாணர்களுக்கும் புலவர், கூத்தர் ஆகியோர்களுக்கும் ஏற்படும் வறுமைத் துன்பத்தைப் போக்கும் பண்பமைந்த வள்ளலே! என் வீட்டில் சோறு சமைத்துப் பல நாட்கள் ஆகிவிட்டபடியால், அடுப்பில் காளான் பூத்துக் கிடக்கும் கோலம் பார்க்க முடியாததாகும் என் மனைவியோ உணவின்றி மெலிந்தாள் அவளுடைய வற்றியுலர்ந்த வாழ்வையே காணும் துன்பத்தை உடையவனாயிருக்கிறேன், அவளிடத்துப் பால் பருகும் குழந்தைக்கோ அதுகிடைப்பதில்லை. வறிதே

அவள் மார்பைச் சுவைத்து, அவள் முகத்தை நோக்கி அழுகிறது. என்ன பரிதாபம் இது! குழந்தையின் துக்கத்தைக் கண்ட தாய், என் முகத்தை நோக்கினுள். நான் உன் முகத்தை நோக்கி வந்திருக்கிறேன். ஆரணியத்தை அடைந்தபோதிலும் உன்னைப் பின்பற்றியிருக்கிறேன் ஆவன செய்வாயாக!'' என்ருர்.

அப்புலவரின் வறுமை எல்லை மீறிய துன்பத்தை அவருக்குத் தந்திருக்கிறது என்பதை அறிந்தான் குமணன். 'காட்டிலே தான் இருக்கும்போது அப்புலவர் பெருமான் வந்தாரே, என்று அவனுக்குத் தோன்றியது அவன் கூறினுன். ''புலவரே! அறிவின் எல்லையை அடைந்த பெரியவரே! அந்த நாளில் தாங்கள் வரவில்லையே! வனவாசம் செய்யும் இந்நாளில் வந்தீர்களே! என்ன சோதனை இது? நான் இக்காட்டில் வாழ்வதைவிட இன்னும் அதிகமான துன்பத்தை நீங்கள் அனுபவிக்கிறீர்கள்! என்னைக் கண்ட பிறகும் வெறுங் கையோடு தாங்கள் செல்வீர்களானுல், அதைவிடத் துன்பம் வேறில்லை. தாங்கள் எப்படியும் பொருள் பெற வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும் அதுவே என் கடமை. அதனுல்தான் நான் இன்னது செய்யலாம் என்று யோசனையில் ஆழ்ந்திருக்கிறேன்'' என்ருன்.

புலவர் மிகுந்த ஆவலுடன் 'என்ன?' என்ருர். 'கவிச் செல்வரே! என் அருமைத் தம்பி என் தலையைக் கொண்டு வருகிறவர்களுக்கு ஏராளமான பொன்னைத் தருவதாக வாக்களித்திருக்கிருன், பறையறைந்தும் இருக்கிருன் ஆகையால், தாங்கள் இதோ இந்த வாளை ஏந்தி, என் தலையைக் கொய்துகொண்டு போய், அவனிடம் பொன்னைப் பெறுங்கள்' என்ருன் குமணன் அவன் அவ்வாறு சொல்லும்போது அவனது முகத்தில் விளங்கிய ஆண்மையின் பொலிவைக் கண்டார்புலவர். அவனுடைய அன்பையும், பரிவையும் நினைத்த மாத்திரத்தில் கண்ணீர் ஆருகப் பெருகியது. அந்த வாளை உடனேயே வாங்கிக்கொண்டார். 'இனி அந்த வாள் அவன் கையில் இருப்பதே கூடாது இருந்தால், தன் தலையைத் தானே வெட்டிக் கொடுத்துவிடுவான் என்ற பயத்தால் அதை முதலில் தம் கையில் வாங்கிக் கொண்டவர், 'இவன் அல்லவா வள்ளல்! இவனுடைய வாழ்வும் இப்படிக் கெடுவதா? எப்படியும் இவனை ஒப்பற்ற சிங்காதனத்தில் அமர்த்துவதற்கு இயன்றவரை முயற்சி செய்யவேண்டும்' என்று கருதினுர் பின்பு குமணன் அளித்த வாளுடன் இளங் குமணனிடம் சென்ருர்.

சாத்தனுர் கையில் வாளைக் கண்ட இளங் குமணன். 'இவரால் நம் எண்ணம் நிறைவேறிவிடும்போலிருக்கிறது புலவர்களுக்குப் பரிசுகளை வாரி இறைத்தவனுக்குப் புலவர் ஒருவராலேயே கொலை நடக்கப் போவது மிகவும் பொருத்தம்தான் என்று பூரித்துப் புலவரை வரவேற்ருன். புலவர் அவனை நன்கு புரிந்துகொண்டவர். ஆகவே. அவனுடன் பேசினுர். ''இளங்குமணு! அழியாத வரம் பெற விரும்பிய மன்னர்கள் பலர் தம் புகழை நிலைநிறுத்தி மாய்ந்தார்கள். வேறு பலர் இரப்பவர்களுக்கு ஒன்றும் ஈயாமையால் புகழும் இன்றி வாழ்வும் அற்றுப்போய் மாய்ந்தார்கள்; மன்னு! நீ ஒரு கொடிய செயலைச் செய்துவிட்டாய்! உனக்குப் புகழ் விருப்பம் இல்லையா? உன் தமயன் சிறந்த புகழ் படைத்தவன்; அவனைக் காட்டிற்கு அனுப்பினுயே! இது தகுமா? நான் அவனிடம் சென்றேன் என்னை வெறுங்கையோடு அனுப்ப அவ்வேந்தன் விரும்பவில்லை பரிசுகொடுக்கவே அவன் விரும்பினுன். அந்த வனத்தில் அவனுக்குப் பொருள் ஏதும் அகப்படவில்லை ஆகையால். தன் தலையை வெட்டிக் கொண்டு போகும்படி வாளைக்கொடுத்தான் இத்தகைய உயர்ந்த செயலால் அவன் கடையெழு வள்ளல்களுக்கும் தலைமை பெற்ருன் அத்தகைய உன் அண்ணனைக் கண்டபின், உன்னையும் காணவந்தேன்' என்ருர்.

புலவர் அவ்வாறு கூறியபோது, அவருடைய சொல்லின் இனிமையும், வேகமும் இளங்குமணனின் இதயம் உருகச் செய்தன அவன் கண்கள் முதன் முதலாக அப்பொழுதே நீரைப் பெருக்கின. தன் ஆசனத்திலிருந்து ஏனே கீழ் இறங்கினுன். புலவரை அவன துகைகள் தழுவிக்கொண்டன'' அறிவின் செல்வரே! என் தமயன் இப்பொழுது எங்கிருக்கிருர்? நான் செய்த குற்றத்தை இப்பொழுதே உணர்கிறேன் தமயனைத் தாங்கள் கண்ட இடம் யாது? நான் உம்முடன் வந்து, அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்' என்ருன் புலவருக்கோ மிகவும் ஆனந்தம் மேலிட்டது.

அதன்பிறகு இளங்குமணன் புல[வ]ருடன் சென்று, குமணனை அழைத்[து] வந்து வணங்கிப் பணிந்து, மன்னி[ப்]புக் கேட்டுக்கொண்டான் குமண[ன்] அதைச் சிறிதும் எதிர்பார்த்தவ[ன்] இல்லையாதலால், தம்பியையும், பு[ல]வரையும் பெரிதும் பாராட்டினுன்.

திரும்பவும் சிங்காதனத்தில் ஏறி[ய] குமணன் தன் அருமைத் தம்பியுட[ன்] நீண்ட காலம் அரசாண்டான் சாத்[த]னுரின் வறுமையும் இருந்தவிட[ம்] தெரியாமல் மறைந்தது பெரி[ய]தொரு சாதனையைச் செய்[த] பூரிப்பு புலவரிடம் தோன்றிய[து].

* * * *

வீரத்துள் வீரம் 'கொடை வீரம்' என்பது குமணன் செய்கையா[ல்] நமக்கு நன்கு விளங்குகிறது அல்லவா? தன் இக்கட்டான நிலையை அநாயாசமாகச் சமாளித்துத் தன் தலையையே அறுத்துச் செல்லுமாறு புலவருக்கு வாள் கொடுத்த அவ்வேந்தன், வீரருள் ஒரு வீரன் தான் அல்லவா? அவன் சரித்திரம் நினைக்க நினைக்கப் பேரானந்தத்தையும், மன உறுதியையும் அளிப்பதில் தான் தடையேது?



91

இரு வேறு மார்க்கங்கள்

★

உயிர்கள் விரும்பத்தக்க பலன்கள் பலவாயிருந்தபோதிலும் வாசுதேவனை (பிரும்மத்தை) அடைவதே சிறந்த பலனுகும் வாசுதேவன் பக்திக்கு எளியனுய் இருப்பதால் இந்திரியங்களுக்கு வசப்படாமல் மனதை ஒரு நிலைப்படுத்தித் தைல தாரை போல் பகவானை இடைவிடாமல் தியானம் செய்து பெறலாம். அவ்வாறு பெற்றவர்கள் பிறவி எடுக்க மாட்டார்கள்.

பிற பலன்களில் விருப்பங்கொண்டு அவற்றைப் பெறச் சாதனங்களை அனுஷ்டிப்போர் கோரிய பலனைப் பெறுவர் அப் பலன் அற்பகாலமே நீடிக்குமாதலால் அதனைப் பெற்றவர் மறுபடியும் துன்பத்திற்கிடமாகிய பிறவியை மீண்டும் அடைவர்.

பிறவியை ஒழிக்கும் மோக்ஷ பலனை அடையப் போகும் உயிர்களுக்கு மரண காலத்தில் பகவானின் நினைவு உண்டாகும் 'பிற பலன்களை அடையப்போகும் உயிர்களுக்கு மரண காலத்தில், தக்க சாதனுனுஷ்டானம் முன்னமே இல்லாததால், பகவானின் நினைவு உண்டாவதில்லை' என்று முன்னே கண்ணன் சொன்னுரல்லவா?

இப்பொழுது 'பிறப்பை அடியோடு நீக்கிக் கொண்டவர் மரணமடைந்ததும் எவ் வழியாகச் செல்கிருர்கள்? பிறர் எவ் வழிச் செல்கிருர்கள்? இரு வேறு மார்க்கங்களிலும் உள்ள தேவதைகள் யாவர்? என்பதைச் சொல்லுகிருர்,

யாது வழி செல்லுங்கால்
யோகியர்கள் மீளார்கள்
யாது செல்லுங் கான்மீள்வர்
இவ்வுலகின்—மீதமைந்த
அவ்வழிகள் தாமிரண்டு
மாங்குனக்குச் சொல்லுகேன்
இவ்வழியில் கேளா யிது.

(இ—ள்) யோகியர்கள்-யோகிகளில், யாது வழி செல்லுங்கால் மீள்வர்—(சுவர்க்க இன்பத்தைக் கோரிய புண்ணியவான்கள்) எந்த மார்க்கமாய்ச் சென்ருல் திரும்புகின்ருர்களோ, யாது வழி செல்லுங்கால் மீளார்கள்—(பரம கதியை விரும்பியவர்) எந்த மார்க்கமாய்ச் சென்ருல் திரும்ப மாட்டார்களோ, இ உலகின் மீது அமைந்த—இவ்வுலகில் பொருந்திய, அ வழிகள் தாம் இரண்டும்—அவ்வழிகள் இரண்டையும், உனக்கு சொல்லுகேன்—உனக்குத் தெரிவிக்கிறேன், இ வழியில் இது கேளாய்—இவ்விதம் சொல்லப்படும் இவ்விவரத்தைக் கேட்பாயாக.

''ட்ராம் சத்தம் முன்னைவிட அதிகமாயிடுத்தாமே''

''சர்தான்! இனிமே காதுலே பஞ்சு அடைச்சுகிட்டுத்தான் ரோடுலே நடக்கணும் போலேருக்கு''!

யத்ரகாலே த்வநாவ்ருத்திம்
ஆவ்ருத்திம் சைவ யோகிந:[3]
ப்ரயாதா யாந்தி தம் காலம்
லக்ஷ்யாமி[4] பரதர்ஷப[4]

(இ-ள்) பரதர்ஷப—பரதவமிசத்தில் சிறந்தோனே! யத்ர காலே-எந்தக் காலத்தில், ப்ரயாதா:—சென்ற (மரணமடைந்து, யோகி ந:—யோகிகள், அநாவ்ருத்திம்—திரும்பாமையையும் (ஜந்மமில்லாமையையும்), ஆவ்ருத்திம்—திரும்புதலையும் (பிறப்பையும்) யாந்தி—(முறையே) அடைகின்றனரோ, தம் காலம்—அந்தக் காலம்-அந்தக் காலத்தை வக்ஷ்யாமி-சொல்லுகிறேன்.

'யோகிந:' என்பதற்கு ஞானயோகிகளும் கர்மயோகிகளும் என்பது சங்கரர் கொண்ட பொருள் முக்தியை அடைபவர்கள் மரணமடையும் காலம், சுவர்க்க இன்பம் எய்தி மீளப் போகின்றவர் மரணமடையும் காலத்திலிருந்து வேறுபட்டிருக்கும். இருவரும் வெவ்வேறு காலத்தில் மரணமடைகின்றனர். மரணமடையும் காலத்திற்கும், சிலர் பிறவியை எடுப்பதற்கும் எடுக்காமைக்கும் சம்பந்தம் உண்டு என்பது இச்சுலோகத்தில் வெளியாகிறது.

காலம் என்பது அக்காலத்திற்குரிய காலாபிமான தேவதையையும் குறிக்கும் அக்காலத்தில் உடலைவிட்டுப் பிரிந்த உயிர்கள் செல்லும் மார்க்கத்தையும் குறிக்கும் அம்மார்க்கத்தின் ஒரு பகுதி காலாபிமான தேவதை

டேய் சீனு. சும்மா பாக்கு திங்கறயாமே. வெறும் பாக்கு தின்னுதேடா, உடம்புக்கு ஆகாது.''

"அப்படின்னு இனிமே வெத்தலே பாக்கு போட்டுக்கறேன், அப்பா!"

யின் ஆதீனத்திலும் பிறபகுதிகள் மற்றதேவதைகளின் அதீனத்திலும் இருக்கின்றன, உயிர்கள் செல்லும் மார்க்கத்தையும் மார்க்கத்திலுள்ள தேவதைகளேயும் அடுத்து வரும் சுலோகங்களில் குறித்திருப்பதால் இச்சுலோகத்தில் 'யத்ர காலே' என்ற தொடரிலிருக்கும் கால சப்தத்திற்கு 'மார்க்கம்' என்று பொருள் செய்திருக்கின்றனர் சிலர். அதைத் தழுவி, கீதை வெண்பா ஆசிரியரான ...தி கேசரி 'யாது வழி' என்று மொழி பெயர்த்திருக்கின்றுரே என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. உயிர்கள் செல்லும் மார்க்கம் பகல் தொடங்கி ஸம்வத்ஸரம் (ஆண்டு) வரையிலுள்ள காலாபிமானி தேவதைகளால் நிறைந்திருப்பதால் 'மார்க்கத்தை' கால சப்தம் குறித்ததாகக் கொள்வது தவருகாது

திரும்பி வராத உயிர்கள் செல்லும் மார்க்கம் முன்னதாகச் சொல்லப்படுபடுறது.

அங்கிபகன் முற்பக்கம்
ஆங்கு வடவயனந்
தங்கிமிசை ஏகியே
தாமணேவர்—சங்கையற
மன்னும் பிரமத்தை
வாய்ந்ததனைத் தம்முணர்வால்
உன்னும் மனத்தவர்கள் உற்று

(இ-ள்) சங்கை அற-சந்தேகமில்லாமல், அதனை அதற் உணர்வால் உற்று உன்னும் மனத்தவர்கள்—அப்பிரும்மத்தை அறிவினுல் உணர்ந்து நினேக்கும் மனம் படைத்தவர்கள் (தியானம் செய்வோர்), அங்கி-அக்கினி. பகல், முன் பக்கம்-சுக்கில பக்ஷம், வட அயனம்-(ஆறு மாதங்களான) உத்தராயணம். தங்கிமிசை-இக் காலங்களிலிருந்து ஏகி-(மரண மடைந்து) சென்று, மன்னும்-நிலேயான, பிரமத்தை-பரம் பொருளே, வாய்ந்ததாம் அணேவர்-அவர்கள் நன்கு அடைவார்கள்.

அக்னிர் ஜ்யோதி ரஹச் சுக்ல
ஷ்ஷாண்மாஸா உத்தராயணம்
3 2
தத்ர ப்ரயாதா கச்சந்தி
3 3 3
ப்ரஹ்ம ப்ரஹ்ம விதோ ஜநா:

(இ-ள்) அக்நி:-அக்கினி, ஜ்யோதி:-ஜோதி, அஹ:-பகல், சுக்ல:-சுக்ல பக்ஷம், ஷாண் மாஸா:-ஆறு மாதங்களான, உத்தராயணம், தத்ர-இதில், ப்ரயாதா:-மரணமடைந்த, ப்ரஹ்மவித:-பிரும்மத்தை யறிந்த ஜநா:-ஜனங்கள். ப்ரம்ம-பிரும்மத்தை, கச்சந்தி-அடைகின்ருர்கள்.

வாழ்விலே பிரும்மத்யானம் செய்து பழகியவர்கள் மரணமடைந்ததும் அக்கினி அபிமானி தேவதை பிரகாசத்திற்கு அபிமானி தேவதை, பகல் காலத்திற்கு அபிமானி தேவதை, சுக்கில பக்ஷத்திற்கு அபிமானி தேவதை. உத்தராயணத்திற்கு அபிமானி தேவதை ஆகிய அந்தந்தத் தேவதைகளது உலகங்களின் மார்க்கமாய்ச் சென்று பிறகு பிரும்மத்தை அடைகிருர்கள் என்றும் இதுவே வேதத்தில் 'முக்தி பெறுவோன் செல்லும் அர்ச்சிராதி மார்க்கம்' எனப்படுகிறதுஎன்றும் சிலர் கூறுவர். திருமழிசைப் பிரான் திருச்சந்த விருத்கத்தில் குறிக்கும் பின்வரும் பாடல் இம்மார்க்கத்தையே குறிப்பதாகத் தோன்றுகிறது.

சண்டமண்ட லத்தினூடு
சென்றுவீடு பெற்றுமேல்
கண்டுவிடி லாதகாத
லின்பநாளும் எய்துவீர்

அடுத்தபடியாக இரண்டாவது மார்க்கம் சொல்லப்படுகிறது

தூமம்இராப் பிற்பக்கம்
சோராமற் றென்னயன
மாமதன்மேல் சந்திரனே
ஆங்கணேந்த—போமவன்ருன்
நல்வினேயில் சேர்பயனு
நாடணேந்து மீளுமே
அல்வினேயின் சார்பால் மறிந்து

(இ—ள்) தூமம்—புகை, இரா-இரவு, பின்பக்கம் கிருஷ்ணபக்ஷம், சோரா—குறையாத தென் அயனம்—தக்ஷிணுயணம், ஆம் அதன் மேல் ஆகின்ற வற்றில், போம் அவ... தான்—போகின்ற (மரண ம... கின்ற) புண்ணிய கருமம் செய்தவ... நல்வினேயில் சேர்பயனுல்—நற்கரு... புண்ணிய காரணமாக, சந்திர... அணேந்த—சந்திரனது ஜோதியை... பெற்ற. நாடு அணேந்து—நாட்டை... சேர்ந்து அல் வினேயில் சார்பால்—பாபத்தின் சேர்க்கையால், மறிந்து... மீளும்—மறுபடி பிறவி எடுத்... இவ்வுலகத்திற்கு வருவான்.

4 2
தூமோ ராத்ரி ஸ்ததா க்ருஷ்...
3
ஷ்ஷாண்மாஸா தக்ஷிணுயநம்
3
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர்
3
யோகீ ப்ராப்ய நிவர்ததே

(இ-ள்) தூம:—புகை, ராத்ரி:—இரவு. ததா—அப்படியே, க்ருஷ்ண—கிருஷ்ணபக்ஷம், ஷாண்மாஸா:—ஆறு மாதங்களான, தக்ஷிணுயநம்—தக்ஷிணுயநம். தத்ர—இதில், யோகீ—யோகியானவன், சாந்த்ரமஸம்-சந்திர ஸம்பந்தியான ஜ்யோதி:-சோதியை, ப்ராப்ய-அடைந்து, நிவர்(த்)ததே—திரும்புகிருன்:

முந்திய சுலோகத்தில் சொல்லியது போல, புகை இரவு கிருஷ்ண பக்ஷம் தட்சிணுயநம் முதலியவைகள் அவற்றிற்குரிய அபிமானி தேவதைகளின் அதீனத்தில் இருக்கும் மார்க்கத்தைக் குறிக்கும் இதைத் தூமாதி மார்க்கம் என்று கூறுவதுண்டு இவ் வழிச் சென்று சுவர்க்கம் அடைந்து திரும்புவோர் கரும யோகிகள் என்று சிலர் சொல்வதுண்டு.

ஆனுல் ஒருவன் செல்லும் மார்க்கம் அர்ச்சிராதி மார்க்கமா? தூமாதிமார்க்கமா? என்பது அவன் மரண கால நினேவைப் பொறுத்த விஷயம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

'நண்டாண்டம்மா இருந்துண்டு நீ வர வர ரொம்ப வாயரட்டலா போயிட்டெ. பேசாமே வாயை மூடிண்டு சாப்பிடபோறயா, இல்லேயா?
"வாயை மூடிண்டா எப்படிம்மா சாப்பிடமுடியும்...?!!

1984 சென்னை 600 008